வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

1̇94 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 ஆடி திங்கள் 19-ம் நாள் (4—8—1963) ஞாயிற்றுக்கிழமை ரபி. அவ் 13 | இதழ் 10

மில்க்வைற் நீலசோப்




பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

## அரச கரும மொழி திணைக்களத்தின்

# தமிழ்ப் பிரிவை ஒழிக்க திட்டம்



தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் முதல் வெளியீடான 'ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள்' என்ற தொகுப்பில் இடம் பெற்ற கதைகளின் ஆசிரியர்களான திருவாளர்கள் முத்து சிவஞானம், நவம், செம்பியன் செல்வன், செங்கை ஆழியான், சிற்பி ஆகியோர் நிற்பதையும், நூலின் முதற் பிரதியை மன்றத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களிடமிருந்து திருமதி புனிதவதி திருச்செல்வம் பெற்றுக்கொள்வதையும், நூலை மதிப்புரை செய்து உரையாற்றிக் கொண்டிருக்கும் அகில இலங்கை எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. தேவன்—யாழ்ப்பாணம் அவர்களையும் காண்க.

## மான்யத்தை நிறுத்தி தமிழ் அழிக்க முயற்சி

அரசகரும மொழித் திணைக்களத்தின் தமிழ்ப் பிரிவுக்கான செலவுத் தொகையில் அரசாங்கத்தின் இவ் வருட வரவு செலவுத் திட்டம் கைவைத்துள்ளது. இதுவரை காலமும் இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த பணம் இவ்வருடத்திலிருந்து ஒதுக்கப் படப் போவதில்லை. அரசகரும மொழித் திணைக்களத்தின் தமிழ்ப் பிரிவையே ஒழித்துக் கட்ட அரசாங்கம் திட்டமிட்டுள்ளது வெளிப்படையாகத் தெரிகிறது.

இப்பகுதியை ஒழித்துக் கட்டுவதன் மூலம் தமிழ் மொழிக்கும், தமிழ் பேசும் இனத்துக்கும் பாரதூரமான துரோகத்தை ஆளும் கட்சி புரிகிறது.

தமிழ் மொழியையும் தமிழ் பேசும் மக்களையும் தமிழ் அரசாங்க ஊழியர்களையும் ஒழித்துக் கட்டும் திட்டத்தில் அரசாங்கம் காட்டும் தீவிரத்தை இது வரை காலமும் அம்பலப் படுத்தி வந்தோம்.

அரசாங்கத்தின் தமிழ் ஒழிப்பு நடவடிக்கைகளை நூற்றுக்கு நூறு வீதம் ருசுப் படுத்தும் வகையில் இம்முறை அரசாங்கம் வெளியிட்டிருக்கும் 1963—64-ம் ஆண்டுக்கான வரவு செல

(9-ம் பக்கம் பார்க்க)

## சிங்களம் தெரியாதவன் 'கள்ளத்தோணி'

### சுட்டுக் கொல்வதே சிறந்த வழியாம்

'சிங்களம் தெரியாத எவனும் இந்த நாட்டவனல்ல. அவன் கள்ளத்தோணி. சிங்களம் தெரியாத ஒருவனை இந்த நாட்டிலிருந்து உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும், அல்லது சுட்டுக்கொல்ல வேண்டும்'. இவ்வாறு ஒரு அரசாங்க இலாகாவில் தீவிர சிங்களத் திணிப்புப் பிரசாரக் கூட்டத்தில் பேசிய ஒரு பிரமுகர் கூறியிருப்பதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

அரசாங்க இலாகாக்களில் தீவிரமாகச் சிங்கள மொழித் திணிப்பை அமுல் நடத்துவதற்கு ஏற்ற வழி வகைகளை ஆராயும் பொருட்டு அவ்வவ்விலாகாவைச் சார்ந்த சிங்கள ஊழியர்கள் கூட்டங்கள் கூடியும், பிரசாரங்கள் நடத்தியும் முயற்சிகள் எடுத்து வருகின்றனர். அண்மையில் அரசாங்க வங்கி ஒன்றின் சிப்பந்திகள் நடாத்திய ஒரு பிரசாரக் கூட்டத்தில், 1960ம் ஆண்டு மார்ச் மாதத்தில் சட்ட விரோதமான வகையில் தமிழர்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று கவிதைகளை வெளியிட்டுக் குற்றவாளிக் கூண்டில் ஏறிய ஒருவரும், சிங்கள ஜாதிக சங்கத்தைச் சேர்ந்த ஒரு தேரோவும், ஒரு சிங்களத் தினசரியின் ஆசிரியர்களுள் ஒருவரும் சொற்பொழிவாற்றியிருக்கின்றனர் என்று தெரிகிறது.

"இந்த நாட்டில் உலவும் சிங்களவரல்லாத எவரையும் சந்தேகிக்க இடமுண்டு. எவருக்குச் சிங்களம் பேசத் தெரியவில்லையோ, அவர் நிச்சயமாகக் கள்ளத்தோணிக்காரர் அத்தகைய எவரையும் சும்மா விடக்கூடாது.

சிங்கள மொழியில் கேள்வி கேட்டு, அதே மொழியில் பதில் சொல்லத் தெரியாத எவரும் இந்த நாட்டின் சட்டப்படி பிரஜையாக மாட்டான். ஆகவே அவனை உடனடியாக நாடு கடத்த வேண்டும். இன்றேல் சுட்டுத்தள்ள வேண்டும்.

(9-ம் பக்கம் பார்க்க)



ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி

## "விழிப்புணர்ச்சியின்றேல் நாம் நசுக்கப்படுவோம்"

### மூதூர் முதல்வரின் மீலாத் செய்தி

இலங்கையிலுள்ள சகல சமூகத்தவர்களும் தங்கள் தற்கால, வருங்கால நிலை குறித்து மிகக் கரிசனையுடனிருக்கும் இவ் வேளையில், முஸ்லிம்களும் மிக்க விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறு சுதந்திரன் வாசகர்களுக்கு அனுப்பியுள்ள மீலாத்தினச் செய்தியில் மூதூர் முதல் பிரதிநிதி ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி கூறுகிறார்.

ஜனுப் முகம்மதலி இச் செய்தியில் மேலும் கூறுவதாவது: 'சத்திய சன்மார்க்கம் தழைக்கப் பாடுபட்ட பெருமானார் முகம்மது நபி (ஸல்) அவர்களது புரட்சிகரமான சரித்திரத்திலிருந்து, தியாகமின்றி எதிர்காலமில்லையெனும் மாபெரும் உண்மையை முஸ்லிம்கள் உணர வேண்டும். இதில்

(9-ம் பக்கம் பார்க்க)




சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# மத மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்ட சர்வமத சமரசஞானி பாரதி

# 'உண்மையின் பெயர் தெய்வம்' என்ற உயர்ந்த தத்துவத்தை ஈந்த மகாகவி

மகாகவி பாரதியின் பாடல்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவருக்குப் புகழைத் தேடித் தந்த தேசிய கீதங்கள் முதற்கண் வைக்கத்தக்கன. நீளத்தில் குறைவாயும் தனிப் பெருந் தலைவனைக் கதாநாயகனுகவும் இல்லாதிருந்தும் தரத்திலும் சுவையிலும் உலக மகா கவிகளின் காவியங்களுக்கு நிகரானவை என்று அறிஞராற் போற்றப்படுவனவும் பாரதியை மகாகவி ஆக்கியதுமான பாஞ்சாலி சபதம், குயிற் பாட்டு ஆகியன இரண்டாவது பிரிவில் வைக்கத்தக்கன. அடுத்து சமய சம்பந்தமாக அவர் பாடிய பாடல்கள் இடம் பெறுகின்றன. பாரதியின் மொத்தப் பாடல்களில் கிட்டத்தட்ட அரை வாசிக்குமேல் . சமய சம் சம்பந்தமான பாடல்கள் தான். தேசிய கவி "சமயி" ஆகவே தோற்றமளிக்கிருர்.

### பாரத நாட்டு கவிதை மரபு

பாரதி சமயி ஆகத் தோன்றுவதற்குக் காரணம் பாரத நாட்டுக் கவிதை மரபுதான் என்ருல் அது மிகையாகாது. புலன் இன்பத்தைத் தூண்டி மயக்கும் கள்ளாகவும் சமுதாய அழுக்கை எரிக்கத் துடிக்கும் பிரசாரத் தீயாகவும் பாரத நாட்டுக் கவிதை நின்றுவிடவில்லை. புலன் அறிவு இவற்றிற்கு அப்பால் உள்ள உண்மை ஒன்ருேடு புலனையும் அறிவையும் பிணைப்பது எப்படி, அந்த உண்மைதான் என்ன என்று காட்டுவதும் கவிதைப் பண்பாகத் திகழ்கிறது என்பர் அறிஞர். இதைத்தான் பாரதியாரும் 'கள்ளையும் தீயையும் சேர்த்து — நல்ல காற்றையும் வானவெளியையும் சேர்த்து தெள்ளு தமிழ்ப் புலவோர் — பல தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்' என்று குறிப்பிட்டார். இவ்வடிகளுக்கு வியாக்கியானம் செய்யும் அறிஞர்கள் "காற்றையும் வானவெளியையும்" அந்த "உண்மை"க்கான குறியீடுகள் என்பர். பாரதி அந்த உண்மைதான் என்ன என்று காட்டுவதற்காகவே சமய சம்பந்தமான பாடல்களைப் பாடினுர் எனலாம்.

### கவி உள்ளம்

ஆனுல் பாரதியின் சமய சம்பந்தமான கவிதைகளைப் படிக்கும்போது அவரின் சமயக்கொள்கை பற்றி ஆசங்கை எழுவது இயல்பு. அவர் பாடாத தெய்வமுமில்லை கேளாத வரமுமில்லை. சில சமயம் அவர் ஒரு சடங்குச் சமய வாதியோ என்றுகூடக் கேட்கத் தோன்றும். ஆனுல் ஆழ்ந்து ஆராய்ந்தால் கவியுள்ளத்தைக் காணலாம். அங்கே சமயத்திற்கோ தெய்வங்களுக்கோ இடமிராது. பாரதி வெளிப்படையாகத் தெய்வங்களைப்பற்றிப் பாடியிருக்கும்போது அப்படிக் கூறலாமா? பாரதி கூறியது போன்று அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும் ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண முடியாதவர்கள்தான் அப்படிக் கேட்பார்கள். "உண்மையின் பேர் தெய்வம் என்போம் — அன்றி ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்", "ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்" என்னும் அடிகள் எம்மைச் சிந்தனுலோகத்திற்கு அழைத்துச் சென்று அவரின் சமயக் கொள்கையை அறிய உதவி புரிகின்றன.

### பொருள் ஒன்றுதான்

பாரதி பல தெய்வங்களைப் பற்றிப் பாடியது புதுமையான காரியமல்ல. தெய்வத்தின் பெயர்கள் முதலியன வெறும் சாதனங்கள் என்றும் பெயர் பலவாயிருந்தாலும் பொருள் ஒன்றுதான் என்றும் தத்துவ ஞானிகள் கூறுவர். இதனை

ஏகமூர்த்தி இரு மூர்த்தி
மூன்று மூர்த்தி பலமூர்த்தி
யாகி ஐந்து பூதமாய்
இரண்டு சுடராய்
அருவாகி

(15-ம் பக்கம் பார்க்க)

மணிமொழியாளன்

# பொதுவுடைமைப் பிளவும் உலக நிலையும்

பூர்வதேசக் கொம்யூனிச உலகத்தில் ஏற்பட்டுள்ள அடிப்படைக் கொள்கைப் பிளவு வலுவடைந்து வருகிறது. ருஷ்யாவில் குருஷ்சேவ் பதவிக்கு வந்ததும், அவருக்கு முன் தலைமைப்பீடத்திலிருந்தவரும், ருஷ்யாவின் வளர்ச்சிக்கு ஆதி காரணராக இருந்தவருமான ஸ்டாலினையும், அவர் கடைப்பிடித்த கொள்கைகளையும், நடைமுறைகளையும் உதாசீனம் செய்யத் தலைப்பட்டார்.

ஸ்டாலினிசப் பாதையிலே புரட்சியின் அடிப்படையில் சென்று கொண்டிருக்கும் சீனர்களுக்கு ருஷ்யாவின் குருஷ்சேவிசப் போக்குப் பிடிக்கவேயில்லை. உலகனைத்துமுள்ள பொதுவுடைமைவாதிகள் ருஷ்யப் பக்கமும், சீனப் பக்கமுமாகப் பிளவுபட்டுக் கொண்டிருக்கிருர்கள்.

இலங்கையிலும் இந்தப் பிளவு நோய் வெகுவாகப் பரவி விட்டுள்ளது. சீனச் சார்பும், ருஷ்யச் சார்பும் ஒன்றை ஒன்று மோதிக்கொண்டுள்ளன. கொம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளிருக்கும் சீனச் சார்புடைய குழுவை ருஷ்யச் சார்புக் குழு துரத்திவிடவும் கூடும். ஆனுல் சீனச் சார்புடையோரிடம்தான் தொழிற் சங்கம் இணைந்து கிடக்கிறது.

இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையைப் பக்கபலமாக வைத்துக்கொண்டு ஒரு பொது வேலைநிறுத்தத்தை ஏற்பாடு செய்துவிடவும் சீனச் சார்புடைய குழு முனைந்து கொண்டு வருகிறது.

**இலங்கையில் பொது வேலை நிறுத்தம் ஆரம்பிக்கும் பட்சத்தில், அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்படுவதுடன், செய்தித் தணிக்கையும் ஏற்படுத்தப்படலாம் என்றும் எண்ணக் கிடக்கிறது.**

தூரகிழக்கு, மத்தியகிழக்கு ஆகிய பிரதேசங்களிலுள்ள சீனச் சார்பு பொதுவுடைமைவாதிகள் தத்தம் தேசங்களில் நெருக்கடி நிலைமையை உண்டாக்க இப்பொழுது இரகசியமாக முயற்சிகள் எடுத்துவருவதாக அந்தரங்கச் செய்திகள் கூறுகின்றன. தூரகிழக்கிலும், மத்தியகிழக்கிலும் நெருக்கடி உருவாகும்போது, திடீரெனச் சீன மீண்டும் இந்தியா மீது பாய்வதற்கான ஆயத்தங்களைச் செய்து வருவதாகவும் நம்பப்படுகிறது.

இந்தியாவின் மீது சீன பாய்கின்ற அதேவேளையில் காஷ்மீர்த் தகராறை ஆதாரமாக வைத்துக் கொண்டு பாகிஸ்தான் இந்தியா மீது தன் தாக்குதலை ஆரம்பிக்க முன்னேற்பாடுகள் செய்து வருவதாகவும் விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

1964 ஜனவரியில் எப்படியோ மத்தியகிழக்கும் தூரகிழக்கும் (இலங்கை உட்பட), கொந்தளிக்கும் நிலையில் அவதிப்படக்கூடும் என்று ஹேஷ்யங்கள் கூறப்படுகிறது.


## 'சுதந்திரன்'

### புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.

ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி
'சுதந்திரன்'


## கவிதைப் பூங்கா

# வாழ்க்கை நெடுங் கணக்கே!

—''சத்தியசீலன்''—

பருவக் கிளர்வின் கூட்டல்
பார்வைக் குழைவின் கூட்டல்
உருவப் பொலிவின் கூட்டல்
உளப் புத்துணர்வின் கூட்டல்
இனிமைக் கனவின் கூட்டல்
இதயக் கதையின் கூட்டல்
தனிமைத் துயரை ஓட்டும்!
தமிழில் எழுதின் "காதல்"

(அதுதானே)

இருகூர் விழிகள் முட்டி
இதயக் கதவை தட்ட
வருநாண் சிறையுந் தாண்டி
வந்த அவளின் காதல்
பெரியார், 'முறைமை', மற்றும்
பெற்ருர் சுற்றம் கூட்ட
அரிதோர் மணமென் ருகும்
அதில்,இவ் வுலகம் வாழும்!

(அதுகாலை)

கன்னங் கன்னங் கூட
களிஅவ் விழியில் ஆட
"இன்னும் இன்னும்" என்று
இதயக் கதைகள் நீட
பின்னம் எனவே ஒன்றின்
பிரிப்பில் உறுப்பாய் ஜீன்றித்
தன்னந் தனியர் என்ற
தருக்கில் இன்பப் பெருக்கல்!

வாழ்க்கைச் சுவைப் பெருக்கல்!
வயிற்றிற் மகற் பெருக்கல்!
வாழ்க்கைச் சுமைப் பெருக்கல்!
வயதின், நரைப் பெருக்கல்!

ஒத்தோர் தினக் கழித்தல்
உதயம் உயிருக் கென்பார்!
பத்தாம் மதிக் கழித்தல்
பாலன் பிறப்பாம் என்பார்!

இளமைக் கழித்நல் கண்டு
இவளைக் குமரி என்பார்!
அழகிற் கழித்தல் கண்டு
அவளைக் கிழவி என்பார்!

விடலை தனைப் பிரித்தல்
'வினை'யென் றவள் இனைவாள்!
உடலை உயிர்ப் பிரித்தல்
உலகிற் கொடுமை என்பார்!

புதுமை பிரித்தல் செய்ய
பொல்லென்ருேர் கால் கையில்!
முதுமை பிரித்தல் செய்ய
மூச்சற்று மெய்தரையில்!

(எனவாங்கு)

"கூட்டிப் பெருக்கிப் பின்னர்
குறுக்கிக் கழித்து நம்மை
ஆட்டும் இயற்கை" என்பார்!
"அடபொய்! கடவுள்" என்பார்.
கூட்டிக் கழித்தால் வாழ்க்கை
குறைவில நெடுங் கணக்கே!
பாட்டுத் தமிழிற் சொல்லிப்
பருகத் தகுங் கணக்கே!

# கவிதை நெஞ்சம்

—யூ. எல். தாவூத்—

என்ற னுள்ளம் வதைத்திட்ட
இழிய மனத்து மன்பதியை
என்றும் நோக்கேன் மன்னவனே
என்ற னில்லம் நாடிட்டால்
மின்னுர் கலையின் கவியமுதை
மீண்டு மீவேன்; கோதுற்ற
அன்னேன் நாடு செல்லேனென்
அறைந்தார் கவிஞர்; கோன்சொன்னுன்:

உன்ற னுள்ள மூறிவரும்
உணர்ச்சிக் குவையை எழுதுதற்கு
நினைப்பின் வார்த்தை கிடைக்காது;
நெஞ்ச மேறி வருகின்ற
இன்ன லறுக! அவனேயுன்
இல்லம் நாடச் செல்வேனென்
சொன்னுர் தபுரிஸ்தான் மன்னர்
துன்பு குறைந்தார் கவியன்னல்.

(தொடரும்)




க. பாலச்சந்திரன்,
கட்டுகாஸ்தோட்டை

கே: நீங்கள் ஸ்ரீமாவுக்கு மன்றுட்டக் கடிதம் எழுதினதால்தான் சிம்மாசனப் பிரசங்கத்தைத் தமிழிலும் வாசித்ததாக எனது நண்பன் கூறுகிறன். இது உண்மையா?

ப: உண்மையன்று. தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்து நடத்தும் உரிமைப் போராட்டத்தின் விளைவே அது.

ஃ

மு. நல்லையா, மீசாலை

கே: சிவபெருமானுக்கும் சிட்டுக்குருவிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்குமுள்ள வித்தியாசம்!

ஃ

ஆர். சுந்தர், கேகாலை

கே: பெண்கள் ஆண்களுடன் பேசும்போது தரையைப் பார்த்த வண்ணம் பேசுகின்றனர். அதன் மர்மம் என்ன?

ப: தரையைப் பார்த்துக் கொண்டிருந்தால் தானே, பார்க்க வேண்டிய இடங்களைப் பார்த்துக்கொள்ள ஆணுக்கு இடமளிக்க முடியும். இல்லையேல் பெண்ணின் முகத்தைப் பார்த்துக் கொண்டல்லவா பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்!

ஃ

வி. கே. இராமலிங்கம்,
மாத்தளை

கே: மலைநாட்டுத் தலைவர்கள் என்போர் ஒவ்வொருவரும் தனித்தனியே செயல்படுகிருர்களே, பாதிக்கப்படுபவர்கள் யார்?

ப: அவர்களே தான்—ஏனெனில் தங்களின் தலைமையைப் பாதுகாக்கவே அவர்கள் தனித் தனியாகச் செயல்படுகின்றனர் என்பது மலையக மக்களுக்குத் தெரிந்து விட்டது. இறுதியில் அவர்களுக்கு மிஞ்சுவது அவர்களின் தலை மட்டுமே. மலையக மக்கள் அவர்களைக் கைவிடுவர்.

கே: மலைநாட்டாருக்குப் பிரஜா உரிமை கிடைக்காததற்கு யாழ்ப்பாணத் தலைவர்கள் தானே காரணம்?

ப: அல்ல— யாழ்ப்பாணத் தலைவராக இருந்த ஒரே ஒருவர் காரணமாயிருந்தார். அந்தத் துரோகத்துக்காக அவரின் தலைமைப் பதவியை யாழ்ப்பாண மக்களே பறித்துக்கொண்டு, அரசியல் அரங்கத்திலிருந்தே அவரை விரட்டி அடித்துவிட்டனர்.

ஃ

'வடலூரான்', அனலை நகர்

கே: கடவுள் மனிதனுக்கு என்ன காரணத்தின் பொருட்டு ஆசைகளை உண்டாக்கினுன்?

ப: மனிதனை வாழவைக்க- உயிர் மீது ஆசையின்றேல் உயிர்வாழ முடியாதல்லவா?

கே: தற்கால நவ நாரிமணிகள் ஏன் நைலோன் உடுப்புகளை அணிய விரும்புகிருர்கள்?

ப: "ஆ" என்று வாயைப் பிளக்க ஆண்களுக்கு உதவுகிறது பெண்கள் அணியும் நைலோன் உடை. அதனூடாக ஊடுருவி நாரிமணிகளின் உடலின் நயத்தைப் பருகலாமல்லவா?

கே; தமிழரசுக் கட்சியின் அடுத்த நடவடிக்கையென்ன? அது எப்போது ஆரம்பமாகும்?

ப; அடுத்த நடவடிக்கை, எப்போது ஆரம்பமாகும் என்ற பிரச்சினையே கிடையாது. தொடக்கம் முதல் இறுதி வரை ஒரே நடவடிக்கைதான். அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது.

ஃ

டீ. கே. மாடசாமி, தோ.க. காரியதரிசி, மடுல்கெல, ப.க.

கே: இலங்கையிலே வசிக்கும் சிங்களவர்களுக்கு மட்டும் உத்தியோகம் வழங்கவேண்டுமென்று இலங்கை அரசாங்கம் தீர்மானித்து இருக்கிறதே. மலைநாட்டுத் தமிழர்கள் படித்தும் பிரஜா உரிமை இல்லாமல் இருக்கிருர்களே, இவர்களின் கதி...?

ப: அவர்கள் பிரஜாவுரிமை பெற்றேயாக வேண்டும். இல்லையேல் செத்து மடிய வேண்டும். "பெறு— அல்லது செத்து மடி!"

ஃ

எம். எம். எகியா,
பெரிய கிண்ணியா

கே: கிண்ணியாப் பகுதியில் ஒரு 'மஞ்சள்' பத்திரிகை பணமில்லாது விநியோகம் செய்யப்பட்டு வருகிறதே, அதே போன்று 'சுதந்திரன்' பத்திரிகையையும் பணமில்லாது கிண்ணியாப் பகுதியில் விநியோகம் செய்வார்களா?

ப: விலைக்கு வாங்குவதற்குக் கூட "சுதந்திரன்" கிடைப்பது அரிதாகி விட்டதே! இந்நிலையில் இலவசமாக விநியோகிக்கப் பத்திரிகை ஏது?

ஃ

வி. சண்முகலிங்கம்,
பலாங்கொடை

கே: தானும், குயுக்தியாரும் ஒன்றுதான் என்று கூறி ஒரு குருவியார் ஒரு தமிழ்த் தினசரியில் சனி தோறும் பதில் கொடுத்து வந்தாரே, அவர் கதி என்னவாயிற்று?

ப: 'அதோ கதி' ஆகும் நாள் அண்மிவிட்டதாம்!

ஃ

எம். ஐ. அப்துல் ஜவார்,
பெரிய கிண்ணியா

கே: மண் கவ்விய மாஜிப் பிரதிநிதிகளும், குமாரசாமியும் பிரதமரிடம் சென்று மகஜர் சமர்ப்பித்தார்களாமே! மகஜரில் தனது ஒப்பந்தத்தை மட்டும் போட்டுவிட்டு, சமூகம் கொடுக்காமல் முள்ளிப் பொத்தானைக்குச் சுற்றுப்பிரயாணம் செய்தாராம் மூதூர் இரண்டாவது பிரதிநிதி மஜீத். இதன் மர்மம் என்ன என்பதைத் தங்களால் சொல்ல முடியுமா?

ப. முதுகெலும்பில்லாதது தான் மர்மமோ? 'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்' வித்தையை நீண்ட நாள் காட்ட முடியாது!

ஃ

லெ. வே. சாம்பசிவம்,
கந்தளாய்

கே: வருகிற தேர்தலில் எந்தக் கட்சி அரசாங்கக் கட்சியாக வருமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

ப: தேர்தலில் அதிக ஸ்தானங்களைக்கைப்பற்றும் கட்சிதான்—இதில் சந்தேகமே வேண்டாம்!

ஃ

வி. ஏ. எஸ். ஹமீது,
சாவகச்சேரி

கே: திருமணம் செய்யாததற்கு முன் மதுபானம்அருந்தாதவர்கள் திருமணம் முடிந்து சில நாட்களுக்குப் பின்பு மதுபானம் அருந்துகிருர்களே! ஏன்?

ப: மங்கையின் இன்ப, துன்பத் தொல்லைகளைச் சமாளிக்க மது மயக்கம் தேவை எனச் சிலர் கருதுவதுதான் காரணம்.

ஃ

எம். எஸ். அப்துல்லா,
கிண்ணியா

கே: மூதூர் இரண்டாவது பிரதிநிதி மஜீத், அடுத்துவரும் பொதுத் தேர்தலில் முதல் பிரதிநிதியின் ஆசனத்தை எடுப்பாரென அவருடைய ஆதரவாளர்கள் கூறுகிருர்களே!

ப: முதலாவது பிரதிநிதியின் வீட்டில் அவர் அமரும் ஆசனத்தை எப்படியோ எடுத்து வரத் திட்டம் போட்டிருக்கிருர்களோ!

ஃ

சிவம், களுவாஞ்சிகுடி

கே: ஐக்கிய இடதுசாரிகள் முன்னணியில் மொழிக் கொள்கை பற்றிப் பிளவு உண்டாமே! ஏன்?

ப: சமசமாஜக் கட்சி மொழிக் கொள்கையை மாற்றிக் கொண்டதால் பிளவு தவிர்க்கப்பட்டதாம்.

ஃ

ஜெயகுமாரன்,
பருத்தித்துறை

கே: 'அழுவதும் பெண்ணுலே, அழிவதும் பெண்ணுலே' இது உண்மையா?

ப: உண்மையே—உதாரணம்: இலங்கை.

ஃ

க. தமிழ்ச் செல்வன்,
பா,தமிழ்ச்செல்வி, கொழும்பு-14

கே: கொழும்பு மத்திய தொகுதியில் தமிழரசுக் கட்சி தமிழரசு அபேட்சகர் ஒருவரை நிறுத்தும் என்று இங்குள்ள தமிழர்கள் பேசிக் கொள்கிருர்களே, இது உண்மையா?

ப: பொதுத் தேர்தல் சமயத்தில் முடிவு செய்யவேண்டிய விஷயம் இது. சதா தேர்தலைப் பற்றி சிந்தித்து அதற்காகத் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கும் கட்சியன்று, தமிழரசுக்கட்சி.

ஃ

சி. பாலசுந்தரம்,
அளுக்குவத்தை, வதுளை

கே: முன்னேறுவதற்கு முட்டாள்தனமும் தேவையா?

ப: முன்னேறத் துணிச்சல் வேண்டும். முட்டாளுக்குத் துணிச்சல் அதிகம்!

ஃ

செ. அமரசிங்கம்,
வண்ணர்பண்ணை

கே: சில பெண்கள் பவுண் நகைகள் அணிவதற்குப் பதிலாக 'கிலிற்' நகைகளை அணிந்து தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிருர்களே, ஏன்?

ப: தங்கள் கருத்து தவறு. கில்ற் நகை என்பதுதான் அணிபவர்களுக்குத் தெரியுமே! எனவே ஏமாறுபவர்கள் ஆண்களேயன்றி அவர்களல்ல.

ஃ

ஆர். ஏ. சற்குணம்,
நாராங்கல்லை

கே: 17 ரூபா 50 சதம் விசேட அலவன்ஸ் பெறுவது சம்பந்தமாக ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் கூட்டிய மகாநாட்டில் இ. தொ. கா. பங்குபற்றுத காரணம் என்ன?

ப: இ. தொ. கா. தலைவரின் தோட்டங்களிலும் 17-50 கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுமே என்ற பீதிதான் காரணம்!

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

தமிழரசு அபிமானி,
கிளிநொச்சி.

கே: தங்களைச் சிலர் ஒரு "கள்ளத்தோணி" என வர்ணிக்கின்றனர். இதைத் தாங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?

ப: இலங்கை வாழ் தமிழர் எல்லோரையும் "கள்ளத் தோணி" என்று கூறத் தொடங்கிவிட்டனர் சிங்கள வகுப்புவாதிகள். நீரும் அந்தக் கும்பலைச் சேர்ந்தவரா?

ஃ

இ. விசாகரெத்தினம்,
திருகோணமலை.

கே: தேசியம் தேசியம் என்று சொல்லிக் கொண்டு இலங்கை அராஜகத்தை நோக்கிப் போகிறதே! இதிலிருந்து மீட்சியே கிடையாதா?

ப: தேசியத்தில் இருவகை உண்டு. ஒன்று பரந்த தேசியம், மற்றது குறுகிய தேசியம். குறுகிய தேசியத்தின் முடிவு எதேச்சாதிகாரமே. மக்கள் செயலில் இறங்கினுல்தான் அதனின்று மீள முடியும்.

கே: அடுத்த பொதுத் தேர்தலின் பின்பு ஸ்ரீமாவோவுக்கு என்ன பதவி கிட்டும்?

ப: புரியாத அரசியலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு அமைதியாகத் தன் குடும்பத்தைக் கவனிக்கும் பொறுப்புக் கிட்டும்.

# காலம் அழைக்குதடா!

கவிஞர் கா. சி. ஆனந்தன்

மானம் எனும் ஒரு பானையில் வாழ்வெனும்
[illegible] தினி சமைத்தவனே! — தமிழ்
போனதடா! சிறை போனதடா! அட
பொங்கி எழுந்திட டா!

காட்டும் தமிழ் மறம்! ஒட்டு வரும்பகை!
பூட்டு நொறுக்கிடுவாய்! — நிலை
நாட்டு குலப்புகழ்! தீட்டு புதுக்கவி!
ஏற்று புலிக் கொடி யே!

நூறு பிணக்களம் நூறு படித்தநம்
வீறு மிகுத்தகுலம் — பெறும்
ஊறுதுடைத்திடு மாறு புறப்படு!
ஏறு நிகர்த்த வனே!

மூந்து தமிழ்மொழி நொந்துவதைபட
இந்தி வலம் வரவோ? — இது
நிந்தை! உடன் உயிர்தந்து புகழ்பெறு!
வந்து களம் புகுவாய்!

நாலு திசைகளும் ஆவு, நடுங்கிய
கோழை எனக் கிடந்தாய்! — மலைத்
தோளும் குனிந்தது போலும்? விழித்தெழு!
காலம் அழைக்குதடா!

("உயிர் தமிழுக்கு" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)

சுதந்திரன், கல்கி, தினகரன், கலைச்செல்வி, உதயம் ஆகிய பத்திரிகைகள் நடாத்திய சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்ற, ஈழத்து இலக்கிய வானில் சுடர் விடும் தாரகைகளாக விளங்கும் ஒன்பது பேரின் எழுத்தோவியங்களைக் கொண்ட தெவிட்டாத தீங்கனிச் சோலையாக, தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் முதல் படைப்பாக வெளிவந்துள்ள,

ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள்

என்னும் சிறுகதைத் தொகுப்பு விற்பனைக்குண்டு.

- தனிப்பிரதிகள் வேண்டுவோர் தபால் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.
- விற்பனையாளர்களுக்கு விசேட கழிவு உண்டு.

தனிப்பிரதி: ரூ. 2.00, தபால் செலவு சதம் 50

விபரங்களுக்கு:-




58, உருத்திரா வீதி,
கொழும்பு-6

# அஞ்ஞான இருளில் ஓர் ஒளிப்பிழம்பு

## ஞாலத்தை வாழ்விக்க வந்த மகான் முகம்மது நபி (ஸல்)

வாழப் பிறந்தவன் மனிதன். வாழ்விக்கப் பிறந்தவனும் மனிதன். ஆனால் இரண்டாவதாகத் திகழ்பவனே மனிதனின் மகாத்மா. இந்த மகாத்மாக்களில் பலவகையுண்டு. வாழ்விக்கப் பிறந்த மனிதரில் சிலர் தம்முடன் ஒரு கூட்டத்தை மாத்திரம் சேர்த்துக் கொள்வர். வேறு சிலர் தமது கொள்கைக் கேற்றதோர் சமூகத்தை ஏற்படுத்துவர். மறு சிலர் ஒரு தேசத்தையே தமக்குப் பின்னால் வைத்துக் கொள்வர். ஆனால் ஒரு உலகத்தையே ஒருவருக்குப் பின்னால் நிறுத்தி வைத்தவர்களைச் சரித்திரம் தொகை தொகையாகத் தராது ஒருவரையேதந்தது; அவர்தான் அண்ணல் முகம்மது நபி (ஸல்) எனப் பகர்கிறது.

### சமூகத் தொண்டு

சமூகப் பற்றுக்கு இறை நம்பிக்கை அச்சாணி. ஆனால் அந்த மூலவேரில் பலர் பல விநோதங்களைக் கையாண்டு—ஆத்மீகத் துறைக்கு முற்றிலும் முரண்பாடு காணும் வகையில் வழிபடத் தொடங்கினர். இதன் பயனாக அன்று நபி முகம்மது (ஸல்) வாழ்ந்த அராபிய நாட்டினில் சமூக ஒற்றுமையோ — இன ஒருமைப்பாடோ — தேச நம்பிக்கையோ காணக் கிடையாது, வலியவன், எளியவனை அடிமைப்படுத்தி — அவன் — தானே சர்வமும் எனக்கொண்டு, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற கொள்கைக் குடந்தையாகி வாழ்ந்தான். இதனால் நாட்டினில் பஞ்சமா பாதங்கள் படர்ந்தது, மோசக்காரர்களின் மூலையாகக் காட்சியளித்தது. இவற்றை யெல்லாம் ஒழித்துக் காணுமுகமாகத் தம்மைப் பிறர் மத்தியில் இவையாவுங் களைந்த

### ஐ. செய்பாது ஏ: மௌலானா

ஒருவராகக் காட்சியளித்தார் முகம்மது நபி. "தன்னைத் திருத்து, தரணி தானே திருந்தும்" என்ற மூல மந்திரத்தைத் தினமும் ஜெபித்து தன்னைப் பிறருக்கு அறிமுகப் படுத்தினர். இருளில் மூழ்கியிருந்த மக்கள் மத்தியில் ஓர் ஒளிப் பிழம்பு கிளம்பினால் யாராவது காணாது விடுவார்களா? அது போன்று அஞ்ஞான இருளில் மூழ்கியிருந்த மக்கள் மத்தியில் நபிகள் பிரான் அவர்கள் நடை-உடை-பாவனை அனைத்திலும் மிதந்த ஒளியைப் பலரும் கண்டு களிப்புற்றனர். நாட்டினரே "எங்கள் யாவரை விடவும் நம்பிக்கைக்குரியவர் முகம்மது ஒருவரே" என நாடும் — ஏடும் அறியப் பறை சாற்றினர்.

தம்மை உணர்ந்த மக்கள் இப்போது தாம் காட்டும் பாதையையும் பின்பற்றுவார்கள் என நாயகமேனி நம்பினார்கள். அதன் காரணமாக முதன் முதல் "ஒன்றே குலம் — ஒருவனே தேவன்" என்ற சமூக ஒற்றுமையின் உரிமைக் குரலை எழுப்பினார்கள். "யாதும் ஊரே — யாவரும் கேளிர்" என்ற பரஸ்பரத்தை ஓங்கரித்தார்கள். ஞாலத்திலுள்ள அத்துணை பேரும் சமம், என்று சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் போதித்தார்கள். "அருந்துங்கள்—சுவையுங்கள் — அனுபவியுங்கள்" என்ற அந்த அராபியச் சமூகத்தின் நாளாந்த சிற்றின்பகீதத்துக்குப் பதிலாக "வாழுங்கள் —வழிபடுங்கள் — வாழ்த்துங்கள்" எனும் தார்மீகத் தத்துவத்தை நாளும் வேளையும் ஓதுமாறு பணித்தார்கள். நான் கூறுபவை—நடந்து காட்டுபவை நல்லதெனக் கண்டால் எனக்கு ஆதரவளியுங்கள்; என்று மக்களை வேண்டினார்கள். ஆனால் அவற்றுக் கெல்லாம் அவர்கள் பெற்ற பரிசு; நயவஞ்சகச் செய்கைகளும் —நஞ்சுச் சொற்களேயாம். இன்முகங் காட்டி ஏற்று இன்னும் சிந்தித்துச் செயல்படுமாறு கோரினார்கள்.

### ஆண்டவன் அனுப்பிய அண்ணல்

ஒரு இனத்துக்கோ-குறிப்பிட்டதோர் நாட்டுக்கோ-சமூகத்துக்கோ இவர் திருத்தூதுவராக அனுப்பப்படவில்லை. அகிலம் அனைத்தினதும் தீர்க்கதரிசியாக—உலக மாந்தர்கள் அனைவரதும் மறுமலர்ச்சி வேந்தனாக அல்லாவால் அனுப்பப்பட்டார்கள். இதனாலன்றோ இவர்கள் ஒவ்வோர் செயலிலும் - சொல்லிலும் மனித குலமே - மானிடவர்க்கமே எனத் தமது முரசொலியை ஒலித்தார்கள். ஆண்டவனும் அங்ஙனமே அவர்களை 'நீர் உலக இரட்சகராகவே அனுப்பப்பட்டிருக்கிறீர்" எனச் செப்பினான். இதன் பயனாக சமயம் — இனம் — கீழ் மக்கள் —உயர் மக்கள் என்ற எதுவித பாகுபாடுமின்றி அனைவரும் ஆண்டவனின் சிருஷ்டிகள் என்ற ரீதியில் பழகினார்கள். அவர்களது பாசி படர்ந்த பாதையை நீக்க அரும்பாடு பட்டார்கள். இவர்களது வேண்டுகோள் ஒவ்வொன்றிலும் இறையின் இஷ்டம் கலந்திருந்தது. சர்வ ரட்சகனை ஆண்டவன் எது-எவைகளைச் செய்யுமாறு, சொல்லுமாறு அவர்களை வேண்டும் போதும் அவற்றையெல்லாம்இரண்டறக்கலந்தமுழு

(13-ம் பக்கம் பார்க்க)

### எதிர்வரும் நவம்பர்

கடந்த வாரம் முதற் பக்கத்தில் வெளியான 'விண்ணப்பங்கள் மறைந்த மாயம்' என்ற செய்தியில், அஞ்சல் நிலைய அதிபர்கள்தேர்வுக்கான விண்ணப்பங்கள் கடந்த வருடம் நவம்பரில் கோரப்பட்டன என்று இருப்பது தவறாகும். எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் அஞ்சல் நிலைய அதிபர்கள் தேர்வுக்கான விண்ணப்பங்கள் என்று திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.

ஆ—ர்.

## சந்தியில்....

அரசாங்கக் கட்சியுடன் ஒட்டுறவாடும் சிறுபான்மை இனத்தவரான மந்திரி ஒருவர் அரசாங்கத்தின் இன ஒழிப்பு நடவடிக்கைகளைத் தெரிந்திருந்தும் தெரியாதவர்போல் நடக்க வேண்டியிருக்கிறதாம்.

'இந்த அரசாங்கத்துடன் ஒட்டியிருப்பதனால், இனத்துக்கு மாபெரும் துரோகம் இழைத்து விட்டோம்' என்று வருங்காலத்தில் வருத்தப்படவேண்டியிருக்குமே என்றும், வருங்காலச் சந்ததியார் நம்மை வைவார்களே என்றும் ஒரு நண்பரிடம் வேதனையுடன் கூறினாராம்.

பொது வேலைத் திணைக்கள மேற்பார்வையாளர்களின் சங்கக் கூட்டம் அண்மையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. 70 வீதம் தமிழர்களைக் கொண்ட இந்தச் சங்கத்தின் கூட்டத்தில், தமிழரான சங்க உப தலைவர், சங்கத்தின் பெரும்பான்மையோரையே அவமதித்து, நாட்டின் • பெரும்பான்மையின் மொழியைப் பாவித்துத் தமது 'பெருமை'யை நிலைநாட்டிக் கொண்டாராம். அது மட்டுமல்ல. இந்தச் சங்கத் தலைவர்கள் அனைவரும் ஆளும் கட்சியின் தாசர்கள் என்பதைக் காட்டிக் கொள்ள நீல நிறத் துணியில் சங்க இலச்சினையைப் பொறித்துக் கொண்டனராம். சிங்கக் கொடியையும் வைத்துக் கொண்டனராம்.

கிராம சேவகர்கள் தெரிவு சம்பந்தமாக ஏராளமான புகார்கள் அடிக்கடி வெளியாகி வந்தன. பட்டிருப்புத் தொகுதியில்நடைபெற்ற கிராமசேவகர்கள் தெரிவையொட்டி நமக்குப்பல புதுச் செய்திகள் கிடைத்துள்ளன.

லஞ்சச் சனியனின் துணை கொண்டு கஞ்சிக் கலயம் சுமக்கலாம் என்று கருதும் சிலர், மக்களால் புறக்கணிக்கப்பட்ட, அரசியல் தெரியாத மூக்கறுபட்ட ஒரு அரசியல்வாதியை அண்டினராம். பாத பூசைக்காகப் பல்லாயிரக் கணக்கான ரூபாய்களைப் பணயம் வைத்தனராம்.

முடிவுகள் வெளியாகியதும் ஏமாற்றுக்கார எட்டப்பரின் வலைக்குள் சிக்கிய ஏமாளிகள் ஏமாற்றப்பட்டு விட்டதைக் கண்டு வெதும்பினராம். அவரை அண்டி ஆராய்ந்ததன் பேரில், அவருடைய அந்தரங்கம் வெளியாகியதாம்.

1960-ம் ஆண்டு டிசம்பரில் சி. பா. த. பத்திரப் பரீட்சை சித்தியெய்திய முஸ்லிம்களுக்கு மட்டுமே சில இடங்களில் ஆசிரியர் பதவி கொடுக்கப்பட்டது. 1961-ல் சித்தி யெய்திய தமது உறவினருக்கு ஒரு முஸ்லிம் எம்.பி. தொழில் தேடிக் கொடுத்து விட்டார். பொதுமக்கள் இதை அறிந்து கல்வி இலாகாவுக்கு அறிவித்ததும், ஆசிரியர் பதவியையும் இழந்து பெற்ற சம்பளத்தையும் திருப்பிக் கொடுக்க வேண்டி யேற்பட்டதாம், அந்த ஆசிரியருக்கு. பதவி தேடிக்கொடுத்த எம்.பிக்கு மானம் போய்விட்டதாம்.

—அம்மான்


விகார்பில்ஸ்



இளமையிலேயே நரம்புத் தளர்ச்சியினாலும் மற்றும் ஆண்மையின்மை ஏற்படுவதால் வெட்கப்படும் வாழ்க்கையில் வெறுப்புறும் கழியும் வாலிபர்களுக்கும் வயதானவர்களுக்கும் இழந்த வாலிபத்தன்மை திரும்பவும் பெற இம்மருந்தை ஒரு மாதம் சாப்பிட்டால் போதுமானது. மூத்திரக்கோளாறுகள் [illegible] மூலம் பவுத்திரம், [illegible] மை, மாதவிடாய்க் கோளாறுகள் [illegible] காமாலை பாண்டு, மூச்சு முட்டு, மலச்சிக்கல், முதலிய வியாதிகளைக் குணப்படுத்தி நிரந்தரமான ஆரோக்கியத்தை அளிக்கும் திறமையும் இம்மருந்துக்கிருக்கிறது.

விலை 30 மாத்திரைகள் ரூ. 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்

1. வி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
5. லீலா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
6. எஸ். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.
11. பரஞ்சோதி மருந்துசாலை, திருகோணமலை.
12. நாகலிங்கம் குரோசரி ஸ்டோர்ஸ், 208, வார்ட் பிளேஸ், பொரளை.

எஸ்.என்.குரு மெடிக்கல் ஹால்
80 புதுச்செட்டித் தெரு
கொழும்பு 13.


# பிறந்தகத்திற்கு வந்துற்ற வினை நீக்க ஒன்றுபடுவீர்

## பேராபத்தை நீக்க போர்ப்பறை கொட்டுவீர்

பண்டைக்காலந்தொட்டு பேரோடும், புகழோடும், சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த எம் அன்னைப் பூமி ஆதிக்க வெறி கொண்டலையும் அலங்கோல ஆட்சியால் அபகரிக்கப் படுகிறதைப் பார். ஈச்சிலம்பத்தை, அல்லைநகர், கந்தளாய் முதலிய இடங்களை கபளீகரம் பண்ண நடக்கும் முயற்சிகளைப் பார்!

விகாரைமணி ஓசை கேட்கும் இடமெல்லாம் அவர்களுக்குச் •சொந்தமாம் என்று விளம்புகிறதைக் கேள்!

சொந்த நாடிதென்று சிந்து பாடினோம். இன்று வந்து பாயும் குடியேற்ற வெள்ளத்தைக் கண்டு நொந்துபோய்த் தடுமாறுகின்றோம்.

உன் அன்னை பூமிக்கு வந்துள்ள அவல நிலையைப் பார்.

காலையில் எழுந்து கதிரவன் உதிக்குமுன் கலப்பை தோள் மேற் கொண்டு கழனி சென்று காலை முதல் மாலை வரை பாடுபட்டு களை பிடுங்கி, நாற்று நட்டு, கதிர் வெட்டி காசினியைக் காப்பாற்ற உணவை அளித்தாயே! அந்தச் சிங்கார வாழ்வைத் தானும் இனி மேல் உன்னால் நடத்த முடியுமா? முடியாது! முடியாது!! சொந்தமென்று கூறினாயோ வந்துவிடும் பங்கம்—கைக்குக் காப்பு—வாய்க்குப் பட்டு—இருட்டறை வயலுண்டு—அங்கே பயிருண்டு—அது தரும் அரிசியுண்டு—அதைக் கண்டு ஆனந்தங்கொண்டு வாழலாமென்று எண்ணியிருந்தாயே இனி உன்னால் அந்த வாழ்வைப் பெற முடியுமா?

### வந்து விட்டது ஆபத்து

மூதூர் வாழ் தமிழ் பேசும் பெருங்குடி மக்காள்! வந்துவிட்டது நமது நாட்டிற்கு ஆபத்து. எமது எதிர்ப்புக்களை ஏகோபித்து எழுப்புவோம், எது ஏற்படினும்

### அ. அங்ரனி

எதற்கு மஞ்சோம், என நெஞ்சம் தட்டுவோம். தோளோடு தோள் நின்று போராடுவோம். இப்படியான ஆபத்து நாம் வாழும் மூதூர் தொகுதிக்கு மட்டும் வருவதல்ல. தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களிலெல்லாம் நடக்கும்.

வீரத்திறன் காட்டி வில் புலிமீன் கொண்டு விந்தியத்தின் விளிம்புவரை வீரப்பரணிபாடிய இனம், இன்று வேதனைக்குள்ளாகி வெட்கப்பட வேண்டிய கட்டத்தை அடைந்துள்ளது.

சிங்கள வாழ்வைக் காண —சிறப்பான ஏற்பாடுகளைத் தேடி உலகுக்களித்த இனம் இன்று சிறிப்பாயும் இக் காலத்துக்கு அடிமையாகிச் சின்னாபின்னப்படுகிறது. கேவலம் தன்நிலை மறந்து, தன்மானம் துறந்து சிங்களத்தைப் படிக்கவும் துணிந்து விட்டது.

### காட்டிக் கொடுக்காதீர்

பிச்சைச் சம்பளத்தைப் பெற்று பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்ற இன்று சிங்களத்தைப் படிக்க ஆரம்பிக்கிறாயே! உனது அருமை மகன் நாளை தன்னிலை அறிந்த — தன் மூதாதை நிலை தெரிந்து 'அந்நியரிடம்' என்னை அடிமையாக்கினானே என் தந்தை" என்று ஏங்கி அலறுவானே! காறி உமிழ்வானே! அதை எண்ணியாவது நீ உன் இனத்தைக் காட்டிக் கொடுக்காதிருக்கக் கூடாதா?

எந்தப் பெரிய கலமானாலும் சிறு ஓட்டை இருக்குமானால் கடலில் அமிழ்ந்து விடுவதுபோல், எம்மிடையே ஒற்றுமையீனம் என்னும் ஓட்டை இருக்குமாகில் பௌத்த சிங்களம் என்னும் கடலுள் அமிழ்ந்திடுவோம்.

### ஓர் எச்சரிக்கை

எம் சமூகத்திடையே இருக்கும் எட்டப்பர்கட்கும் காக்கை வன்னியர்கட்கும் ஓர் எச்சரிக்கை. நீங்கள் வாழ வேண்டுமானால் வாழ்ந்து கொள்ளுங்கள், வால் பிடித்து காட்டிக்கொடுக்கும் கைங்கரியத்தை விட்டுவிடுங்கள். இல்லையேல் புருட்டஸ்,

(13-ம் பக்கம் பார்க்க)

# சுபீட்சம் தந்தவர்க்கு சூது செய்யலாகாது

## இந்திய வம்சா வளியினர் பற்றி தமிழ் பேசும் தலைவர்கள் உரை

இந் நாட்டைப் பொன் கொழிக்கும் பூமியாக்கிய இந்திய வம்சாவளியினரை நாடற்றவர்கள் என்று கூறி ஆட்சியாளர்கள் இன்னல்கள் பல இழைத்து வருகின்றனர். மனிதாபிமானத்துடன் இப் பிரச்சினையை அணுக வேண்டுமென்றும், மலையகக் குழந்தைகளுக்குக் கல்விக் கதவுகளை அடைக்க வேண்டாமென்றும், இலங்கையின் சுபீட்சத்துக்கு இந்திய வம்சா வளியினரின் குடியுரிமை வழங்குவதும் ஒரு வழியாகும் என்றும் பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் தலைவர்கள் கூறினர்கள். அவர்களுடைய பேச்சின் சுருக்கங்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

ஜனப். எம். ஈ. எச். முகம்மதலி
[மூதூர் முதலாவது உறுப்பினர்]

அடுத்த முக்கிய பிரச்சினை நாடற்றோர், இந்திய வம்சாவளியினர் பிரச்சினையாகும். இந்தச் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசிய வாரியப்பொல கௌரவ அங்கத்தவர் அவரது பேச்சின் போது அழகான ஒரு வேண்டுகோளை விடுத்தார். அது என்னவென்றால், இந்த நாடற்றோர் பிரச்சினையைக் கட்சிப் பாகுபாடற்ற முறையிலே, மனிதாபிமான சிந்தையுடன் நாம் ஆராய்ந்து ஒரு முடிவு காண வேண்டுமென்பதாகும். அவரது அவ் வேண்டுகோள் இந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் காதுகளிலும், இந்த அரசாங்கத்தை ஒட்டிப் பிடித்து அண்டிப் பிழைக்கும் அங்கத்தவர் காதுகளிலும்; புகுந்திருக்குமா என்பது எனக்கு மிகவும் சந்தேகமாக இருக்கின்றது. நான் வேண்டிக் கொள்வதென்னவென்றால், "நாடற்றவர்கள்" எனப் பெயர்சூட்டப்பட்டுள்ள இந்த இந்திய

## மனிதாபிமானத்துடன் அணுக வேண்டிய பிரச்சினை

வம்சாவளியினரும் மனிதர்கள், அவர்களும் மக்களாக வாழ வேண்டுமென்ற மனிதாபிமான உணர்ச்சியோடு நாம் இவர்களின் பிரச்சினையை ஆராய்ந்து ஒரு முடிவு காண வேண்டுமென்பது தான். எனினும், இந்த அரசாங்கத்தின் போக்கைக் கவனிக்கையில் இவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க மாட்டார்களென்பது தெளிவாகத் தெரிவதனால் நாங்கள் இந்த அரசாங்கத்தில் நம்பிக்கையிழந்திருக்கிறோம்.

திரு. மு. சிவசிதம்பரம்
[உடுப்பிட்டி]

இந்தியர் பிரச்சினைக்கு விரைவில் முடிவு காண்பதாகச் சிம்மாசனப் பிரசங்கம் குறிப்பிடுகிறது. சென்ற வருடம் கூறியதையும், அதற்கு முதல் வருடம் கூறியதையுமே இவ் வருடமும் அரசாங்கம் திரும்பவும் கூறியுள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்; அதாவது, இந்தியர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படுமென்பதே. இந்தச் சிம்மாசனப் பிரசங்கத்திலாவது, 'விரைவில்' என்ற வார்த்தை, இவ்வருட முடிவுக்குள் என்ற அர்த்தமாயிருக்குமென நம்புகிறேன்.

இந்தப் பிரச்சினையை, நல்லெண்ணமும் பரஸ்பர நம்பிக்கையும் கொண்ட ஓர் சூழ்நிலையிலேயே தீர்க்கலாமென்பதை நீங்கள் உணரவில்லையா? என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இங்குள்ள இந்திய மாணவர்களுக்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? அவர்கள் படிக்கும் கல்விக் கூடங்கள் வெறும் மாட்டுத் தொட்டில்களே. இப்பள்ளிக்கூடங்களிருக்கும் தோட்டங்களின் துரைமார்களையும், முகாமையாளர்களையும்—நீங்கள் எப்போதும் 'முதலாளிவர்க்கத்தினர்' என்று அழைப்பவர்களை-தோட்டத்தொழிலாளரின் மக்களுக்கு கல்வி அளிக்கக் கட்டாயப்படுத்தும்படி உங்களைக்கேட்கும் ஓர்பிரேரணையை நான் இந்தச் சபையில் கொண்டு வந்தேன். அதை நீங்கள் கதை பேசிச் சமாளித்து விட்டீர்கள்.

இந்த மாணவர்கள் படிக்கும் பள்ளிக்கூடங்களின் நிலையை எந்த விதத்திலாவது சீரமைக்க நீங்கள் எது வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அது மாத்திரமல்லாமல், இப் பிள்ளைகள் தமது பிரஜா உரிமையை நிலைநாட்டலாயக்கற்றவர் என்ற சாட்டில், அவர்களுக்கு ஆரம்ப, இரண்டாந்தரப் பள்ளிச்கூடங்களின் கதவுகளையும் மூடிவிட்டீர்கள்.

ஒரு பிள்ளையின் பிரஜாவுரிமை பற்றித் திருப்தி செய்து கொள்ள முன்னர், அப்பிள்ளையைப் பள்ளிக்கூடத்தில் அனுமதிக்கக் கூடாது என்று கூறும் ஓர் சுற்றறிக்கை, ஓர் பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாருக்கு அனுப்பப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். இந்நாட்டின் செல்வத்தின் 64 வீதமும் மலைநாட்டுத் தொழிலாள மக்களால் உற்பத்தியாக்கப்படுவதென்பதை யாரும் மறுக்க முடியுமா? அந்த மக்களின் பிள்ளைகளுக்குக் கல்வி கற்கும் உரிமை கூட இந்த நாட்டில் இல்லை!

இன்னும் இது போன்ற பல விஷயங்களை—எங்கள் பள்ளிக்கூடங்கள், தெருக்கள் இவற்றைக் கவனியாமை, வசதிகள் அளிக்காமை, எங்கள் ஆற்றல்களைச் சரியாகப் பயன்படுத்தாமை — இப்படிப் பலவற்றை நான் அடுக்கிக் கொண்டே போக முடியும். ஆனல், நான் சொல்ல வேண்டிய அளவுக்குச் சொல்லி விட்டேன் என்றே நினைக்கிறேன்.

திரு. செ. இராசதுரை
[மட்டக்களப்பு முதலாவது உறுப்பினர்]

இந்நாட்டிலே முதன் முதலாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை மொழிப் பிரச்சினையாகும். அடுத்ததாக, இந்நாட்டு மண்ணைத் தவிர வேறு மண்ணை அறியாத, இந்நாட்டிலே பிறந்து இந்நாட்டிலே வளர்ந்து, இந்நாட்டுக்காகவே உழைத்து, இந்நாட்டின் பொற்காலத்துக்காக வாழ்வு பூராவையும் அர்ப்பணம் செய்து, பின் தங்களுடைய உயிரற்ற சடலங்களையும் இந்நாட்டின் இரப்பர்த் தோட்டங்களுக்கும் தேயிலைத் தோட்டங்களுக்கும் அர்ப்பணித்த தியாக சீலர்களான பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். இப் பிரச்சினைகளை மூடி வைத்துவிட்டு, அரசாங்கம் பொருளாதார அபிவிருத்திக்காகவும் தேசிய முன்னேற்றத்துக்காகவும் பேசும் பேச்சுக்களை நாம் பார்க்கின்ற பொழுது உண்மையிலேயே இந்த அரசாங்கத்தின் மீது அனுதாபந்தான் ஏற்படுகிறது.

மேலும் அவர் கூறியதாவது:—

நாம் மட்டுமல்ல, இந்நாட்டின் தேசிய வளத்தைப் பெருக்க வேண்டுமென்றும் தேசிய ஒற்றுமையை மலரச் செய்யவேண்டுமென்றும் எல்லா இன மக்களும் சுபீட்சமாக வாழ வேண்டுமென்றும் விரும்புகின்ற அத்தனை பேரும் சொல்வார்கள், இந்த நாட்டைச் சுபீட்ச நிலைக்குக் கொண்டு வர மூன்றே மூன்று திறவுகோல்கள் தாம் இருக்கின்றன என்று. முதலாவது தமிழ் பேசும் மக்களுக்கு மொழிச் சுதந்திரம் அளிப்பது, இரண்டாவது இந்நாட்டின் சுபீட்சத்திற்காகவும் வளத்துக்காகவும் உழைத்த பத்து லட்சம் மலைநாட்டுத் தமிழ் மக்களின் உரிமையை அளித்தல், மூன்றாவது இந்நாட்டின் மதப் பிரச்சினையில் தலையிடாமல் இருத்தல். இப் மூன்றும் காப்பாற்றப்பட்டு விட்டால் இந்நாட்டில் தேசிய சுபீட்சம் நிலவ முடியும். இவைகளைக் காப்பாற்றத் தவறினால், நீங்கள் சொல்கின்ற கடும் உழைப்பு, நேர்மை, தியாகம் ஆகிய இவை மூன்றுக்கும் இந்நாட்டிலே இடம் இருக்காது. இந்த மூன்று திறவுகோல்களும்தான் தேசிய சுபீட்சத்தை வளர்க்க முடியுமென்று நீங்கள் 1962ம் ஆண்டு சிம்மாசனப் பிரசங்கத்திலே சொன்னீர்கள். ஆனல் இன்று என்ன காண்கின்றோம். 1962ம் ஆண்

## பாடசாலைக் கதவுகளை மூடுவது பெரும் துரோகம்

டுக்கும் 1963ம் ஆண்டுக்குமிடையே அரசாங்க கஜானு வரண்டு விட்டது. நீங்கள் கொண்டு வந்த ஒவ்வொரு திட்டத்திலும் நீங்கள் தோல்வியடைந்து விட்டீர்கள்.

கள்ளத்தோணி என்று பேசுகிறீர்கள். கள்ளத் தோணிகள் சம்பந்தமாக, இந்த நாட்டையே தாயகமாகக் கொண்ட நாங்கள் எங்கள் கருத்தை எப்போதோ அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறோம். இந்த நாட்டிலேயே பிறந்து, இந்த நாட்டிலேயே வளர்ந்து, இந்த நாட்டின் வளத்துக்கு உழைக்கும் மக்களை, இலங்கை மண்ணைத் தவிர வேறு எந்த மண்ணையுமே கண்டிராதவர்களை, கடற்கரையையே மிதித்தறியாதவர்களை, கடலையே கண்ணுற்காணுதவர்களை — அவர்களுடைய பிரச்சினையை—கள்ளத்தோணிப் பிரச்சினையுடன் சேர்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். கள்ளத்தோணிப் பிரச்சினை வேறு. மலைநாட்டுத் தமிழர்கள் பிரச்சினை வேறு. இரண்டையும் இணைத்து அரசியல் லாபம் பெற முயற்சியாதீர்கள்.

(13-ம் பக்கம் பார்க்க)

### ஏவு கணைகள்

ஜனப். எம். ஈ. எச். முகம்மதலி

இதனிடையே பாஷைப் பிரச்சினை, இந்திய வம்சாவளியினர் பிரச்சினை தீர்க்கப்படாமையினல் நாட்டு மக்களிடையே ஐக்கியம் குன்றி நாட்டின் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது.

*

ஜனப். எம். ஈ. எச். முகம்மதலி

நாங்கள் ஐக்கியமாக வாழவேண்டுமானல் இந்த அரசாங்கம் மிக ஊக்கமெடுத்து மொழிப் பிரச்சினையை, இந்த நாட்டிலுள்ள இந்திய வம்சாவளியினரின் பிரச்சினைகளைத் தீர்க்க முயல வேண்டும்.

*

திரு. செ. இராசதுரை

உண்மையில் சிறுபான்மை மக்களுடைய பிரச்சினைகளை, மலைநாட்டுத் தமிழர்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அரசாங்கத்துக்குச் சிறிதும் விருப்பமில்லை.

*

திரு. செ. இராசதுரை

மலைநாட்டுத் தமிழர்களுக்குப் போதிய வசதிகள் எதுவுமே இல்லை. கல்வி வசதி இல்லை, குடியிருப்பு வசதி இல்லை, வைத்திய வசதி இல்லை, உத்தியோக வசதி இல்லை, தொழில் வசதி இல்லை. உண்மையான நிலை இப்படியிருக்க, மொழிப் பிரச்சினையையும், மதப் பிரச்சினையையும், இந்தியர் பிரச்சினையையும் காட்டி, சாதாரண மக்களை எத்தனை நாட்களுக்கு ஏமாற்றப் போகிறீர்கள்?

*

டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன்

தீக்கவாப்பியா, சேருவாவிலை போன்ற இடங்களைப் புனித நகரங்களாகப் பிரகடனம் செய்ய வேண்டும் என்றும், புத்த கோயில் மணி ஓசை கேட்கும் பிரதேசங்களனைத்திலும் பௌத்தர்களே குடியேற வேண்டும் என்றும் இந்த அரசாங்கமும் வேறு பல தீவிரவாதிகளும் வாதிடுகின்றனரே!

புனிதம் புனிதம் என்று கூறுகிறீர்களே! மனிதாபிமானத்தைப் புதை குழி தோண்டிப் புதைக்கும் உங்களிடம், மனிதாபிமானத்தைவிடப் புனிதமானது வேறு ஏதாவதுண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

புனிதமான வாக்குரிமையை, புனிதமான மொழி உரிமையை, புனிதமான குடி உரிமையைப் பிடுங்கிவிட்டு நகரங்களைப் புனிதப் படுத்துவது நியாயமானதா?

### கல்வி வசதி மறுக்கப்பட்டால்...

மலையகத்திலும் இலங்கையின் வேறு பலபாகங்களிலும் குடியுரிமையற்றவர்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதி அளிக்க பாடசாலை நிர்வாகிகள் மறுத்து வந்துள்ளனர். இத்தகைய கொடுமை கல்வி அளிக்கும் விடயத்தில் நிலவலாகாது என்று தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் கல்வி அமைச்சுடன் பலமுறை தொடர்பு கொண்டார்.

இந்நாட்டவர்களின் குழந்தைகளுக்கு இடம் கொடுத்து, வேறு இடங்கள் காலியாக விருந்தால் தான் ஏனைய பிள்ளைகளுக்கு இடமளிக்க முடியும் என்று இப்பொழுது கல்வி இலாகா திரு. செல்வநாயகம் அவர்களுக்கு அறிவித்துள்ளது.

எத்தனையோ பாடசாலைகளில் இடமிருந்தும்கூட பல பிள்ளைகளுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. பாடசாலையில் இடமிருந்தும், இடம் மறுக்கப்பட்டால் முழு விபரங்களையும் திரு. செல்வநாயகம் அவர்களுக்கு அனுப்பி வைக்கும்படி கோரப்படுகிறது.

முகவரி:

சா. ஜே. வே. செல்வநாயகம்,
16, அல்பிரட் அவுஸ்
தோட்டம்,
கொழும்பு-3




ரிஷி
அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது.
பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00
விலை ½ ருத்தல் ரூபா 22/50
(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்:
T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்
ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# விபுலாநந்தனுக்கு விமரிசையான விழா

## எழுத்தாளர் மன்றம் எடுத்த எழிலான விழா

"முத்தமிழ் மாமுனிவன் விபுலாநந்தா அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு அளப்பரிய தொண்டாற்றியிருக்கிருர். விபுலாநந்தப் பெருந்தகையின் சேவையை இன்றையத் தமிழகம் நன்கு பயன்படுத்தவில்லை. இலங்கையிலுள்ள சாகித்திய மண்டலம் அரசாங்கத்துக்கு வாழ்த்துப் பாடுவதை விடுத்து, விபுலாநந்தரின் ஆராய்ச்சிப் புதையலான யாழ் நூலை தமிழ் கூறும் நல்லுலகத்தார் அறியக் கூடிய வகையில் அச்சிட்டு வெளியிட வேண்டும்" என்று கொழும்புத் தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற விபுலாநந்த விழாவுக்குத் தலைமை வகித்த மன்றத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினர்.

விபுலாநந்த அடிகளின் முழு உருவச் சிலையை அமைப்பதற்காக எழுத்தாளர் மன்றம் முடிவு செய்திருந்தது. மாதிரி உருவ அமைப்பொன்றினை சிற்பி திரு. அ.பெ. நல்லரெத்தினம் அமைத்திருந்தார். இச் சிலையினை இலங்கை வானெலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. கே. எஸ். நடராசா திரை நீக்கம் செய்து வைத்துப் பேசுகையில், விபுலாநந் அடிகளிடம் பல்கலைக் கழகத்தில் படித்த கடைசி மாணவர்களுள் தானும் ஒருவன் என்றும், ஈழத்துப் பேரறிஞர்களுள் ஒருவரான விபுலாநந்த அடிகளாருக்குச் சிலை அமைக்கும் பணியினை மேற்கொண்டுள்ள மன்றத்தைப் பாராட்டி, ஆறுமுக நாவலருக்கும் மன்றம் விரைவில் சிலை அமைத்தல் வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சிற்பி திரு. அ. பெ. நல்லரெத்தினம் தன்னைச் சிற்பப் பணியில் சிறப்புற வைக்க தமிழ் பேசும் மக்கள் உதவ வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

மன்றத்தின் முதல் வெளியீடான 'ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள்' என்ற நூலை வெளியிட்டு கலாநிதி சு. வித்தியாநந்தன் உரை நிகழ்த்துகையில், 'விபுலாநந்த அடிகள் இலங்கையில் மட்டக்களப்பில் பிறந்தாலும், இந்தியப் பல்கலைக் கழகங்களுள் முதன் முதலாக தமிழ்ப் பேராசிரியராக விளங்கினர்' என்றார். பாரதியாரைத் துணிகரமான முறையில் மாணவ உலகுக்கு அறிமுகப்படுத்திய பெருமை விபுலாநந்தருக்கே சேரும் என்றும் கூறினர்.

சிறுகதைத் தொகுப்பின் முதலாவது படிவத்தை திருமதி புனிதவதி 'திருச்செல்வம் பெற்றுக்கொண்டார்.

சிறுகதை ஆசிரியர்களான திருவாளர்கள் சிற்பி, நவம், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், முத்து சிவஞானம் ஆகியோர் மேடையில் வந்திருந்தனர். அவர்களைத் தலைவர் அறிமுகப் படுத்தி வைத்தார்.

நூலுக்கான மதிப்புரையை இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மன்றப் பொதுச் செயலாளர் திரு. தேவன் — யாழ்ப்பாணன் வழங்கினர்.

### கருத்துரை

தனது வாழ்நாளில் பெரும் பாகத்தை தமிழ் ஆராய்ச்சியிலேயே செலவிட்டவரான விபுலாநந்த அடிகளார் துறவியாக விருந்தபோதும், தமிழை, தமிழ்ப்பற்றைத் துறக்க முடியவில்லை. நடுவு நிலையில் நின்று வழுவாதவர்.

விபுலாநந்தரின் பல அரிய நூல்கள் இன்று அச்சிலே கூட இல்லாது ஒழிந்துவிட்டன. தமிழ் எழுத்தாளர் மன்றம் அடிகளாரின் நூல்களைப் புதுப்பித்து வெளியிடும் பணியில் இறங்க வேண்டும் என்று கருத்துரை வழங்கிய சாகிருக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு.

(11-ம் பக்கம் பார்க்க)

யாழ் நூல் இயற்றிய வித்தகன் விபுலாநந்த அடிகளுக்கு கொழும்பு தமிழ் எழுத்தாளர் மன்றம் விழாவெடுத்தது. வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவில் விபுலாநந்த அடிகளாரின் மாதிரி சிலை ஒன்றும் திரை நீக்கம் செய்யப்பட்டது. 'ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள்' என்ற சிறுகதைத் தொகுப்பும் அன்று வெளியிடப்பட்டது.

# பெருகிவரும் ஆதரவு

## வரவேற்பு விழாவில் முகம்மதலி

"மூதூர்ப் பொது மக்களால் எனக்களிக்கப்படும் இம்மகத்தான வரவேற்புபசாரம் மூதூர் மக்கள் மத்தியில் எமது கட்சிக்கும், நான் கடைப்பிடிக்கும் கொள்கைக்கும் பெருகிவரும் ஆதரவையும் நம்பிக்கையையும் நிரூபிப்பதற்காகவே காட்சியளிக்கின்றது. இதற்கான எனது இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்."

இவ்வாறு மூதூர் முதல் எம். பி. ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி அக்கரைச் சேனைப் பாடசாலையில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புபசார இரா விருந்திற் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து ஜனுப் முகம்மதலி பேசுகையில், 'எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவே காணப்படுகின்றது. இந்நாட்டு மக்கள் அனைவரும் எதுவித ஆபத்துமின்றிச்சமமாக வாழ இறைவன் அருள் செய்ய வேண்டும். ஒரு மக்கள் பிரதிநிதியென்ற முறையில் எவ்வித பாகுபாடுமின்றி என்னுலியன்றளவு சேவை செய்து வருகின்றேன். நான்கு முறைகள் நீங்கள் என்னை உங்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்ததற்கு இதுவே காரணமென்று நான் எண்ணுகின்றேன். எதிரிகள் எதைக் கூறினுலும் உண்மையை மறைக்க முடியாது. அவர்களின் அர்த்தமற்ற பேச்சுக்களுக்குத் தக்க சந்தர்ப்பத்தில் பதிலளிக்க நான் தயாராயிருக்கிறேன்' எனக்கூறித் தொகுதியின் முன்னேற்றத்திற்கு மக்கள் அனைவரும் பாடுபட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

அடுத்த தேர்தலுக்கிடையில் மூதூர் இரட்டைத் தொகுதி பிரிபட்டுவிடலாமென்றும், இதனல் இதுவரை நமக்கிருந்த இரட்டை வாக்குகள் இல்லாமலாகி எதிர்காலத்தில் ஒரு வாக்கே இருக்குமென்றும், அல்லை—கந்தளாய் புறம்பாகப் பிரிபடலாமென்று தாம் நம்புவதாகவும் ஜனுப் முகம்மதலி தெரிவித்தார்.

மௌலவி எம். மசூர் ஆலிம், காரியாதிகாரி திரு. வேலுப்பிள்ளை, மூதூர்க் கிராமச் சபைத் தலைவர் திரு. எல். சின்னராசா, ஜனுப்களான ஏ. சி. கே. முகம்மது, எஸ். ஏ. சமது ஆகியோரும் பேசினர்.

### மட்டக்களப்பில் தமிழ் விழா

கிழக்கிழங்கை எழுத்தாளர் சங்கம், இலங்கை எழுத்தாளர் சங்க அனுசரணையுடன் ஆகஸ்டு 23, 24, 25-ம் திகதிகளில் பிரமாண்டமான அளவில் தமிழ் விழா வொன்றினை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகத் தெரிகிறது. இவ் விழாவில் கவியரங்கு, கருத்தரங்கு, உரையரங்கு, வாய்மொழி இலக்கிய அரங்கு போன்ற 10 அரங்குகள் நிகழவிருக்கின்றன. கொழும்பு, யாழ்ப்பாணம், மலைநாடு, திருகோணமலை ஆகிய பகுதிகளிலிருந்து எழுத்தாளர்கள், கவிஞர்கள், அறிஞர்கள், கலைஞர்கள் பங்குபற்றுகிருர்களென விழா அமைப்பு நிர்வாகி அறிவிக்கின்ருர்.

### ஜப்பானில் குடும்பக் கட்டுப்பாடு

கடந்த பத்து வருடங்களில், திட்டமிடப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டின் மூலம் ஜப்பான் தனது பிறப்பு விகிதத்தை 50 வீதம் குறைத்துள்ளது என்று ஐ. நா. அறிக்கை ஒன்று கூறுகிறது.

குடும்பக் கட்டுப்பாட்டில், ஆசிய நாடுகளுள் ஜப்பான் மட்டுமே அதிக வெற்றியை ஈட்டியுள்ளதென மேலும், அந்த அறிக்கை தெரிவித்தது.

### தேர்தல் கந்தோரில் சிங்களம்

திருமலை தேர்தல் இலாகாவிற்கு அனுப்பிவைக்கப்படும் தமிழ் கடிதங்களுக்கெல்லாம் சிங்களத்தில் பதில் கிடைக்கிறது. தமிழ் பிரதேசமான திருமலையில் இந்த அநியாயம் நிகழ்வதை மூதூர் முதலாவது உறுப்பினர் ஜனுப் முகம்மதலி ஆட்சேபித்து திருமலை அரசாங்க அதிபருக்குக் கடிதம் எழுதியிருக்கிருர்.

# மக்கள் குரல்

## அவதூறு அடுக்காது

சில நாட்களுக்கு முன்பு நமது சைவப் பெரியார் சேர். கந்தையா வைத்தியநாதன் ஒரு பரிசளிப்பு விழாவில் கிறிஸ்தவர்களை, சைவர்களின் விடயங்களில் தலையிடுவதாகக் குற்றம் சாட்டியுள்ளார். இதனை நான் இந்துவாக இருந்தும் ஏற்க மறுக்கின்றேன். நான் யாழ்ப்பாணம், நீர்கொழும்பு வேறு பல இடங்களிலும் வசித்து வந்திருக்கிறேன்.

இப்பிரதேசங்களில் கிறிஸ்தவர்களும் சைவர்களும் ஒற்றுமையாகவும் சச்சரவின்றியும் வாழ்ந்து வருவதை நான் கண்டிருக்கிறேன். இவர்கள் ஒருவர் விஷயத்தில் மற்றவர் தலையிட்டுக் குழப்பங்களையும் இடையூறுகளையும் ஏற்படுத்தியதை நான் காணவில்லை.

இப்பெரியார், அவர்கள் பாடசாலைகளையும் தாக்கியுள்ளார். சைவப் பிள்ளை

(13-ம் பக்கம் பார்க்க)

# புதிய தமிழகத்தை ஆக்குவோம்

## 16 வருடங்களுக்கு முன்......

"பிறரைக் கவரவோ, சுரண்டவோ நாம் தனித் தமிழ் நாடு கோரவில்லை. நம் பொருட்களை வளப்படுத்தி, செழுமைப்படுத்தி, மக்கள் நோயற்று, அறிவுடையோர்களாக வாழவும், பண்டைத் தமிழக அறமாகிய பொதுமை அறத்தைக் கடைப்பிடித்து வாழவும், உலகம் வாழவே நாம் தமிழ் நாட்டைக் கோருகிறோம்." என்று சென்னை கோகலே ஹாலில் நடைபெற்ற கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய டி. பி. மீனுட்சி சுந்தரம் பிள்ளை கூறினர்.

புதிய தமிழகத்தை நிறுவ வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி ஸ்ரீ மீனுட்சி சுந்தரம்பிள்ளை, ம. பொ. சிவஞான கிராமணியார், ஜனர்த்தனம் முதலியோர் பேசினர்கள்.

(சுதந்திரன்—1-8-47)

### என். எஸ். கே. க்கு கலைவாணர் பட்டம்

சென்னை ஜூலை 28

நேற்று மாலை திருவல்லிக்கேணி நடராஜ கல்விக் கழகத்தின் சார்பில் நடந்த பொதுக் கூட்டத்தில் தமிழ் நாடக ஆசிரியர் ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியார் 'கலைவாணர்' பட்டத்தை என். எஸ். கிருஷ்ணனுக்கு வழங்கினர்.

### லிங்கன் பிறந்தகத்தில் நிறத்திமிர்

காந்திஜியின் வைத்தியரும் அமெரிக்காவிலுள்ள இந்திய மாணவர்களின் நிலைமையை அறிந்து வரும்படி இந்தியசர்க்காரால் அனுப்பி வைக்கப்பட்டவருமான டாக்டர் பி. சி. ராவ் அமெரிக்காவில் நிலவும் ஜாதிபேத துவேஷத்துக்கு ஆளானர். சுதந்திரத்தையும் மனித சகோதரத்துவத்தையும் நிலைநாட்டி அவைகளுக்காகப் பாடுபட்டு உயிர் நீத்த தியாகி ஆபிரகாம் லிங்கன் வாழ்ந்த டிக்காரே நகருக்கு டாக்டர் ராய் சென்றிருந்தபோது, அவர் வெள்ளையரல்லாதார் என்ற காரணத்தால் அவர் ஹோட்டலில் பிரவேசிக்க அனுமதி மறுக்கப்பட்டார். லிங்கன் வாழ்ந்த இடத்தில் இத்தகைய நிறத்திமிர் இன்னும் இருப்பதை டாக்டர் ராய் பிரஸ்தாபித்து வருந்தினர்.

(சுதந்திரன்—30-7-47)

......பெரும்பான்மைச் சமூகத்திலுள்ள சில சிங்கள அரசியல் வாதிகள் இலங்கை அரசியலில் தமிழ் பேசும் மக்களுக்கு ஒருவிதமான உரிமையுமின்றித் தாமே சகலவற்றையும் கைக்கொள்ளச் சகலவித உபாயங்களையும் உபயோகிக்கின்ருர்கள். அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கு தமிழரின் ஒற்றுமையையும் சீர்குலைக்க எத்தனிக்கிருர்கள். இதற்காக திருவாளர்கள் மகாதேவா, நடேசன், ராஜகுலேந்திரன், தியாகராசா முதலியவர்களுக்கு மந்திரிப் பதவிகள், பட்டங்கள் முதலிய ஆசை வார்த்தை காட்டி அவர்கள் மூலமாக தமிழருள் மித்திர பேதம் உண்டாக்குகின்ருர்கள்........

(தலையங்கம்—30-7-47)

சுதந்திரன்

வேல் தைலம்
மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்ருகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

விலை ரூபா 1-25

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

S. P. S. ஜெயம் கம்பெனி,
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

# ஆட்சியாளர் தூண்டுதலில் மத வெறியர்கள் அட்டூழியம்

### அரங்கம் 25

அல்ஸ்ரர் மாகாணத்திலிருந்த டெரி மாவட்டத்தில் கணிசமான அளவு கத்தோலிக்கர்கள் இருந்தனர். 19-7-1920ல் புரட்டஸ்தாந்து வெறியர்கள் அவர்களைத் தாக்கத் தொடங்கினர். அடுத்த நாள் பெல்பஸ்ற் மரக்கலச்சாலையிலிருந்த கத்தோலிக்கரைக் குண்டர்கள் தாக்க ஆரம்பித்தனர். படைத்துப்பாக்கிகளையும் சுழல் துப்பாக்கிகளையும் கத்திகளையும் அரிவாள்களையும் இரும்பு உலக்கைகளையும் கற்பாறைகளை

எவரையும் கைது செய்து காலவரம்பின்றிக் காவலில் வைக்கவும் இராணுவ நீதி மன்றங்களை இரகசியமாக நடத்தவும் மரண அதிகாரிகளின் விசாரணைக்குப் பதிலாக இராணுவ விசாரணைகளைப் புகுத்தவும் இம் மசோதா வழிவகுத்தது. இதுவரையும் மரண விசாரணைகளின் போது 33 தடவைகள் இராணுவத்தினருக்கும் பொலீஸாருக்கும் எதி

கொல்லத் திட்டமிட்டனர். பால்தருவூண்சாலைகளையும் ஆலைகளையும் பன்றிக்கருவாட்டுத் தொழிற்சாலைகளையும் தீ வைத்துத் தரை மட்டமாக்கினர்; 20-9-1920ல் பின்னல் தொழிற்சாலையொன்றை நெருப்பு வைத்து நிர்மூலமாக்கினர். இவற்றின் கார

பித் மற்ற எட்டுக் கைதிகளையும் உண்ணுவிரதத்தைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டார்.

கோக் மாநகர முதல்வர் மக்ஸ்வினியின் பூதவுடல் அயர்நாட்டுக்கு எடுத்துச் செல்லப்படவிருந்தது. அதற்கு முன்னர் 30,000 அயர் மக்கள் மறைந்த தலைவருக்கு மரியாதை செலுத்தினர். உண்ணுவிரதத்தால் மூவர் மாண்டது தம்மைக்

அனுட்டிக்கும்படி அயர் மன்றம் மக்களைக் கேட்டிருந்தது. மயானத்தில் பூதவுடல் அடக்கம் செய்யப்படுவதற்காகக் காத்திருந்தது. அப்பொழுது பதில் குடியதிபதி ஆதர் கிரிபித் கலங்கிய கண்களுடனும் கரகரக்கும் குரலிலும் உரை நிகழ்த்துகிறார். அவரது உரையைத் தொடர்ந்து குடியரசு இராணுவத்தினரால் மரியாதைக் குண்டுகள் பொழியப் படுகின்றன. பல்லாயிரக்கணக்கான அழுத முகங்கள் பார்த்துக் கொண்டிருக்க உடல் அடக்கம் செய்யப்படுகிறது.

## பஞ்சத்தைத் தீர்க்க பாவையர்கள் பெருமுயற்சி

யும் எறிகுண்டுகளையும் பெற்றோலையும் குண்டர்கள் கொண்டுசென்றனர். எதிர்ப்பட்டவர்கள் அனைவரையும் மிருகங்கள் போல் தாக்கினர்; கத்தோலிக்கரின் வீடுகளுக்குத் தீ வைத்தனர்; பெண்கள் மீது பலாத்காரம் பிரயோகித்தனர். இவற்றையெல்லாம் பார்த்த ஆர். ஐ. பொலீஸாரும் குண்டர்களுடன் சேர்ந்துகொண்டனர். தாக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றும் பணியை, அற்ப சொற்பமாக, அள்ஸ்ரரிலிருந்த குடியரசு இராணுவத்தினரே — அயர் தொண்டர் படையினரே செய்தனர்.

ஐந்து நாட்களாக நடைபெற்ற கலவரத்தின் காரணமாக டெரி மாவட்டத்தில் 19 பேர் மரணமடைந்தனர்; 50 பேர் கடும் காயமுற்றனர்; பெல்பஸ்ற்றில் 17 பேர் இறந்தனர்; 200 பேர் படுகாயமடைந்தனர். பெல்பஸ்ற்றிலிருந்து 5,000 அகதிகள் வெளியேறினர். இரண்டு இடங்களிலுமாக நூற்றுக்கணக்கான வீடுகள் தரைமட்டமாகின.

அயர்நாட்டில் நிலைமை மிகவும் மோசமாகிக்கொண்டிருந்தது. ஆங்கில இராணுவத்தினர் தொண்டர்களைக் கைது செய்து தகவல்கள் பெறுவதற்காகச் சித்திரவதை செய்வது சர்வ சாதாரண நிகழ்ச்சியாகியது. தொண்டர் எவருமே தகவல் கொடுக்க மறுத்ததால் அவர்கள் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆங்கிலேயரின் சித்திரவதை காரணமாகப் பைத்தியம்பிடித்த தொண்டர்களும் உண்டு.

ஒளஸ்திரேலியாவிலுள்ள மெல்பண் நகரத்துத் தலைமை அத்தியட்ச குரு, அயர் மக்களின் விடுதலைக்காக அங்கு மிகவும் கடினமாக உழைத்தவர். நிலைமையை நேரில் பார்வையிடுவதற்காக அவர் அயர்நாடு நோக்கிப் புறப்

ராகத் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன. இனிமேல் அவ்வாறான தீர்ப்புக்களுக்கு இடமில்லை.

கோக் மாநகர முதல்வர் மக்கேட்டன் கொலை செய்யப்பட்டதை யடுத்து மாநகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்ட தெரன்ஸ் மக்ஸ்வினி ஆட்சியினரால் 12-8-1920ல் கைது செய்யப்பட்டார். அயர் குடி

'கோமகன்'
'மாமல்லன்'

ணமாக லட்சக்கணக்கான பவுண் பணம் நாசமடைந்தது; ஆயிரக்கணக்கான மக்கள் வேலையின்றி வறுமையினுலும் பட்டினியாலும் தவித்தனர். இந்தப் பஞ்சத்தைத் தீர்க்கும் நோக்கத்துடன் அயர்நாட்டுப் பெண்மணிகள் வெண் சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தனர். இச்சங்கத்திற்கு அயர்நாட்டிலும் அமெரிக்காவிலிருந்தும் பணம் கிடைத்தது.

### அரங்கம் 26

அயர்நாட்டில் ஆங்கில ஆட்சியினர் செய்து வந்த அட்டூழியங்களை அவர்களால்

## ஏகாதிபத்திய வாதிகளின் செயலுக்கு எழுத்தாளர்கள் கண்டனம்

குற்றவாளிக் கூண்டுக்குள் நிறுத்துகின்றது என்பதை உணர்ந்து போலும் லண்டன் வாழ் ஆங்கில மக்கள் மக்ஸ்வினியின் பூதவுடல் ஊர்வலத்தில் செல்லும் போது அவருக்கு மரியாதை செய்தனர்.

பூதவுடல் லண்டனிலிருந்து நேரே கப்பலில் டப்ளினுக்கு எடுத்துச் செல்லப்படவிருந்தது. மக்ஸ்

அமெரிக்காவில் வாழ்ந்த அயர் மகன் ஓதொணவன் றொசா 1915ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மரணமடைந்தார். அவரது பூதவுடல் அடக்கம் செய்வதற்காக அயர்நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது. பிரேத அடக்கத்தின்போது, ஈஸ்ரர் வாரப் புரட்சியின் போது குடியதிபதியாக நியமிக்கப்பட்ட சேனுபதி பட்றிக் பியேஸ் கூறினர்:

"......மரணத்திலிருந்துதான் வாழ்வு பிறக்கின்றது. மறைந்த தேச பக்தர்களின் கல்லறைகளிலிருந்து தான் வாழப்போகும் தேயங்கள் தோன்றுகின்றன."

அவ்வாறு கூறிய சேனுபதியும் அவரது தோழர்களும் தமது உயிரை நாட்டுக்காக அர்ப்பணித்தனர்; அவர்கள் பிறக்கு முன்னரே றொபட் எமட், இனத்துக்காகத் தனது உயிரைத் தியாகம் செய்தார். சில காலத்திற்கு முன் தோமஸ் ஆகஸ். இப்பொழுது தெரன்ஸ் மக்ஸ்வினி...இவ்வாறுகப் பலர்... இவர்களது தியாகம் வீண் போகவில்லை.

## தகவல் கொடுக்க மறுத்த தொண்டர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்

யரசு இராணுவ பிரிகேட் ஒன்றின் கூட்டத்திற்குத் தலைமை வகித்துக் கொண்டிருக்கையிலேயே அவர் கைதானர். அவரோடு இன்னும் பத்துப் பேர் கைதாகினர். அனைவரும் ஆங்கில ஆட்சியினரின் நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அந்த நீதி மன்

மூடி மறைத்து வைக்கமுடியவில்லை. இங்கிலாந்தில் அமைக்கப்பட்ட அயர் சுய நிர்ணய கழகம் அவற்றை உலகுக்கு எடுத்துக் கூறியது. இன்னும், அயர் மன்றத்தின் வெளியீடான அயர் செய்தித் திரட்டு கொடுமைகளையெல்லாம் எடுத்தியம்பியது. 'அயர் செய்தித் திரட்டி'ன்

வினியின் உடலை ஏற்றிச் சென்ற பாடை மூவர்ணக் கொடியால் போர்க்கப்பட்டிருந்தது. பூதவுடலைத் தொடர்ந்து மத குருமாரும் அயர் கட்சி, தொழிற்சங்கங்களின் மாசபை, பிரித்தானிய தொழிற் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் 10,000 அயர் மக்களும்

அமெரிக்காவில் பிரயாணஞ் செய்து கொண்டிருந்த குடியதிபதி டி வேலரா, அயர் குடியரசை அமெரிக்க அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டுமென்று ஒருவேண்டுகோளை 20-10-1920ல் அமெரிக்கக் குடியதிபதி வில்சனிடம் சமர்ப்பித்தார். ஆனல் சிறிது காலத்தில் வொரன் ஹாடிங் புதிய குடியதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதால் வில்சனுல் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அயர்நாட்டில் ஆட்சியாளரின் அட்டூழியங்களுக்கு எல்லையே இருக்கவில்லை. பலரைக் கைது செய்து விசாரணை செய்தனர். அவ்வாறுகக் கைது செய்யப்பட்டவர்களுள் ஒருவர் 18 வயதான பட்டதாரி மாணவ




றம் அயர் மன்றத்தால் அமைக்கப்படாததால் அங்கு தான் யாதும் கூற விரும்பவில்லை என்று மக்ஸ்வினி முழங்கினர். சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அவரும் அவருடைய தோழர்களும், அயர் மக்கள் அநியாயமாகக் கைது செய்யப்படுவதை ஆட்சேபித்துத் தாங்கள் உண்ணுவிரதம்

பிரதிகள் அமெரிக்காவிலும் அதன் பிரெஞ்சு, ஸ்பானிய மொழி பெயர்ப்புகள் ஐரோப்பாவிலும் உலாவின. தலைசிறந்த ஆங்கில எழுத்தாளர்களான ஷோ, செஸ்தட்டன், வெல்ஸ், ஸ்கொட் முதலியோரும் ஆங்கில ஆட்சியினரின் போக்கைக் கடுமையாகக் கண்டித்தனர்.

கோக் சிறைச்சாலையில் உண்ணுவிரதம் இருந்த 10 தொண்டர்களில் ஒருவர் 17-10-1920ல் மரணமடைந்தார். அந்த மரணம் ஆட்சியினரை அசைக்கவில்லை. 25-10-1920ல் பிறிக்ஸ்தன் சிறைச்சாலையில் உண்ணுவிரதம் மேற்கொண்டிருந்த தெரன்ஸ் மக்ஸ்வினி மரணமானர். உண்ணுவிரதம் தொடங்கி 74 நாட்கள் கழிந்த பின் மரணமான இவரைத் தொடர்ந்து இன்னுமொரு தொண்டரும் கோக் சிறைச்சாலையில் மரணமானர். உண்ணுவிரதம் இருக்கும் கைதிகள் அனைவரையும் இறக்கவிடுவதே ஆங்கிலேயரின் திட்டம் என்பதை அறிந்த பதில் குடியதிபதி ஆதர் கிரி

ஆட்சியினரால் சட்டவிரோதமாக்கப்பட்ட வட்டுடைகளை யணிந்த அயர் தொண்டர்களும் சென்றனர்.

கப்பலில் பூதவுடல் ஏற்றப்பட்டதும் அக்கப்பல் டப்ளினுக்குச் செல்லாமல் நேரே கோக் நகரத்திற்குச் செல்லும் என ஆட்சியாளர் அறிவித்தனர். டப்ளின்

## அத்தியட்ச குரு கைது

பட்டார். எனினும் அவர் அயர்நாட்டுக் கரையை அடைவதற்கு முன்னர் 8-8-1920ல் ஆங்கில ஆட்சியினரால் கைது செய்யப்பட்டார்.

மீண்டும் அயர்நாட்டில் அமைதி நிலைநாட்டும் மசோதா பிரித்தானியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 9-8-1920ல் மன்னரின் அங்கீகாரம் பெற்றது. இம் மசோதா, 1914ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தேயப் பாதுகாப்பு மசோதாவின் ஒரு தொடர்ச்சியாகும். இந்தப் புதிய சட்டம் பொலீஸாருக்கும் இராணுவத்தினருக்கும் கறுப்பர்—துவரருக்கும் பலத்த பாதுகாப்பு அளித்தது. சந்தேகத்திற்குரிய

இருக்கப்போவதாகக் கூறினர்.

மக்ஸ்வினியும் தோழர்களும் கோக் சிறைச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். மூன்று நாட்கள் கழித்து மக்ஸ்வினி மாத்திரம் யுத்தக் கப்பல் ஒன்றில் லண்டனுக்குக் கொண்டு செல்லப்பட்டு பிறிக்ஸ்தன் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

அயர் மக்களை ஆயுதபலத்தால் அடக்க முடியாததை அறிந்த ஆட்சியினர் அவர்களைப் பட்டினி போட்டுக்

## உத்தமனின் உயிரிழந்த உடலின் மேல் உட்கார்ந்து சீட்டாடினர் சிறுமதியாளர்

## நீதி நிர்வாகம் நிலை தடுமாறியது

நகரில் பிரமாண்டமான ஊர்வலம் ஒன்றைக் காண ஆட்சியாளர் விரும்பவில்லை.

கப்பலில் வைக்கப்பட்ட சவப்பெட்டிமேல் கறுப்பர்—துவரர் உட்கார்ந்திருந்து சீட்டு விளையாடினர்! இங்கிலாந்தில் மட்டுமல்ல, எங்கும்தான் குடியேற்றவாதிகள் இறந்தவர்களுக்குக்கூட மரியாதை காட்ட மாட்டார்கள்!!

தெரன்ஸ் மக்ஸ்வினியின் பூதவுடல் அடக்கஞ்செய்யப்பட்ட 31-10-1920ல் அயர் நாடு முழுவதிலும் துக்கம்

ரான கெவின்பறி. இவர் அயர் குடியரசு இராணுவத்தில் ஓர் உறுப்பினர். அ. கு. இராணுவத்தினர் மறைந்திருந்து பட்டாளத்தினரைச் சுட்ட போது கைதாகியவர்களுள் ஒருவர் இந்த மாணவர். விசாரணையின் போது யாதும் கூற மறுத்த இவரை 1-11-1920ல் பகிரங்கமாகத் தூக்கிலிடும்படி ஆட்சியினர் கட்டளையிட்டனர். றொபட் எமட்டுக்குப் பின்னர் பகிரங்கமாகத் தூக்கிலிடப்பட்ட தேசபக்தன் கெவின் பறி. அவர் தூக்கிலிடப்பட்ட தினத்தில் அவரது சகமாணவர்கள் பலர் அ. கு. இராணுவத்தில் சேர்ந்தனர்.

(13-ம் பக்கம் பார்க்க)

சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஒகஸ்ட் மாதம் 4-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# உருவாகும் நெருக்கடி

அரசாங்கத்துக்கு இது சோதனை காலம். இலங்கை அரசியலிலே பெரிய நெருக்கடிகள் உருவாகின்றன. அதே வேளையில் அந்த நெருக்கடிகளை வகுப்புவாதப் பாதையிலே திருப்பவும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

1964 ஜனவரியில் அரசாங்க அலுவல்கள் அனைத்தும் சிங்களத்தில் மட்டும் நடத்த அரசாங்கம் இறுதியாகத் தீர்மானித்துவிட்டது. ஏன், ஒக்டோபர் மாதத்திலேயே தீவிர சிங்கள அமுல் தொடங்கிவிடுமாம். 1964 ஜனவரி 1-ந் திகதிக்குப் பிறகு தமிழ் மொழியின் நிலை என்ன? இந்நாட்டுச் சனத் தொகையில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினர் பேசும் மொழி அடியோடு புறக்கணிக்கப்பட்டு விடுமா?

தனிச் சிங்களம் தீவிரமாக அமுல் நடைபெறும் போது, தமிழ் மொழிக்கு ஓர் அந்தஸ்து வழங்கப்படுமா என்பதை அரசாங்கம் இதுவரை தெளிவுபடுத்தவில்லை. சிம்மாசனப் பிரசங்கத்தின் மீது அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நிகழ்த்திய உரைகளிலிருந்து "தமிழுக்கு எதையும் கொடுக்கத் தயாரில்லை" என்பது தெளிவாகிறது.

சிங்களத்தை மட்டும் அரியாசனத்தில் ஏற்றித் தமிழ் மொழியை உதைத்துப் படுகுழியிற் தள்ள ஆட்சியாளர் தயாராகிவிட்டனர். மொழி வீழ்ச்சியுற்றால், இனமும் வீழ்ச்சியடையும். மொழியை வீழ்த்துவது இனத்தையும் வீழ்த்துவதாகும். அந்த நாள் அண்மி விட்டது.

இவ்வருட இறுதியில் சுமார் 10,000 அரசாங்க ஊழியர்களை வெளியேற்ற முயற்சிகள் நடைபெறுகின்றன. இந்த ஊழியர்களை நடுத்தெருவில் விடுவதன் மூலமே இனத்தையும், மொழியையும் அழிக்கும் நேரடி நடவடிக்கை தொடங்கப்படுமெனத் தெரிகிறது. "இது சிங்கள அரசாங்கம், சிங்களமே அரசகரும மொழி, எனவே சிங்களவர்களே ஊழியர்களாக இருத்தல் வேண்டும். தமிழுக்கும், தமிழர்களுக்கும் அரசாங்கத்தில் இடமில்லை" என்பதுதான் ஆட்சியாளரின் தற்போதைய நிலை.

இதனால் இரு பெரும் நெருக்கடிகள் வெடிக்கவிருக்கின்றன. ஒன்று, அரசாங்க நிர்வாக இயந்திரத்தில் ஏற்படும் சீர்குலைவு. மற்றது, இந்நாட்டில் இரண்டாவது பெரிய தேசிய இனமான தமிழ் பேசும் மக்களிடையே ஏற்படும் பரபரப்பும் கிளர்ச்சிகளும்.

தமிழர்கள் நிர்வாகத் திறமை மிகுந்தவர்கள் — நிர்வாகத்தில் ஆழ்ந்த அனுபவமுள்ளவர்கள். அத்தகையோர் பதினாயிரம் பேர் திடீரென வெளியேறினால், அரசாங்க அலுவல்கள் பெரும்பாலும் ஸ்தம்பிக்கும். சிங்களக் கற்றுக் குட்டிகள் அவற்றைச் செய்ய முயன்றாலோ இலாகாகள் பைத்தியக்காரன் மூளைபோலாகிவிடும். இதனால் அரசாங்கத்துள்ளேயே ஒரு நெருக்கடி தோன்றும்.

இதை விடப் பெரிய நெருக்கடியைத் தோற்றுவிக்கும், தமிழ் பேசும் மக்களிடையே ஏற்படக்கூடிய கிளர்ச்சி. அரசாங்கம் தங்களின் சகோதரர்கள் பதினாயிரம் பேரைத் தெருவிலே தூக்கி எறிந்துவிட்டு, தங்கள் தாய்மொழியைப் படுகுழியில் தள்ளிய பிறகும் தமிழ் பேசும் மக்கள் நிம்மதியாக உறங்கிக்கொண்டிருக்க மாட்டார்கள்.

அனைத்தும் சிங்கள மயமாகி, உயிரினுமினிய தாய் மொழியும் அழிந்து விட்டால், தமிழ் பேசும் மக்கள் சர்வ சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு அடிமைகளாக வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அடிமையாக வாழ்வதா, கடைசி மூச்சுள்ள வரை உரிமைக்காகப் போராடுவதா என்று அவர்கள் இறுதியாக முடிவு செய்ய வேண்டிய கட்டத்துக்கு வந்துவிட்டனர். தன்மானம் மிகுந்தது தமிழ் பேசும் இனம். உரிமைக்காக உயிர் விடும் இனம் அது. ஆகவே தாய்மொழி அழிக்கப்பட்டது என்றதும் இவ்வினம் அடிபட்ட வேங்கைபோல ஆர்த்தெழுமாயின் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அரசாங்க ஊழியத்தையே நம்பி வாழும் பதினாயிரம் தமிழ்ச் சகோதரர்களையும், அவர்களின் ஊதியத்தைக் கொண்டு உயிர்வாழும் சுமார் அரை இலட்சம் மக்களையும் நிர்க்கதிக்குள்ளாக்கி, தமிழ் மொழியையும் அடியோடு நசுக்கி விட முயன்றால், அதன் விளைவாக ஒரு பிரமாண்டமான போராட்டத்தை எதிர்நோக்க வேண்டியதேற்படும் என ஆட்சியாளர்களை எச்சரிக்கின்றோம்! மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கெதிராக அரசாங்கம் எடுக்கவிருக்கும் தீவிர நடவடிக்கைகள் அவர்களையும் போராட்டத்தில் இறக்கிவிடும்.

1964 முதல் "அனைத்தும் சிங்களம்" என்று அரசாங்கம் முடிவுசெய்ததும் நாடெங்கும் சிங்கள வகுப்புவாத சக்திகள் தலைதூக்கத் தொடங்கி விட்டன. வகுப்புவாதிகள் ஆங்காங்கு ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்தி வகுப்புத் துவேஷத்தை வளர்க்கின்றனர். மீண்டும் பௌத்த பிக்குகள் அரசியல் முன்னணிக்கு வந்து விட்டனர். சிங்கள அரசாங்க ஊழியர்களிடையே வகுப்புவாதம் தீவிரமாக ஊட்டப்படுகிறது. 1958ல் இருந்ததை விட நிலைமை மோசமாகி வருகிறது. இதன் விளைவு?

1958ல் திரு. பண்டாரநாயக்காவால் கட்டவிழ்த்து விடப்பட்ட சிங்கள வகுப்புவாதம் என்னென்ன பேயாட்டங்களை நடத்தி, இறுதியில் எதில் முடிவுற்றது என்பது பகிரங்க இரகசியம். திரு. பண்டாரநாயக்கா வகுப்புவாதத்துக்குத் தலைவணங்கியதின் விளைவை நாம் அறிவோம். கணவன் செய்த தவற்றை மனைவியும் செய்கின்றார்.

அன்றைய வகுப்புவாதத்தை விட இன்றைய வகுப்புவாதம் மிகக் கொடியது. இன்றைய வகுப்புவாதத்தில் மொழி வெறியுடன் மத வெறியும், இந்தியர்—எதிர்ப்பு வெறியும் கலந்துள்ளன. இக்கொடிய பிசாசுக்கு ஆட்சியாளரில் ஒரு சாரார் தூபம் போடுகின்றனர். அரசாங்கமும் அடிக்கடி அவர்களுக்குப் பணிந்து கொடுக்கிறது. இதனால் வகுப்புவாதிகளின் கை மேலோங்கி வருகிறது.

ஆட்சியாளர் வகுப்புவாதத்துக்கு ஆக்கமளிப்பதன் உள் நோக்கம் என்ன?

சிங்கள வகுப்புவாதப் பேய்க்குத் தூபமிட்டு ஆட விட்டால், தமிழ் மொழியை அழிப்பதும், தமிழ் ஊழியர்களை வெளியேற்றுவதும் சுலபம்—எதிர் வரும் தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தையும் சமாளிக்கலாம் என்பதே ஆட்சியாளரின் எண்ணம்.

சிங்கள மக்களைத் தமிழ் பேசும் மக்களுடன் மோத விட்டால் தங்கள் தலை தப்பிவிடும் என்று ஆட்சியாளர் எண்ணினால், அவர்கள் எண்ணத்தில் மண் விழும் என்பது திண்ணம். ஆட்சியாளர் வளர்த்து விடும் வகுப்புவாதப் பூதம் விழுங்கி ஏப்பமிடப் போவது தமிழ் பேசும் மக்களையல்ல—வளர்த்த ஆட்சியாளர்களையே. இது நாம் அனுபவத்தினின்று கற்றபடிப்பினை.

இந்த நெருக்கடிகளைத் தூரதிருஷ்டியுடன் தவிர்க்கும் ஆற்றல் அரசாங்கத்துக்கு உண்டா? ஸ்தாபனரீதியாகத் திரண்டெழுந்து வரும் வகுப்புவாத சக்திகளை நொறுக்கித் தள்ள வேண்டும். 1964க்குப் பின் தமிழ் மொழியின் அந்தஸ்து என்ன என்பதை உடனடியாக வரையறுத்துக் கூறவேண்டும், தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் சகல உரிமைகளுடன் தொடர்ந்து பணியாற்ற ஆவன செய்ய வேண்டும். உருவாகிவரும் நெருக்கடிகளைத் தவிர்க்க இது தவிர வேறு வழியே கிடையாது.

# அரியணை உரை விவாதத்தில் அரசியல் கட்சிகள் நிலை

# ஆக்கபூர்வமான கருத்தை எடுத்துக் கூறினர்கள் தமிழரசார்

## பச்சை வகுப்புவாதம் பேசினர் ஆளும் கட்சியினர்

மக்கள் சபையில் அரியணை உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் முடிவெய்தியுள்ளது. பிரேரணைக்குச் சாதகமாக எண்பத்தொரு வாக்குகளும் பாதகமாக அறுபத்தொரு வாக்குகளும் கிடைக்கப் பெற்று இருபது அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது.

எட்டுத் திருத்தப் பிரேரணைகளை முன் வைத்து, சுமார் ஐம்பது மணி நேரம் ஒட்டியும் வெட்டியும் விவாதத்தில் கலந்து கொண்டார்கள் உறுப்பினர்கள்.

### முதல் தடவை

எதிர்க் கட்சியினர் முன் வைத்த திருத்தப் பிரேரணைகளில் ஒன்று, அறுபத்தி மூன்று வாக்குகளைச் சாதகமாகப் பெற்று சபையின் வரலாற்றிலேயே முதல் தடவையாக நிறைவெய்தியது. அடுத்த ஒரு நியமன ஆளும் கட்சி உறுப்பினர், முதல் தடவையாக ஒரு திருத்தப் பிரேரணையை முன்வைத்தார். அப்பிரேரணைக்கு எதிர்ப்பக்கத்திலுள்ள கட்சி ஒன்று தனது முழு ஆதரவையும் கொடுத்து உதவியது சபையின் வரலாற்றில் புதிய ஒரு நிகழ்ச்சியாகும்.

### உதிரிகள்

நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்கு எதிர்க் கட்சியில் உள்ள உதிரிகள் சிலரும் சாதகமாக வாக்களித்துள்ளார்கள். இதில் குறிப்பிடக் கூடியவர்கள் நால்வர். அவர்கள் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் ஆவர். கல்முனை, யாழ்ப்பாணம், நிந்தவூர், பொத்துவில் ஆகிய தொகுதிகளின் உறுப்பினர்களே இவர்கள். ஆளும் கட்சிக்குச் சாதகமாக இவர்கள் வாக்களிப்பது இது முதல் தடவையல்ல.

ஆளும் கட்சியில் உள்ள தமிழ் பேசும் நியமன உறுப்பினரான திரு. தொண்டமான் அவர்கள், திருத்தப் பிரேரணை ஒன்றை முன்மொழிந்ததும் அதை எதிர்க் கட்சியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் வழிமொழிந்ததும் ஒரு குறிப்பிடக் கூடிய நிகழ்ச்சியாகும்.

மலைநாட்டு மக்கள் பிரச்சனையில் அனுதாபக் கண்கொண்டு அணுகுபவர்கள் அனைவருக்கும் ஆதரவு காட்டும் கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சி. எனவேதான் திரு. தொண்டமானின் திருத்தப் பிரேரணையை அவர்கள் வழிமொழிந்தார்கள்.

இதன் மூலம் திரு. தொண்டமானின் அரசியல் எதிர்காலம் என்ன என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் அடிபடுகிறது.

### இனவழிப்பு

தோட்டப் பகுதிகளில் காணியில்லாத குடியானவர்களைக் குடியேற்றுவது என்ற போர்வையில் மலைநாட்டில் சிங்களக் குடியேற்றம் நடத்துவதற்கு ஆட்சியாளர் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். இத்துடன் இலங்கையர் மயமாக்கும் கொள்கையைத் துரிதப்படுத்துவதன் மூலம் மலைநாட்டில் வதியும் தமிழ் பேசும் தொழிலாளர்கள் பெரும் பேராபத்தை எதிர்நோக்கியுள்ளார்கள். மேலும் இலங்கையரல்லாதார் காணி வாங்குவதைக் கட்டுப்படுத்துவதற்கான மசோதவொன்றையும் ஆட்சியாளர் கொண்டுவரவுள்ளனர். இவையனைத்தும் திரு. தொண்டமானுக்குச் சிக்கலான நிலையையே உருவாக்கி உள்ளது.

மலைநாட்டுச் சிறார்களின் கல்வி வசதி பற்றியெதுவும் அரியணை உரையில் குறிப்பிடப்படவில்லை. மலைநாட்டு மக்களின் குடியுரிமை பற்றியும் பழைய பல்லவியே இம்முறை அரியணை உரையிலும் காணக் கிடக்கிறது. இவையனைத்தும் திரு. தொண்டமான் அவர்கள் தொடர்ந்து அரசாங்கக் கட்சியில் அங்கத்துவம் வகிக்க முடியாத நிலைமையை உருவாக்கியுள்ளது.

### மறைமுக எதிர்ப்பு

திரு. தொண்டமான் அவர்களுக்கும் பிரதமர் அவர்களுக்கும் இடையில் கருத்து வேற்றுமைகள், பல நாட்களுக்கு முன்னரே ஆரம்பமாகியுள்ளது. அப்பொழுதே திரு. தொண்டமான் மறைமுகமாக அரசாங்கத்தை எதிர்க்கத் தொடங்கியுள்ளார். இதுபற்றி சுதந்திரன் 14—7—63 இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

### நிலை என்ன?

இவையனைத்தையும் ஒன்றுபடுத்தி ஒப்பு நோக்குகையில் திரு. தொண்டமான் அவர்களின் நிலையென்ன என்ற கேள்வி எழுகிறது. ஆளும் கட்சி எக்காரணத்தைக் கொண்டும் திரு. தொண்டமான் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மாட்டாது என்பது உறுதி. ஆனால் திரு. தொண்டமான் தொடர்ந்தும் ஆளும் கட்சியுடன் அட்டைபோல் ஒட்டிக் கொள்வாரா அல்லது வெளியேறுவாரா என்பது இன்றைய அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்படும் கேள்வியாகும்.

### வலதுசாரி முன்னணி உருவாகலாம்!

ஆளும் கட்சியின் நடுவழிப் போக்கு அதிக காலத்திற்கு பயன் கொடுக்க மாட்டாது என்பதை அரியணை உரை மீது உரை நிகழ்த்திய இருவர் கையாண்ட பாணி ஓரளவு தெளியவைக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அரியணை உரைமீது நிகழ்த்திய உரையின் பாணி, ஆளும் கட்சியில் உள்ள வலதுசாரிகளுக்கு ஒரு அன்பான அழைப்பாகத் தென்பட்டது. இவரின் இந்தப் புதிய போக்கிற்குக் காரணம் உருவாகி வரும் இடதுசாரி ஐக்கிய முன்னணியோ என்ற ஐயுறவு அரசியல் வட்டாரங்களில் தொனிக்கிறது. இவரின் போக்கு ஒரு வலதுசாரி முன்னணியை உருவாக்க சில சாத்தியக் கூறுகள் இருப்பதைத் தென்படுத்துகிறது.

இதே போன்று மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன அவர்களின் உரையும் ஆளும் கட்சியில் உள்ள இடதுசாரிகளுக்கு ஒரு பகிரங்க அழைப்பாகத் தென்பட்டது.

எனவே ஆளும் கட்சி கடைப்பிடிக்கும் நடுநிலைப் போக்கு நீண்டகாலம் உயிர் வாழ முடியாது என்பது உறுதி.

ஆளும் கட்சியில் உள்ள இடதுசாரியினர் இடதுசாரி ஐக்கிய முன்னணியில் சங்கமமாக, வலதுசாரி மனப்பான்மையினர் வலதுசாரி முன்னணியுடன் ஒன்றுபட எஞ்சி நிற்பது என்ன? திட்டமற்ற தெளிவில்லாத இலட்சியமில்லாத அரசியல் போக்கிற்கு எடுத்துக் காட்டாக சுதந்திரக் கட்சி இருக்கும்.

(13-ம் பக்கம் பார்க்க)

# தீகவாபியில் "செல்வா நகர்" குடியேற்றம்?

## தூதுவரின் கூற்று துயரத்தைத் தருகிறது

### திரு. பெரேராவின் செயலால் பயங்கரம் நேரலாம்

**இலங்கைக்கு வந்துள்ள சீனாவிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு. ஏ. பி. பெரேரா, இந்திய வட எல்லையில் சீனராணுவம் குவிக்கப்படுவதைப் பொய்யெனக் கூறியதைத் தொடர்ந்து ராஜதந்திர வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.**

ராஜ தந்திர வட்டாரங்களுக்கே பொருந்தாத வகையில் திரு. பெரேரா வெளியிட்டுள்ள கருத்தையிட்டு அரசாங்கக் கட்சி உறுப்பினர்களும் பெரும் அதிருப்தி அடைந்துள்ளதாக அறியப்படுகிறது.

சீனாவின் தலைநகரான பீகிங்கிலிருந்து நேராக இங்கு வரும் திரு. பெரேரா, பொதுவுடைமைச் சீனாவின் அந்தரங்கத் திட்டங்களை எங்ஙனம் கண்டு பிடிக்க முடியும்? இந்நாட்டுடன் தேச உறவு பூண்ட இந்தியாவின் கூற்றை வெறும் பொய்யெனக் கூற திரு. பெரேராவுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? இச்செயல் மிகவும் பயங்கரமான சூழ்நிலையை ஆட்சியினருக்கு ஏற்படுத்தக் கூடும் என்றும் அரசியல் அவதானிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இமயமலைப் பிரதேசத்தில் சீனா துருப்புக்களைக் குவிக்கிறது என்று இந்தியா குற்றம் சாட்டுகிறது. இது உண்மையா பொய்யா என்பதை ஆராய இமயமலைப் பிரதேசத்தை — இந்திய-சீன எல்லையை அணுகி ஆராய்ந்தால் தான் அறிய முடியும். சீனாவில் இந்நாட்டின் தூதுவராகக் கடமை பார்க்கச் சென்று, தலைநகரான பீகிங்கிலிருந்து விமான மார்க்கமாக வரும் திரு. பெரேரா எப்படி அறிந்து கொண்டாரோ தெரியவில்லை.

பொதுவுடைமை நாடான சீனா இரகசியங்களை எப்போதுமே எவரிடமும் வெளியிடப் போவதில்லை. அத்தகைய ஒரு நாட்டுக்காக வக்காலத்து வாங்க வேண்டிய அவசியம் இலங்கை ராஜதந்திரி ஒருவருக்கு ஏற்பட்டதற்குக் காரணம் மர்மமாகவே இருக்கிறது.

இதற்கிடையில் திரு. ஏ. பி. பெரேரா நீதி மந்திரியாகப் பதவி ஏற்கப் போகிறார் என்றும் — அவர் மறுத்துங்கூட — கதை பலமாக அடிபடுகிறது. ஆளும் கட்சியில் இந்த நியமனத்துக்கு எதிராக மாபெரும் கிளர்ச்சியும் நடைபெறுவதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

### சிங்களம் படிக்க மறுப்பு

மத்திய வங்கியில் சிங்களம் படிக்க விரும்புபவர்களுக்கான பட்டியல் ஒன்றைத் தயாரிக்க வழக்கம் போல் சுற்றறிக்கைகள் விடப்பட்டன. தமிழ் பேசும் ஊழியர்கள் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் சிங்களம் படிக்க மறுத்து விட்டதாக வங்கி ஊழியர் ஒருவர் நமது நிருபரிடன் கூறினார்.

மத்திய வங்கி ஊழியர்களின் இத்தகைய செயலைப் பாராட்டும் அதே வேளையில், ஏனைய இலாகா ஊழியர்களும் இம் முறையைப் பின் பற்றினால் அரசாங்கத்தின் மொழித் திணிப்பு நடவடிக்கைகளை மண் கவ்வ வைத்து விடலாம் என்பதையும் அறிவுறுத்த விரும்புகிறோம்.

## சிங்களம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"அயல் நாடுகளின் எல்லைகளில் அன்னியர்கள் எவரும் குடியேறக் கூடாது என்பதற்காகக் கடுமையான சட்டங்கள் இருக்கின்றன. துப்பாக்கியால் சுட்டே குடியேற்றக்காரர்களை அந்நாடுகளில் விரட்டிவிடுகின்றனர். இந்நாட்டில் அதைச் செய்வதற்கு ஏன் முயற்சிகள் எடுக்கவில்லை?" இவ்வாறு இக்கூட்டத்தில் ஒருவர் பேசியிருக்கிறார்.

சிங்களத்தை அமுலுக்குக் கொண்டு வருவதில் அரசாங்கம் அநியாயமாகக் காலங் கடத்தி வருவது அபாயமானது. சிங்கள மொழியில் அலுவல் செய்ய முடியாதவர்கள் ராஜ துரோகிகள். இவர்கள் உடனடியாக வேலை நீக்கம் செய்யப்பட வேண்டும்' என்று வேறு ஒருவரும் இக் கூட்டத்தில் பேசினாராம்.

தமிழ் பேசும் மக்கள்

## நம்பிக்கையை இழந்த காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

### தீவிர சிங்கள வாதம் தீராத தலையிடியாகியது

**தமிழ் பேசும் மக்களிடமிருந்து ஆண்டு தோறும் சுமார் நான்கு கோடி ரூபாய் பணத்தை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இழக்கப் போகிறது. இதற்குக் காரணம் தீவிர சிங்கள பௌத்த கூச்சலேயாகும்.**

அண்மையில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகப் பதவி பெற்ற தீவிர சிங்கள பௌத்த வாதியான நிசங்கா விஜயரத்ன பொறுப்பற்ற முறையில் ஆற்றிய அரசியல் சொற்பொழிவு இந்நிலையை உருவாக்கியுள்ளது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் சென்றிருந்த காப்புறுதிக் கூட்டுத்தாபன அபிவிருத்தி அதிகாரியிடம் அங்குள்ள பிரதிநிதிகள் இக் கருத்தை மேலும் வலியுறுத்தி உள்ளார்கள்.

ஆங்கிலத்தில் உள்ள பொலிசி அனைத்தையும் கிழித்து சிங்களத்தில் அச்சடித்த பொலிசிகளையே கொடுக்க வேண்டும் என்ற கூட்டுத் தாபனத்தின் புதிய தலைவரின் கூற்று, தமிழ் பேசும் மக்களுக்கு கூட்டுத் தாபனத்தின் மீது நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது.

புதிய திட்டம் அவர்களின் பணத்திற்கு உத்தரவாதம் அற்றது என்பது உண்மையேயாகும்.

## காணிகளை பலாத்காரமாகக் கைப்பற்றுகின்றனராம்

கல்-ஓயா பள்ளத்தாக்கில் பிரபல முஸ்லிம் கிராமங்களை யொட்டியுள்ள முஸ்லிம் பிரதேசத்தில் தீகவாபி என்னும் பௌத்தாலயம் அமைந்துள்ளது. அந்த ஆலயத்துக்குச் செல்லும் பாதையின் அருகாமையிலுள்ள அரசாங்கக் காணிகளில் "செல்வா நகர்" என்ற பெயரில் தமிழ் பேசும் மக்களைக் கொண்ட ஒரு கிராமம் தோன்றி இருக்கிறதென்று பிரதமருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

தீகவாபியைச்சுற்றியுள்ள அரசாங்கக் காணிகளில் தமிழ் அதிகாரிகள் சிலரின் உதவியோடு தமிழ் பேசுபவர்கள் பலாத்காரமாகக் குடியேறுவதாகவும் பிரதமருக்குப் புகார் செய்யப்பட்டிருக்கிறதாம்.

தீகவாபியில் தமிழ்ப் பேசும் மக்கள் குடியேறும் பிரச்சினை ஆகியவற்றைத் தீர்க்கும்வரை உண்ணாவிரதமிருந்து சாகப்போவதாக நூரளை எம். பி. தெரிவித்ததாகவும் பிரதமர் அவரை அழைத்து சமாதானப் படுத்தியதாகவும் ஒரு சிங்களப் பத்திரிகை கூறுகிறது.

## தமிழ்ப் பிரிவை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வுத் திட்ட மதிப்பீட்டு விபரங்கள் உள்ளன.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த மட்டில் 'எல்லாம் சர்வ நாசம்' என்றவாறு இந்த 859 பக்கம் கொண்ட அறிக்கை சில அந்தரங்க தகவல்களையும் ஆளும் கட்சியின் சூழ்ச்சிகளையும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் முன்னிலைக்குக் கொண்டுவந்திருக்கிறது.

அரசகரும மொழித் திணைக்களத்திற்குள் அடங்கும் தமிழ்ப் பிரிவுக்கான சொற்றொகுதிக் குழுவின் செலவுகள் என்ற தலைப்பில் இதுவரைகாலமும் ஒதுக்கப்பட்டிருந்த தொகை இப்பொழுது அடியோடு சுவாகா ஆகிவிட்டது. 1962 - 63-ம் ஆண்டில் இச்செலவுகளுக்காக ரூ. 4690.00 ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் 1963 - 64-ல்.........????

குறிப்பிட்ட சில அலுவல்களுக்காக தமிழை உபயோகிப்பதற்கென வெளிவரும் பிரசுரங்கள் சம்பந்தமாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது விடயத்தில் சுமார் ரூ. 50,000 த்தை அரசாங்கம் ஏப்பம் விட்டு விட்டது. விபரம் பின்வருமாறு.

| 1961—62 | 1962—63 |
| --- | --- |
| ரூ. 63,721-00 | ரூ. 66,457-00 |

| 1963—64 |
| --- |
| ரூ. 11,804-00 |

(வரவு செலவு அறிக்கை— பக்கம் 262)

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையை அரசாங்கத்தின் சொல்லொன்று பேச்சொன்றான செயல்கள் ஒத்திருக்கின்றன.

மேற்படி இலாகாவுக்குத் தேவையான உதவி ஆணையாளர், மொழிபெயர்ப்பு அத்தியட்சர் போன்ற பதவிகள் எல்லாம் காற்றோடு காற்றாக்கப்பட்டு விட்டன. இதற்கு எதுவித மான்யமும் ஒதுக்கப்படவில்லை.

இப்படியான நடவடிக்கைகளின் மூலம் மொழி இலாகாவின் தமிழ்ப் பிரிவை ஒழித்துக்கட்டி விடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதென தமிழ் அரசியல் வட்டாரங்களில் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் முன்னாள் மொழி இலாகாத் தலைவர் திரு. எல். ஜே. டி. எஸ். செனவிரத்ன இருக்கும் பொழுதே இரகசியமாகத் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. இது பற்றிய விபரங்கள் எம்மிடம் சிக்கியுள்ளன. விரைவில் 'சுதந்திரன்' மூலம் வாசகர்கள் அவற்றை அறியலாம்.

## விழிப்புணர்ச்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் போதிய கவனம் செலுத்தாவிடின் நமது உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டு நிச்சயமாக நசுக்கப்பட்டுவிடுவோம்.

'எனவே, முஸ்லிம்களாகிய நாம் பெருமானாரின் போதனைகளான ஐக்கியம், சகிப்புத்தன்மை, தைரியம் ஆகியவற்றைக் கையாண்டு நமது சமுதாயத்தை எதிர்நோக்கும் எதிர்கால அபாயங்களிலின்றும் நம்மைக் காப்பாற்றுவோமாக.

நமது நாட்டு நிலைமைகளை உய்த்துணர்ந்து முஸ்லிம்கள் தம் மாறுபட்ட, வேறுபட்ட கட்சிப் பாகுபாடுகளைக் களைந்தெறிந்து தமக்கென வொரு தனிப்பட்ட ஸ்தாபனத்தை நிறுவுந் துறையில் முயற்சிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.


**அழகானவர்களாய் திகழவேண்டுமா?**

சருமத்திலுள்ள சொறி, சிரங்கு முதலியவற்றால் ஏற்பட்ட வடுக்கள், தேமல், பருக்கள் முதலிவை நீங்கி சருமம் வசீகரத்துடனும், இளமையுடனும் திகழ ஓர் அற்புத மருந்து இருக்கிறது. 10 சத முத்திரையுடன் விபரங்களுக்கு எழுதவும்.

கருணைவத்தி திசாநாயக்க,
208, கண்டி ரோடு, கம்பளை.

**கலப்பற்ற உயர்தர அலுமினியம்**
**மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு**
இவற்றிற்கு




**டொலர்**
**அலுமினியப் பாத்திரங்கள்**
**டொலர் கோப்ரேசன்,**
14, டாம் வீதி, கொழும்பு-12.




கூட்டாக எழுதும் தொடர்கதை

# கதிர் இரண்டு வெண் பனிப்புகார்

செங்குத்தான சரிவின் மேல் விளிம்பில் நின்றபடி, பள்ளத்தாக்கின் பயங்கரம் கலந்த கவர்ச்சியைக் கண்களால் விழுங்கியபடி நிற்கின்றான், அவன். அதிகாலையின் குளிர் காற்று உடலை வருடி விறைக்க வைப்பதோடு, மென்காற்றில் அலைப்புறும் நாணலாக உடலை நடுங்கவும் வைக்கிறது. பள்ளத்தாக்கின் முழு அழகையும் காணமுடியாதவாறு, குவிந்து கிடக்கும் வெண்பனிப் புகார் திரை போடுகிறது.

வெண்பனிப் புகாரின் மென்திரையையும் மீறிக் கண்ணொளிபாய்கின்ற பகுதிகளில், வளர்ந்திருந்த மரங்களும், கொடிகளும், செடிகளும் நிழல்களாக அசைவுறுகின்றன. பள்ளத்தின் நடுமுதுகுப் பீலியில், பாறைகளை உருட்டித் தள்ளி, வளைந்து, நெளிந்து, அசைந்து ஓடுகின்ற சிற்றாறு ஒன்றின் மெல்லிய ஒலி ஜலதரங்கம் மீட்பது போலக் கேட்கிறது.

அவன் அவற்றைச் சுவைத்தபடி நிற்கின்றான். மலைநாட்டின் எழிற் கோலங்களைப் பற்றிப் பலர் அவனுக்குக் கூறியபோதெல்லாம், அவற்றை எல்லாம் தானும் கண்டு மகிழ வேண்டும் என்று ஆசைப்பட்டிருக்கின்றான். அவ்வாசை இந்த வடிவத்தில் நிறைவேறும் என்று அவன் கனவிலும் எண்ணியது கிடையாது.

நதிகளின் கரைகளிலும், மேகம் கவிந்த மென் புகார் மலைகளிலும் சஞ்சரிக்க வேண்டும் என்ற அவனது ஆசை இந்த ரூபத்திலா நிறைவு பெற வேண்டும்?

'ஆசை...?'

அவன் வாழ்க்கையில் பலவற்றிற்காக ஆசைப் பட்டிருக்கின்றான். இளவயதில் விபரம் தெரியாத, பொருளற்ற ஆசைகளிலிருந்து விபரம் தெரிந்த வயதில் பொருள் தெரிந்த ஆசைகள் வரை, அவன் பட்டிருக்கிறான்.

'அம்மா!' என்று அழைப்பதற்குத்தான் அவனுக்கு எவ்வளவு ஆசை; ஆனால் மண்ணிலே அவன் உடல்புரண்ட மறுகணமே, அம்மா என்று அழைப்பதற்குரிய உருவம் மறைந்து விட்டது. மகனைத் தூக்கி வளர்த்துச் சீராட்ட உள்ளம் இருந்த தாய்க்கு உருவம் தான் இருக்கவில்லை. 'ஐயா' என்று வாய்நிறைய அழைப்பதற்கும் அவனுக்கு ஆசைதான். ஆனால், உருவம் இருந்த அந்தத் தகப்பனுக்கு உள்ளந்தான் இருக்கவில்லை.

நடுேன் மரங்களின் இலைகளிலிருந்த பனித்துளிகள், காற்றின் சிறு அலைப்பால் அலைக்கப்பட்டு, அவனுடலில் விழுந்து தெறிக்கின்றன. அவன் விறைத்துப் போய் நிற்கின்றான். ஒவ்வொரு நாளும் அதிகாலை வேளைகளில் அவன் இவ்வாறுதான் வந்து நின்று, பள்ளத்தாக்கையும், வெண்பனிப் புகாருக்கீழே நிழல்களாக அசைகின்ற மரங்களையும், ஜலதரங்கம் மீட்பது போல மெல்லென எழும் சிற்றாற்றின் சலசலப்பையும், பெரும் மலைப்பாம்பாக வளைந்து செல்லும் வீதியையும் பார்த்து ரசித்தபடி நிற்பான்.

அவன் கண்டிக்கு வந்து வேலையேற்று ஆறு நாட்களாகிவிட்டன; ஏழாவது நாளின் விடிகாலை வேளையில் கால் பதித்து அவன் உள்ள நிலத்தில் வீட்டின் நினைவு, வத்தூளைக் கொடியாகப் படர்கின்றது.

இங்கு வந்ததில் இருந்து புவனத்தின் நினைவு எல்லா நினைவுகளையும் மீறி அதிகமாக இருக்கிறது. பரிவு என்பதன் நிலையை அவன் உணர்ந்து கொண்டான். பாடசாலைக்குச் சென்ற முதல் நாள், மாணவர்களை அறிமுகம் செய்து கொள்வதற்காக அவர்களது பெயர்களை விசாரித்த அவ்வேளை...

"தம்பி, உமது பெயர் என்ன?..."

"ஆறுமுகம்..."

"உமது பெயர்...?"

"லச்சுமி..."

"உமது...?"

"புவனேஸ்வரி..."

—அப்போது, அவன் துடித்த துடிப்பு? ஒருகணம் அடிவயிற்றிலிருந்து உச்சியை நோக்கி எழும்பிய வேதனைக் குமிழிகளின் சிதறலில் அவன் பட்ட பாடு...'புவனம்...!

ஆதவனின் ஒளிக்கதிர்கள் வெண்பனிப்புகாரைத் துழாவிக் கொண்டு எழுகின்றன. உடலின் விறைப்பிற்குக் கதிரவன் கதிர்கள் கணகணப்பைக் கொடுக்கின்றன.

ஆறு நாட்களுக்கு முன், இத்தகைய ஒரு அதிகாலை வேளையில்தான்......

* * *

கூண்டிப் புகையிரத நிலையத்திற்குள் முக்கி முனகிக்கொண்டு, கர்ப்பவதியின் பெருமூச்சோடு, நுழைந்து நிற்கிறது, புகைவண்டி. ராஜா பெட்டிகளைத்

**செங்கை ஆழியான்**

தூக்கிக் கொண்டு, புகைவண்டியை விட்டிறங்கிப் பிளாட்பாரத்தில் கால்களைப் பதிக்கின்றான்.

புதிய இடம், புதிய சூழ்நிலை எல்லாம் அவனுக்கு மனதில் விபரிக்க முடியாத உணர்ச்சிகளை எழுப்புகின்றன. திக்குத்திசை தெரியாமல் ஒருகணம் தயங்கி நிற்கின்ற அவன் கால்கள் மறுகணம், திகைப்பு நீங்கிவிட, வாசலை நோக்கி நடக்கின்றன.

'றிக்கற்'றைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தபோதுதான் அந்த எதிர்பார்க்காத சந்திப்பு நிகழ்கிறது.

"மாத்தையா, கார் ஓணதே...?"

மொழி மாறினாலும், அந்தக் குரலை, எங்கோ பல தடவைகள் அவன் கேட்டிருக்கிறான். எங்கே...... அவனுடைய வாழ்க்கையில் ஒரு சிறு கறையைப்படியச் செய்தவனின் குரலா...?

ஆரியகுளச் சந்தி...... வாகைமர நிழல்... கார்...!

கைகளைப் பெட்டிகளின் பாரம் நிலம் நோக்கி இழுக்க, தலையைத் திருப்பிப் பார்க்கின்றான்; பார்த்தவனின் மூளை நரம்புகளைப் பார்க்கப்பட்டவனின் உருவம் ஒரு உலுப்பு உலுப்புகிறது.

"சின்ராசு...?" ராஜாவின் உதடுகளைப் பிளந்து கொண்டு, அவனையறியாமலேயே வார்த்தை பிறக்கின்றது.

சின்ராசும் ஒருகணம் திகைத்துப் போய், ராஜாவை வெறித்துப் பார்க்கிறான். இருளடைந்த சின்ராசுவின் முகம் படிப்படியாகச் சகய நிலைக்கு மீள்கின்றது; புன்னகை உதடுகளைக் கிழிக்கின்றது.

"ராசா... நீயா?..."

ராஜா அவனை அருவருப்போடு பார்க்கின்றான்.

"நானுன்னை எதிர்பார்க்கவே இல்லை! வேலைக்காக வருகிறாயா?" சின்ராசுதான் திரும்பவும் பேசுகிறான்; "வா, ராசா, நீ போகவேண்டிய இடத்திற்கு உன்னை நானே அழைத்துப் போறேன்!..."

"தேவையில்லை... நான் பஸ்ஸிலே போய்க் கொள்கிறேன்!"

"என்னிலை உனக்கு வலு கோபம்,போலிருக்கிறது!..."

—சின்ராசு ராஜாவிற்கு அருகே வந்து, அவனுடைய ஒரு பெட்டியை வாங்கிக் கொள்கிறான். ராஜாவால் மறுக்க முடியவில்லை.

கார் விரைந்தோடிக் கொண்டிருக்கிறது. ராஜா கண்களை முன்னால் மேய விட்டுவிட்டு மௌனமாக அமர்ந்திருக்கின்றான். கண்டி நகரின் எழிலைச் சுவைக்கக்கூடிய மன நிலையில் அவனிருக்கவில்லை. எதையோ செய்யக்கூடாததைச் செய்துவிட்டதாக ஒரு வித பிரமை.

"ராசா, நீ போக வேண்டிய விலாசத்தை இன்னொருக்காச் சொல்லு..."

அவன் பாலாவின் தந்தையின் முகவரியைக் கூறுகிறான்.

கார் விரைந்து கொண்டிருக்கிறது.

"யாழ்ப்பாணத்தில் எல்லாரும் சுகமாக இருக்கின்றார்களா...?"

"இருக்கிறார்கள்......"

"என்ன ராசா, கதைக்கப் பஞ்சிப்படுகிறாய்? நானப்படி என்ன பிழை செய்து விட்டேன்...!"

"அந்தப் பிழை என்னவென்று நான் சொல்லியா, உனக்கு அது தெரிய வேண்டும்?"

ஒரு திருப்பத்தில் கார் திரும்பிவிரைகிறது; லாகவகமாகக் காரைத் திருப்பிய பின், சின்ராசு ராஜாவைத் திரும்பிப் பார்க்கின்றான்;

"நான் ஒரு கார்க்காரன்..."

"தெரியும்!"

"இந்த நிலையில் நான் எப்படிக் கனகத்தை எனக்கு மணம் செய்து தரும்படி கேட்க முடியும்?"

"செய்கின்ற தொழிலில் ஏற்றத் தாழ்வுகளில்லை! மனங்களில்தான் ஏற்றத் தாழ்வுகள்! கனகமக்கா உன்னை விரும்பியபடியால், நீ துணிந்து கந்தையரிடம் பெண் கேட்டிருக்கலாம்!"

"கேட்கத்தான் ராசா, விரும்பினேன்! ஆனால், கனகம் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை! இதற்கு ஒருபோதும் கந்தையர் ஒப்புக்கொள்ள மாட்டார் என்று நம்பினாள்! நான் போய்க் கந்தையரிடம் பெண் கேட்பதன் மூலம், நம் தொடர்பைப் பரகசியமாக்குவதன் மூலம் நாம் பிரிக்கப்படலாம்என்று கூறினாள்! அதனால் எங்களுக்கு இதைவிட வேறு வழியிருக்கவில்லை......"

சின்னராசுவின் வார்த்தைகள் ராஜாவிற்கு அவன் மேல் ஒரு வித மதிப்புக் கொள்ள வைக்கின்றன. திரும்பிச் சின்னராசுவைப் பார்க்கிறான்:

"அப்படியானால்..." வார்த்தைகள் வெளிவரத் தயங்குகின்றன. தயக்கத்தைச் சின்னராசு புரிந்து கொள்கிறான்.

"கேள், ராசா...!"

"அப்படியானால்...... நீர் கனகமக்காவைக் காதலித்தீரா?..."

"உண்மை......நூற்றுக்கு நூறு உண்மை, ராசா! வெளியுலகம் நான் கனகத்தை ஏமாற்றி மோசம் செய்து விடுவேன் என்று நம்புகிறது! நான் காவாலிதான்...ஆனால், கனகத்தின் அன்பின் முன் நான் நல்லவனாகிவிட்டேன்! என் வாழ்க்கையில் பற்றையும், நம்பிக்கையையும், இனிமையையும் காட்டியவள் அவள்! அவள் என் உயிர், ராசா! என் உயிர்..." இவற்றைக் கூறுகின்றபோது சின்னராசுவின் முகபாவங்களையும், கண்களில் வீசிய ஒளியையும் ராஜா கவனிக்கிறான்.

கார் விரைகிறது; மௌனம் சிறிது நேரம் நிலவுகிறது.

"நீங்கள் கண்டிக்கு எப்போ வந்தீர்கள்...?"

"ஆறு மாதங்களுக்கு மேலாகுகின்றது..."

"இப்ப எங்கை இருக்கிறீர்கள்?..."

"கண்டியில்..... திருகோணமலை வீதியில்...! விரும்பினால் வருவாயா? உன்னைக் கண்டால் கனகம் மகிழ்ந்து போவாள்..."

"நேரம் கிடைக்கும்போது வருகிறேன்........கனகமக்கா இப்போது எப்படி இருக்கிறா?..."

"நல்ல மகிழ்ச்சியோடுதான் இருக்கிறாள்..அவவுக்கு ஒரு குறையும் வராமல்தான் நான் பார்க்கிறேன்! ஆனால், அவளுடைய ஒரே ஒரு குறையைமட்டும் என்னால் பூர்த்தி செய்யவே முடியவில்லை!..." சின்னராசு சிறிது மௌனத்தின் பின் தொடர்கின்றான்: "தாய், தந்தை, தம்பி, தங்கை என்ற உறவில் வாழ்ந்தவள் அவள்! அவர்களை வெறுத்துப் பிரிந்து வாழ்வது அவளுக்குப் பெருங் குறையாக இருக்கிறது! நான் நினைக்கிறேன் ராசா, பெற்றார், உற்றார் விருப்பத்தோடு செய்கின்ற திருமணத்தில்தான் முழு இன்பம் இருக்கிறது என! ஆனால், நான் ஒருபோதும் நாங்கள் செய்ததைப் பிழையென்று சொல்லவே மாட்டேன்! நாங்களும் சந்தோஷமாகத்தான் இருக்கின்றோம்..."

கார் ஒரு மலைப்பாதையில் திரும்பி ஏறுகிறது.

"ஆனாலும் உங்கள் வாழ்க்கையில் ஒரு குறை இருக்கத்தானே செய்கிறது...?"

"உண்மைதான்! ராசா, அக்குறை இன்னும் ஏழு மாதங்களில் நீங்கிவிடும்..."

ராஜா வியப்போடு அவனைப் பார்க்கிறான்:

"எப்படி......?"

"இன்னும் ஏழு மாதங்களில் கனகம் ஒரு குழந்தைக்குத் தாயாகிவிடப் போகிறாள்!" இதைக் கூறும்போது சின்ராசுவின் முகத்தில் பெருமித ரேகைகள் படர்கின்றன.

கார் ஒரு மாளிகையின் முன் வந்து நிற்கின்றது.

* * *

"தம்பி! என்ன அப்படி இயற்கையிலே மயங்கிப்போய் நிக்கிறீங்க..."

ராஜா திரும்பிப் பார்க்கின்றான்.

"நீங்களா...?"

"நீங்களா", என்ற ராஜாவின் விளிப்பிற்குரியவள் அவன் தங்கியிருக்கும் வீட்டின் சொந்தக்காரி. அவளுக்குக் கூட்டிக் கழித்தால் இருபத்தி ஐந்து வயதிற்குள்தான் இருக்கும். கண்டிக் கொன்வென்றில் அவள் ஓர் ஆசிரியை. அவளுடைய தந்தை கண்டியில் கடை வைத்திருக்கும், ஓர் இந்திய வர்த்தகர். அவளுடைய கணவன் ஒரு 'கொம்பனி'யின் மனேச்சர். பாலாவின் தந்தை இவர்களோடேயே தங்கியிருப்பதால், அவனுக்கும் அங்கேயே தங்க ஓர் அறை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

"இயற்கையில் அவ்வளவு அழகிருக்கிறதா...?" என்று கேட்கிறாள் அவள்,

"அழகுதானே மயங்கவைக்கும்?..."

(13-ம் பக்கம் பார்க்க)

**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

# 'நாம் முஸ்லிம்' இயக்கம் ஆரம்பித்தல் அவசியம்

## உரிமைகளைப் பேண அதுவே வழி வகுக்கும்

-அல்-ஹாஜ் வி. எம். ஷம்சுதீன்-

**ஒற்றை ஆட்சித் திட்டத்தின் மூலம் இந்நாட்டில் வதியும் ஏனைய இன மக்களை இம்சித்து வதைக்கவோ, ஒழித்துக்கட்டவோ ஆளும் கட்சியும், தீவிர பௌத்த சிங்களவாதிகளும் முயற்சிகள் எடுத்து வருகின்றனர். இங்கு வாழும் ஒவ்வொரு இனத்தவரும் தத்தமது இன உரிமைகளை, மதாசாரங்களைக் காத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. 'நாம் சிங்களவர்' என்ற ஒரு நிறுவனம் ஏற்படுவதாக வெளியாகிய செய்தியைத் தொடர்ந்து 'நாம் முஸ்லிம்கள்' என்ற ஒரு இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கட்டுரையாளர் வேண்டுகோள் விடுக்கிறார். நபிகள் பெருமான் (ஸல்) பிறந்த தினத்தை ஒட்டி இக்கட்டுரை வெளியாகிறது.**

ஈழத்திருநாட்டின் அரசியல் நிலைமை தமிழ் மொழி பேசும் இனத்தவர்களுக்குப் பல தொல்லைகள் கொடுத்து வருகின்றது. இந் நாட்டைப் பொன் கொழிக்கச் செய்த தென்னக இந்திய வம்சாவளியினர் வாக்குரிமை — குடி இயல் உரிமை இழந்தனர்! இன்று அவர்கள் தொழில் உரிமையும் ஊசலாடுகிறது. இவர்களுக்குச் செயற்கையாக நாடற்றவர்கள் என்ற உலகிலில்லாத பெயரும் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களை ஏமாற்றி இலங்கைக்கு அழைத்து வந்த வெள்ளை முதலாளிகள், கோடி, கோடியாக, இலங்கையிலிருந்து இலாபத்தைத் தட்டிக் கொண்டு போனார்கள். அவர்களும் இவர்களைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் மௌனம் சாதிக்கின்றனர்.

### முதல் கள்ளத்தோணி

முதலாவதாக, வங்காளத்திலிருந்து வந்த கள்ளத் தோணியாக விஜயன் வருகைக்கு முன்னரே, இலங்கையில் திராவிடர்கள் வசித்திருக்கின்றனர். விஜயன் வழித் தோன்றல்கள் நீங்கலாக, மற்றவர்கள் எல்லோரும் கள்ளத் தோணிகள் என்று சரியாகவோ, பிழையாகவோ, சமீபத்தில் ஏற்படுமென நினைக்கின்றேன். இதைப்பற்றி இலங்கைத் தமிழர்கள் சரியாகப் புரிந்து கொண்டு, ஒரே அணியின் கீழ் திரண்டு செயல்படுகின்றனர். புரிந்து கொண்டதும், தங்கள் மொழி, இன, அரசியல் உரிமைகளுக்காகத் தியாகம் செய்கின்றனர். தமிழரசாரின் இயக்கைத்தை எவராலும் தடைசெய்ய முடியாது. மூதூர் மக்கள் ஜனுப் முகம்மதலி அவர்களைத் தங்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்தது போல், ஊர்காவற்றுறை மக்கள் — தங்கள் ஊர் காவற்காரராகிய திரு. நவரத்தினம் அவர்களைத் தேர்ந்தெடுத்து வாகை சூடுவார்கள் என நம்புகிறோம். யூ. என். பி.க்கு தாளம் போட்ட தமிழ்க் காங்கிரசும் இவர்களைத் தடுத்து நிறுத்திவிட முடியாது.

### இரண்டாம் தரப் பிரஜைகள்

பிரஜா உரிமைச் சட்டத்தை யூ. என். பி. அரசாங்கம் செய்ததும், இச் சட்டம், இலங்கை வம்சாவளிகளுக்கும், பதிவுமூலம் இலங்கைப் பிரஜைகளாக வருகிறவர்களுக்கும் ஒரே மாதிரி என்று கூறப்பட்டது. இன்று இலங்கையில் பதிவு மூலமாகப் பிரஜைகளானவர்களுக்கும் பேதம் கற்பித்து — இவர்களை இரண்டாந் தரப் பிரஜைகளாக்க ஒரு சில வகுப்புவாதிகள் முயற்சிப்பதாகச் சொல்லப்படுகிறது. டாக்டர் கலீல் அவர்கள் யூ. என். பி. சார்பிலுள்ள, மக்கள் சபை பிரதிநிதியாக இருந்துங்கூட, தமிழரசுக் கட்சியைப் பாராட்டி, அதன் தலைவர் செல்வநாயகம் அவர்களையும் மெச்சினர்!

### முஸ்லிம்கள் ஓர் இனம்

விஜயன் ஆதியில் இலங்கைக்கு வந்தானோ, அஃதே போல், முஸ்லிம்கள் அரபி நாட்டிலிருந்தோ, மலையாளத்திலிருந்தோ, அல்லது தென்னிந்தியாவிலிருந்தோ இலங்கைக்கு வந்து குடியேறியிருக்க வேண்டும். இலங்கை முஸ்லிம்களின் தாய் மொழி தமிழாக இருப்பதால், அவர்கள் பெரும்பாலும், தமிழ் நாட்டிலிருந்தே வந்திருக்க வேண்டுமென்பது எம் ஆய்வின் முடிவு. அவர்கள் எம் மொழி பேசினும் அவர்கள் எல்லோரும் ஓரினம்!

உலக இரட்சகர், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னுடைய இறுதிப் பிரசங்கத்தில், "மா ஜனங்களே! நான் குரைஷிக் குலத்தவன் என்பதற்காக பெருமை கொள்ளவில்லை. அரபியும — அரபி அல்லாதவனும் ஒன்று தான்" எனக் கூறினார்கள்.

'முஸ்லிம்கள், 'வில்லங்கம் எல்லாம் தமிழர்களுக்குத் தான்' என நினைப்பது பின் புத்தியாகும். முஸ்லிம்களும் மொழியில் தமிழர்கள் தான். 'நாம் சிங்களவர்கள்' என்ற இயக்கமொன்றைச் சிங்களவர்களில் சிலர் இலங்கையில் ஆரம்பிக்க எண்ணியிருப்பதாகச் சுதந்திரனில் படித்தேன். அது உண்மையானால் முஸ்லிம்கள் கதி என்ன என்பதைச் சோனகச் சங்க ஆயுள் காலத் தலைவர், சேர் ராசீக் பரீது அவர்களும்' மற்றும் முஸ்லிம் தலைவர்களும் சிந்திக்க வேண்டும்.

> "நீங்கள் பல பிரிவுகளாகப் பிளவுண்டு இருந்த காலத்தில் இறைவன் உங்களை ஒரே கயிற்றில் பிணைத்து விட்டான்."
>
> (அல்—குர் ஆன்)

### சிங்கள—முஸ்லிம் கலகம்

1915ல் இலங்கையில் சிங்கள—முஸ்லிம் கலகம் நடந்தது. அது சமயம் கொழும்பிலுள்ள, கிறிஸ்தவ ஆங்கிலப் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தேன். இக் கலகத்துக்கு உண்மையான காரணமென்ன வென்பதை நான் அறியேன்.

எப்படியிருப்பினும், அது காலை சில முஸ்லிம் தலைவர்கள், இக் கலகம் 'இந்திய முஸ்லிம்களுக்கு எதிரானது தானே' என எக்காளமிட்டார்களாம். இறுதியில் இக் கலகம், இலங்கை வம்சாவளிகளான முஸ்லிம்கள் இடையே பரவியதும், இலங்கை முஸ்லிம் தலைவர்கள் கண் திறந்தார்களாம்!

### நாம்-முஸ்லிம்கள்

நாம் முஸ்லிம்கள் என்ற பெயரில் ஓர் இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும். இவ்வியக்கம், விரோதமாகச் செயல்படக்கூடாது! முஸ்லிம்களின் நலங்கருதியதாகவே இருக்க வேண்டும். இவ்வியக்கத்தை மக்கள் பிரதிநிதி சபையிலுள்ள (பார்லிமெண்ட்) எல்லா முஸ்லிம் எம் பிக்களும், தமிழரசுக்கட்சியைச்சார்ந்த மூதூர் முதலாவது எம். பி. ஜனுப் முகம்மதலி உள்பட எல்லோரும் சேர்ந்து ஆரம்பிக்க வேண்டும். இவர்கள் இலங்கை முஸ்லிம்களுக்கு முன்னோடியாக வழிகாட்ட வேண்டும். இதற்குள், சோனகன், சம்மாங்காரன், சோனகர் சங்கத்தைச் சார்ந்தவன், முஸ்லிம் லீக்கைச்

(13-ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களுக்குச் செய்யும் பச்சைத் துரோகம்

### மூதூரில் உருவாகும் பயங்கர நிலைமை

**மூதூர்த் தொகுதி பரம்பரை பரம்பரையாக முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் சொந்தமான ஒரு பிரதேசம். இப்பிரதேசத்தை அபகரித்து இலங்கை மக்களின ஏகபோக உரிமையாக்கிவிட வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. இது முஸ்லிம்களுக்குச் செய்யும் பச்சைத் துரோகமாகும்.**

இவ்வாறு மூதூரில் பெருகி வரும் சிங்களக் குடியேற்ற அபாயத்தையிட்டு நம்து நிருபரிடம் ஜனுப் முகம்மதலி கூறினர்.

அவர் தொடர்ந்து கூறுகையில், "ஆளும் கட்சியை அண்டி தமது சுய ஆதரவு தேடும் சில முஸ்லிம் தலைவர்கள் தங்களையும் தங்கள் சுற்றத்தாரையும் வளர்த்து விட முனைகிறார்களேயன்றி, தம்மின மக்களின் நிலையையிட்டு எள்ளளவும் கருதுவது கிடையாது. மொழி உரிமை போய், மத உரிமை பறிபட்டு, தங்கள் பிரதேசங்களில் சுயமாக வாழும் உரிமையும் இழந்து மூதூர் முஸ்லிம்களும், இந்துக்களும், கிறிஸ்தவர்களும் நாடற்றவர்கள் வரிசையில் கொண்டு வரப்படும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

### மங்கள வேவா

"தோப்பூருக்கு அருகாமையிலுள்ள மங்களவாவிக் குளத்தை, சமீபத்தில் அங்கு பலாத்காரமாகக் குடியேறிய அன்னியர்கள் மங்களவேவா என அழைத்து வருகிறார்கள். இவ்விடத்திற்கருகாமையிலுள்ள காணிகளில் அன்னியர்களைக் குடியேற்ற அரசாங்கம் திட்டமிடுவது மிகவும் அநீதியானதும் கண்டனத்திற்குரியதுமாகும். அக் குளத்தைச் சுற்றி தமிழர்களும் முஸ்லிம்களும் பரம்பரை பரம்பரையாக வசித்து வருகிறார்கள். இவர்களில் அநேகர் காணியற்றவர்கள். எனவே, அக்காணிகளில் கொட்டியாபுரப் பற்றுக் காணியற்ற மக்களையே குடியேற்றும்படியும், அன்னியர்களைக் குடியேற்றும் திட்டத்திற்கு எமது பலத்த எதிர்ப்பையும் கண்டனத்தையும் காணி அமைச்சருக்கும் மாவட்ட மாகாண அதிபருக்கும் தெரிவித்திருக்கிறேன்."

மங்கள வாவி குளத்தைச் சுற்றியுள்ள காணிகளைக் கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ்க் கொண்டு வந்து அவற்றை அப்பகுதியில் பண்டுதொட்டு வாழும் காணியற்ற மக்களுக்கே கொடுக்கும்படி ஜனுப் முகம்மதலி கேட்டுள்ளார். சர்வாதிகாரப் போக்காக அரசாங்கம் நடப்பதை ஸ்தல மக்கள் சார்பாகத் தாம் கண்டித்துத் தமது பலத்த எதிர்ப்பைத் தெரிவிப்பதாக ஜனுப் முகம்மதலி நமது நிருபரிடம் கூறினர்.

மூதூர்த்தொகுதியிலுள்ள பல காரியாதிகாரிகளின் பிரிவுகளையும், சிங்கள மக்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள வெவ்வேறு பிரிவுகளாக்கியிருக்கின்றனர். ஏதோ சலுகைகள் செய்வதாக முஸ்லிம்களை ஏமாற்றிக்கொண்டும், ஒருசிலரைத் 'தலைவர்கள்" என்று அழைத்துக் கொண்டும், படிப்படியாக முஸ்லிம்களுக்கு அரசாங்கம் துரோகம் செய்து இனத்தை அழிக்க முனைகிறது என்று ஜனுப் முகம்மதலி மேலும் கூறினர்.

### ஆலிம் அப்பா கந்தூரி

சினக்குடாவிலுள்ள ஆலிம் அப்பா மௌலூத் சங்கத்தின் 18-வது வருடக் கந்தூரி எதிர் வரும் 11-8-63-ல் நடைபெறவிருக்கிறது. பல்லாயிரக் கணக்கான முஸ்லிம் மக்கள் இவ்விழாவுக்குத் திரண்டு வருவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

### கலை விழா

கடந்த வாரம் பஸ்யாலைப் பகுதியைச் சேர்ந்த நாம் புளுவை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் வாசிகசாலைத் திறப்பு விழாவும், கலைவிழாவும் மிக விமரிசையாக நடந்தேறியது.

வாசிகசாலைத் திறப்பு விழாவுக்கு அல்ஹாஜ் அப்துல் காதர் அவர்களும், கலை விழாவுக்கு மீரிகமைத் தொகுதி எம். பி. திரு. விஜயபாகு விஜயசிங்க அவர்களும் தலைமை தாங்கினர்கள். கலை விழாவில் ஜனுப். செய்யது ஏ. மௌலானா அவர்களால் எழுதப்பட்ட "நீயா அவன்" என்ற ஓரங்க நாடகமும் முக்கிய இடம் பெற்றது.


### விபுலானந்தனுக்கு..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வை. க. சிவப்பிரகாசம் எம். ஏ. அவர்கள் கூறினர்.

திரு. ஈழவேந்தன் கருத்துரை வழங்கியபின், மன்றச் செயலாளர் திரு. இ. செங்காரப்பிள்ளை நன்றியுரை கூறினர்.

செல்வன் நேசதுரை தியாகராசா குழுவினரின் தாளவாத்தியக் கச்சேரியும் நடைபெற்றது.


ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றே தான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி
கொழும்பு-14.



# புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். படத்துக்கு டைரக்டர் சந்திரபாபு

## ஜுபிலி பிலிம்சார் முயற்சி



புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் நடிக்கும் படம் ஒன்றினை சிரிப்பு நடிகர் சந்திரபாபு டைரக்ட் செய்யப் போகிறார். இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை ஜுபிலி பிலிம்சார் செய்து வருகின்றனர்.

**நமது சென்னை நிருபர்**

பல வெற்றிப் படங்களைத் தயாரித்த ஜுபிலி பிலிம்சார் ஒரு சிறந்த நகைச்சுவைப் படத்தைத் தாயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர். ஒன்றுக்கு மேல் ஒன்றாக தொடர்ந்து வெற்றிக்கு மேல் வெற்றியீட்டி 'எம். ஜி. ஆர் சீசன்' என்று தமிழகம் அனைத்தும் போற்றும் நிலையிலுள்ள புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் இப்படத்தில் கதாநாயகனாக நடிக்கச் சம்மதித்து விட்டாராம்.

புரட்சி நடிகருக்கு இணையாகத் தோன்ற சாவித்திரி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

ஆரூர்தாஸ் இப்படத்துக்கான கதைவசனத்தை எழுதுகிறார். நகைச்சுவை நடிகர் சந்திரபாபு இப்படத்தை டைரக்ட் செய்யப் போகிறார்.

### எஸ். எஸ். ஆர் டைரக்டர்

இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன் தனது துணைவி விஜயகுமாரியுடன் தோன்றும் 'அல்லி' என்ற படத்தை தானே டைரக்ட் செய்ய முற்பட்டுள்ளாராம். இப்படத்தில் அவருடன் சௌகார் ஜானகியும் தோன்றுகிறார்.

'அல்லி' திரைக்கதை வசனத்தை நாகர் கோயில் பத்மநாதன் எழுதுகிறார். கே. வி. மகாதேவன் இசை அமைக்கிறார்.

# புதிய வரியால் வருவாய் பாதிப்பு

## ஒரே வாரத்தில் 42 ஆயிரம் குறைந்து விட்டது

சென்னை நகரசபை திடீரென சினிமாவுக்கான தமாஷா வரிகளை உயர்த்தியதன் காரணமாக சென்னையில் திரைப்பட வருமானம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரே வாரத்தில் ரூ. 42,000 வருமானம் குறைந்துள்ளது.

சென்னை நகரசபையினரின் இந்த வரி கூட்டுதலால் சாதாரண ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய ஒரே பொழுதுபோக்கான சினிமாவுக்கு உலை வைக்கவேண்டியிருக்கிறது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் ரூ. 42,000 வருமானத்தில் குறைவு ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து இரட்டிப்பு வரி வசூலை சென்னை நகரசபை கொண்டுவந்தது. சென்னை நகரிலுள்ள மொத்தம் 50 படமாளிகைகளில் முக்கியமான 28 படமாளிகைகளின் வரவைக் கொண்டே இந்த வசூல் குறைவுக் கணக்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஏனைய படமாளிகைக் கணக்கையும் சேர்த்தால் வசூல் மிகவும் சொற்பம் ஆகிவிடும். பல லட்சக்கணக்கான ரூபாய்களை முதலீடு செய்து படத் தொழிலில் முடக்கியுள்ள சென்னைத் தயாரிப்பாளர்களுக்கு இந்த நிலை பெரிய கவலையைக் கொடுத்துள்ளதாக அறியக் கிடக்கிறது.

### எம். ஜி. ஆரின் டைரக்ஷன்

இரண்டு வாரங்களுக்கு முன்னர் அருணாசலம் ஸ்டுடியோவில் தானே நடிக்கும் படத்தை புரட்சி நடிகர் எம். ஜி.ஆர். டைரக்ட் செய்தார். கௌரி பிலிம்சார் தயாரித்துவரும் "காதல் பரிசு" என்ற நாடகத்துக்கான காட்சிகள் படமாக்கப்பட்டன.

இப்படத்தை டைரக்டர் யோகானந்தா தயாரித்து டைரக்ட் செய்து வருகிறார். அன்று படப்பிடிப்புக்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டிருந்தன. டைரக்டர் யோகானந்துக்குத் திடீரென உடல்நலமில்லாது போய்விட்டது. சந்தர்ப்பத்தை அனுசரித்து அன்றைய காட்சிகளைத் தானே டைரக்ட் செய்து திருப்திகரமாக முடித்தார் எம். ஜி. ஆர்.

தங்கையின் வாழ்வுக்காக தன்னைத் தானே தியாகம் செய்து வரும் ஒருவரின் பரிதாப நிலைகளை நிலைக்களமாகக் கொண்ட இப்படத்தில் எம். ஜி. ஆருடன் சாவித்திரி, ராஜசுலோசனா, நம்பியார், நாகேஷ், ராகினி, முஸ்தபா முதலியோர் தோன்றுகின்றனர்.

### கடவுள் தந்த பரிசு

'அன்னை' படத்தில் அன்னைக் குரிய அத்தனை லட்சணங்களையும் வடித்துக் காட்டிய பானுமதியைக் கதாநாயகியாகக் கொண்டு ஜெய்குமார் பிக்சர்சார் "கடவுள் தந்த பரிசு" என்ற படத்தை ஆரம்பித்துள்ளனர். பி. ஸ்ரீதர்ராவை இயக்குநராகக் கொண்ட இப்படத்தில் டி. ஆர். மகாலிங்கமும் தோன்றுகிறார். ஈ. வி சரோஜா, அசோகன், தங்கவேல் முதலியோரும் இப்படத்தில் தோன்றுகின்றனர்.

# எமது விமர்சனம்

## பெண் மனம்

சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளில் சிக்குண்ட காதலர்கள் ஒன்று சேர முடியவில்லை. டாக்டர் ரவியின் புகழுக்கும் பெருமைக்கும் இடையூறாக —அவன் காதலியாக இருக்க முடியாமல், அவனை விட்டு



வெகு தூரம் ஓடுகிறாள், தாழ்ந்த ஜாதிக்காரியான — ஆனாலும் பண்பும் அறிவும் குன்றாத அருந்ததி.

தன் இளைய சகோதரியின் மனச் சாந்திக்காக தன் உறவு முறைக்காரியான ஒருவனை ரவி மணக்கிறான். மணமக்கள் ஒன்று கூடும் முதல் நாளிரவிலேயே அருந்ததியின் ஆவி பிரிகிறது. தம்பதிகள் இருவரும் அருந்ததியின் ஆசீர்வாதத்தை நேரில் பெற்ற பின்னரே அருந்ததி தனது சாந்தியைத் தேடிக் கொள்ளுகிறாள்.

திரைக்கதை அமைப்பும், காலத்தின் பிடியில் ஏற்பட்ட சிக்கலும் சுணக்கமும் படத் தயாரிப்பாளர்களை அலைக்கழித்து விட்டது. சில வருடங்களுக்கு முன்னரே வந்திருக்க வேண்டிய வெற்றிப் படம், கால வித்தியாசத்தினால் சற்றுச் சோபை இழந்திருக்கிறது.

டாக்டர் ரவி (நாகேஸ்வர்ராவ்) யின் நண்பனாகவும், அருந்ததி (அஞ்சலிதேவி)யின் பாதுகாவலனாகவும் இரு வேடங்களில் தோன்றுகிறார் டைரக்டர் எஸ். பாலச்சந்தர். பல இடங்களில அவருடைய தனித்



துவ நடிப்புச் சிறப்பு வெளியாகியுள்ளது. வில்லனாக வருகிறார் எம். ஆர். ராதா. வழக்கமான நடிப்புத்தான். மற்றும் சௌகார் ஜானகி, பேபி காஞ்சனா (கட்டபொம்மன்-மீனா), சோக்கிரட்டீஸ் தங்கராஜ் முதலானோரும் ஒன்றாக நடித்துள்ளனர்.

வேதாவின் இசை அவ்வளவு சோபிக்கவில்லை. ஒளி, ஒலி அமைப்புகளும் வாய்க்கவில்லை. சமூகத்தின் சீர்கேடுகளால் விளையும் விபரீதங்களை விளக்கும் நல்ல படம் என்று கூறலாம்.

—பானு

# தமிழகத்தில் அதிக படங்கள் தயாராகின்றன

## தரம் குறைந்தவையே மிகுதியாம்

இந்தியாவில் தமிழ் நாட்டில்தான் அதிகமான படங்கள் தயாராகின்றன. உலக நாடுகளில் படத்தயாரிப்பில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. ஆனால் இதுவரை சர்வதேசப் பரிசைப் பெறும் அளவுக்கு நமது படங்கள் முன்னேற முடியவில்லை.

இந்தியாவில் 13 மொழிப் படங்கள் தயாராகின்றன. உலகில் வேறு எந்த நாடும் இத்தகைய பல்வேறு மொழிப் படங்களைத் தயாரிப்பதில்லை.

இவ்வாறு இந்திய மத்திய செய்தி ஒலிபரப்பு மந்திரி திரு. கோபால் ரெட்டி சென்னையில் நடைபெற்ற படத் தயாரிப்பு ஆலோசனைக் குழுவின் இரண்டாவது கூட்டத்துக்குத் தலைமை தாங்க வந்திருந்தபோது, அவருக்கு பிலிம் வர்த்தக சபையினர் அளித்த விருந்துபசாரத்தில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"கடந்த மூன்று ஆண்டுகளில் கல்கத்தா, பம்பாய் ஆகிய இடங்களை விட சென்னையில் அதிக படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆனால் தரமான படங்கள் தயாரிக்கப்படுவதாயில்லை.

தரமான படங்களைத் தயாரிப்பதில் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுவதுண்டு. குறிப்பாகத் தரத்தைப் பார்த்தால் வசூல் பாதிக்கப்படும். பணவசதி படைத்த தயாரிப்பாளர்களாவது சர்வதேசப் பரிசைத் தட்டிக் கொள்ளத் தகுந்த படங்களைத் தயாரித்தால், வெளிநாடுகளிலாவது அவை திரையிடப்பட வழி உண்டாகும். அந்நிய நாணயம் நமது நாட்டுக்குக் கிடைக்கும். வரும் காலத்தை உத்தேசித்தாவது இம் முயற்சியிலீடுபடுவது நல்லது.

வரி விதிப்பினால் ஏற்படும் சங்கடங்களையிட்டு திரு. ஏ. எல். சீனிவாசன் பேசியதும் திரு. நாகி ரெட்டி நன்றி கூறினார்.

### ஏ. எல். எஸ். மணி ஓசை

கல்யாண குமார் புது முறையில் தோன்றும் ஏ. எல். எஸ். சித்திரமான 'மணி ஓசை' இவ்வாரம் தொடக்கம் என்டர் டெயின்மென்ட் திரைகளுக்கு வருகிறது. எம். ஆர். ராதா, முத்துராமன், நாகையா, நாகேஷ், விஜயகுமாரி, புஷ்பலதா முதலியோர் தோன்றும் இப்படத்தை பி. மாதவன் டைரக்ட் செய்துள்ளார்.

ஒலிப்பதிவாளர் எம். கண்ணன் திறமையாக ஒலிப்பதிவைச் செய்திருக்கிறார்.

(எமது விமர்சனம் அடுத்த வாரம்)



திருக்கோயில் திருஞானவாணி முத்தமிழ் இசை மன்றத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. திருக்குறள் திருமுறைப் போட்டியும் நடைபெற்றது. இப்போட்டியில் பங்கு பற்றிப் பரிசெடுத்த மாணவர்களுக்கு சுகாதாரப் பகுதி அதிபரின் மனைவி திருமதி சு. நாகலிங்கம் பரிசுகளை வழங்கினார். அன்று நடைபெற்ற 'தருமிக்குப் பொற்கிழி அளித்தால்' என்ற ஓரங்க நாடகமும் நடைபெற்றது. நாடகத்தில் நக்கீரர் பாகத்தில் சிறப்பாகத் தோன்றிய செல்வி புண்ணியேஸ்வரி (ஒலிபெருக்கி அருகில் நிற்பவர்)யையும் ஏனைய மாணவிகளையும், பரிசளிப்பையும் படம் காட்டுகிறது.

# அரியணை உரை...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து அரியணை உரைமீது உரை நிகழ்த்திய அனைவரினதும் கவனத்தை மலைநாட்டு மக்களின் பிரச்சினை பெரிதும் கவர்ந்துள்ளது. இப்பிரச்சினை பற்றித் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் கூறிய ஆக்கபூர்வமான கருத்துக்களை மறுத்து உரைப்பதிலேயே ஆளும் கட்சி உறுப்பினர்கள் கவனம் செலுத்தினார்கள். சில ஆளும் கட்சி உறுப்பினர்கள் இப் பிரச்சினையையொட்டிப் பேசுகையில் பொய்யுரையும் புனைந்துரையும் கலந்த வகுப்புவாதத்தைப் பச்சை பச்சையாகக் கக்கினார்கள்.

### பண்பற்ற அரசியல் வாதம்

சீன இந்தியத் தகராறு பற்றிப் பேசியவர்கள் சிலர் பொறுப்பற்ற முறையில் கண்ணியக் குறைவாகப் பிரச்சினையை அணுகியது வருந்தத் தக்கது. குறிப்பாக புளத்சிங்களத் தொகுதி உறுப்பினரும் சமசமாஜக் கட்சி முக்கிய தலைவர்களில் ஒருவரான வருமான திரு. எட்மன்ட் சமரக்கொடி பொறுப்புள்ள அரசியல் வாதியென்ற நிலையை மறந்து பிரச்சினையை அணுகியது வேடிக்கையானதாகும்.

இவரின் பேச்சு, உருவாகி வரும் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கு வேட்டு வைப்பதாக இருக்கிறது என்ற அபிப்பிராயம் நிலவுகிறது. குறிப்பாக மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன இவரின் பேச்சினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிய முடிகிறது. இடதுசாரி ஐக்கிய முன்னணியின் நிலை இதுதானா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

### மூதவையில் இருவர்

மூதவையில் அரியணை உரைமீது நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது உரை நிகழ்த்தியவர்களுள் குறிப்பிடக் கூடியவர்கள் இருவர். ஒருவர், புதிய செனட்டர் திரு நடேசபிள்ளையாகும். இவர் கிடைத்த பதவியைக் காப்பாற்றிக் கொள்ளப் போடும் கூச்சல் இது என்பதைத் தமிழ் பேசும் மக்கள் துலாம்பரமாகத் தெரிந்திருக்கிறார்கள்.

ஆனால் பழைய செனட்டர் திரு. எஸ். நடேசன் அவர்களின் பேச்சு விசித்திரமானதாக உள்ளது. இவர் என்றுமே மக்களுடன் தொடர்பு கொள்பவர் அல்லர். எனவே இவரால் மக்களின் மனநிலையை—எழுச்சியை எங்ஙனம் தெரிந்து கொள்ள அல்லது புரிந்து கொள்ள முடியும்? எனவே தான் வேண்டாதனவற்றை உளறிக் கொட்டியுள்ளார்.

அரியணை உரை மீது நடந்த விவாதத்தில் இன்று நாட்டை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான கருத்தைத் தெரிவித்தவர்கள் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளேயாகும். நாடு பொருள் வளத்தில் பின் தங்கியிருக்கிறது என்றும், வேலையில்லாத் திண்டாட்டம் மலைபோல் உள்ளது என்றும் பலரும் கூறினார்கள். ஆனால் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களும், வேறு ஒருசில தமிழ்ப் பிரதிநிதிகளுமே இன்றைய நிலைக்கு உள்ள பரிகாரத்தை எடுத்துக் கூறினார்கள்.

### இன ஒற்றுமை

இடதுசாரிக் கட்சியினர் பொருளாதார முன்னேற்றத்தில் இனப் பிரச்சினை மறைந்துவிடும் என்று கூறினார்கள். நாடு பொருளாதார வளத்தில் முன்னேற முயலுவதற்கு முதலில் நாட்டில் அமைதியும் ஒற்றுமையும் நிலவ வேண்டும். அதற்கு, பெரும்பான்மை சிறுபான்மை என்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். உரிமை இழந்து இன்னலுறும் தமிழ் பேசும் மக்கள் உரிமை பெற்ற முழு மனிதர்களாக வாழ வழி சமைக்காத வரையில், நாட்டில் எத்தகைய உருப்படியான முன்னேற்றத்தையும் காண முடியாது என்ற தமிழரசாரின் ஆணித்தரமான வாதம் உண்மையேயாகும்.

## தமிழில் தொடர்பு கொள்க

உள்நாட்டு இறைவரித் திணைக் களத்துடன் எல்லாவகையிலும் தமிழில் தொடர்பு கொண்டு பலனடைபவர்கள் பெரும்பாலும் தமிழ் ஆசிரியர்களே. இந்த இலாகா சகலவற்றுக்கும் தமிழிலேயே தம்முடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்று ஒரு தமிழ் ஆசிரியர் கோரிக்கை விடுத்து வெற்றி கண்டுள்ளார். அவருடைய கோரிக்கைக்கு இணங்க, தமிழ் மொழியில் மட்டுமே தொடர்பு கொள்ள வேண்டுமென்று இறைவரித் திணைக்கள அதிகாரி சம்பந்தப்பட்ட சகல ஊழியர்களுக்கும் பணித்துள்ளாராம்.

வேறு ஒரு ஆசிரியர் தமிழில் விண்ணப்பப் பத்திரம் கோரியதற்கு சிங்கள-ஆங்கிலப் படிவம் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாம். அப் படிவத்தைத் திருப்பி அனுப்பி தமிழில் படிவத்தைப் பெற்றுக்கொண்டாராம்.

தமிழ் பேசுவோர் அரசாங்க இலாகாக்களுடன் வைத்துக் கொள்ளும் தொடர்புகளனைத்தையும் தமிழிலேயே செய்ய உறுதியுடன் முயற்சித்தால் வெற்றி பெறலாம்.

## நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அவள் சிரிக்கிறாள்: "உம்மோடு பேசி வெல்ல முடியாது!"

"சாவித்திரி! சாவித்திரி!.." மாளிகையிலிருந்து அவளை யாரோ அழைக்கின்றார்கள்.

"உங்களைக் கூப்பிடுகிறார்கள்!" என்கிறான், அவன்.

அவள் மாளிகையை நோக்கி ஓடுகிறாள்.

—(தொடரும்)

## ஆட்சியாளர்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாணவன் தூக்கிலிடப்பட்ட நாளிலும் அடுத்த இரண்டு வாரங்களிலும் ஆங்கில இராணுவத்தினர் மிலேச்சத்தனமாக மக்களைத் தாக்கினர். பெண்கள், சிறுவர், மதகுருமார் உட்பட ஏறத்தாழ 15 பேரை ஈவிரக்கமின்றிச் சுட்டுக் கொன்றனர்.

(வளரும்)

## 'நாம் முஸ்லிம்'

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

சார்ந்தவன், என்ற பாகுபாடு இருத்தல் கூடாது! இலங்கையிலுள்ள படித்த, தீவிரமான முஸ்லிம்கள் முதலில் அங்கத்தவர்களாக வேண்டும். இதுவே நான் கூறும் யோசனை! "நீங்கள் திருந்தினால் ஒழிய, இறைவன் உங்களைத் திருத்த மாட்டான்" என்ற குர் ஆன் கூறும் போதனையை முஸ்லிம்கள் எல்லோரும் மனதில் கொள்ள வேண்டும்.

## மக்கள் குரல்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எப்படி சைவ சமய ஒழுக்கப்படி வளர விரும்புகின்றார்களோ, அதேபோல், கிறிஸ்தவப் பிள்ளைகளும் விரும்புவார்கள். நமது சைவப் பிள்ளைகள் ஏன் கிறிஸ்தவ பாடசாலைகளில் பயில வேண்டும்? சைவப் பாடசாலைகளுக்கென்ன பஞ்சமா? எல்லாம் எமது ஆங்கில மோகமும் அரசாங்க உத்தியோக மோகமும் எம்மை அப்படி ஆட்டிப் படைத்தன. இதனால் சைவப் பிள்ளைகளின் கல்வி கிறிஸ்தவர்களிடத்து தங்கி இருந்தது என்பது பொய் என்று புலனாகிறது.

சில கொம்யூனிஸ நாஸ்திகர்களின் சுயநலமும் நயவஞ்சகமும் கலந்த செயல்களுக்காகக் கிறிஸ்தவர்களைத் தூற்றுவது வீண் பாவத்தை விலைக்கு வாங்குவதாகும்.

மேலும் இப்பெரியார் நம் இனத்தைப் பெரும் படுகுழிப்பாதாளத்தில் தள்ளிப் பார்த்து மகிழ ஆசைப்படுகின்றார். தமிழர்கள் ஒருமுகமாகவும், ஒற்றுமையாகவும் தமது இழந்த சுதந்திரத்துக்காக, தமது இழந்த வாக்குரிமைக்காக, தமது அடிப்படை உரிமைகளுக்காகப் போராடும் இந்நேரத்தில், இவர் ஏன் பிரித்துவிடப் பார்க்கின்றார்? சைவத்தின் பெயரால் சொல்கிறேன், இது உங்களுக்கு அடுக்காது!

கா. யோகரத்தினம்

## அஞ்ஞான இருளில் ஓர்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையோடு செயல்படுத்துவார்கள். இதனால் செய்யத் தூண்டுபவன் பரம்பொருளாகவும் செயலில் ஈடுபடச் சொல்பவர் முகம்மது நபியாகவும் திகழ்ந்தார்கள். அராபியச் சமூகத்தினிடையே உதித்த அண்ணல் பிரான் ஞாலம் அனைத்துக்கும் ஆணையாளராக—ஒரு புதுச் சமூகத்தை உருவாக்க விளையும் உத்தமனாக — ஒரே ஒரு இறையின் பிரதிநிதியாக மிளிர்ந்தார்கள்.

உலகத்துக்குத் தேவையான, இறை நம்பிக்கை, கல்வி, கலை, கலாச்சாரம், அரசியல், நீதி இன்னோரன்னவற்றையெல்லாம் விளக்கி—அவை செயல்படுத்தப்பட வேண்டிய பாங்கையும் பகுத்துக் காட்டி முழு வெற்றியடைந்தார் கர்ம வீரர் முகம்மது நபி. ஆகவே நபி முகம்மது அவர்கள் ஒரு உலகைக் காண விரும்பியவரே அன்றி அந்த உலகின் ஒரு பகுதியைக் காண விரும்பியவரல்லர். அந்த வரிசையில் நபியென்றால் உலகம், உலகம் என்றால் நபியெனக் கொண்டு போற்றினால் மிகையாகாது.

"நபி முகம்மது உலக மறுமலர்ச்சி வேந்தர்களில் முதல்வர்" — பேர்னாட்ஷா. இக் கருத்தை அனைவரும் சாதி சமய வேறுபாடின்றி மானிட சமூகத்தின் மகான் எனப் போற்றி அவர் காட்டிய வழிதனைப் பற்றுவோம்.

## பிறந்தகத்திற்கு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அனிட்டஸ் ஆகியோர்க்கு நேர்ந்த கதியை நீங்களாகவே தேர்ந்தெடுத்தவரானீர்கள்.

மக்கள் உள்ளம் கொதிக்கும் கொப்பறையாக, எரிக்கும் எரிமலையாயிருக்கும் நேரத்தில் எண்ணெய்யை உற்றுப்பார்க்கிறார்கள். வேண்டாம் விபரீத விளையாட்டு. விட்டுவிடுங்கள்

### உலகம் தூற்றும்

சுயநலத்திற்காகப் பாடுபட்டு இறந்தவனை உலகம் போற்றுவது பதில் தூற்றும். நாட்டுக்காக, தன் மொழிக்காக உயிர் விட்டவனை உலகம் போற்றும். மானத்தை விலை கூறி விற்பவன் மறத் தமிழனல்ல, என்ற பேருண்மையைப் பாருக்குச் சாற்ற இன்றே மூவர்ணக் கொடியின் கீழ் திரள்வோம். தந்தையே! எமக்கு ஓர் வழி காட்டுங்கள். எங்கள் பிறந்தகத்திற்கு வந்திருக்கும் பெரும் நெருக்கடியை நிவர்த்தி செய்ய வழி கூறுங்கள். நீங்கள் கூறும் வழியினைச் கோப்பாய்க் கோமான், மறைந்த மூதூர் முதல்வர், அமரர் திவின் சுடர் விளக்கு அவர்கள் மேல் ஆணையிட்டு அவ் வழி நின்று போராடுவோம். எங்கே தந்தையே உங்கள் விடை?

## சுபீட்சம் தந்தவர்க்கு....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்ளத்தோணிப் பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை ஆதரிப்பதோடு, எங்களுடைய பரிபூரணமான ஒத்துழைப்பையும் கொடுக்க நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம் என்று மீண்டும் இத்தருணத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? இந் நாட்டிலே தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் மக்களைக் கள்ளத்தோணிகள் என்கிறீர்கள். மலைநாட்டைக் கபளிகரம் செய்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். மலைநாடுகளிலே தமிழ் மக்கள் வாழும் பகுதியைப் பார்த்தால் அவர்களுக்கு நன்றாக வாழ வழி வகைகள் இல்லை என்பது புலனாகும். அவர்களுக்குக் கல்வி, வைத்திய வசதிகள் கூடக் கிடையாத பரிதாப நிலையை அங்கு அவதானிக்கலாம். ஆனால் சில வருடங்களுக்கு முன்பு மலைநாட்டில் வேரூன்ற ஆரம்பித்த பெரும்பான்மை மக்கள் இன்று கிளைத்துத் தழைத்துப் பல்கிப் பெருகி விட்டார்கள். இலங்கை இந்தியர் பிரச்சினையைக் கட்சிச் சார்பற்ற தேசியப் பிரச்சினையாகக் கருதப் போவதாகச் சொன்னீர்கள். அப்படியானால் அந்த மக்களின் நலவுரிமைக்காகக் கடந்த பல ஆண்டுகளாகப் பாடுபட்டு உழைத்து வரும் கட்சியின் தலைவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி இப்பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அதை விட்டு இந்தப் பிரச்சினையை இப்பொழுது தீர்ப்போம் என்று சொல்வது உங்களை மட்டுமல்ல, உலக நாடுகளையே ஏமாற்றுகின்ற ஒரு செயலாகும்.

### மூதவையில்

செனெற்றர் ஜி. நல்லையா

இந்நாட்டைச் செல்வமும் செழிப்பும் மிக்க நாடாக்குவதற்காக இந்தியாவிலிருந்து வரவழைத்த இந்தியத் தமிழர்களுடைய பிரச்சினையை முன் வைத்து அரசியல் சூதாட்டம் நடாத்த முனைந்திருக்க மாட்டார்கள். எங்கள் நாட்டிலே அந்த மலைநாட்டுத் தமிழர்கள் எவ்வளவு காலமாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதை நாங்கள் நனகு அறிவோம். வருடாவருடம் சிம்மாசனப் பிரசங்கத்திலோ 'நாங்கள் இப்பிரச்சினையைத் தீர்ப்போம்' என்று கூறப்படுவதைக் காண்கிறோம். ஆனால் இப்பிரச்சினைக்கு இன்னமும் ஒரு முடிவு ஏற்படவில்லை. இதில் உள்ள உண்மை என்னவென்றால் அரசாங்கம் இப்பிரச்சினையைத் தீர்க்க ஒரு போதும் விரும்பவில்லை. இப்பிரச்சினை என்றென்றும் உயிரோடு இருக்க வேண்டுமென்றே அரசாங்கம் விரும்புகிறது. இன்றைய அரசாங்கம் மாத்திரமல்ல; மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி முதலிய அரசியற் கட்சிகளும் இப்பிரச்சினை உயிரோடிருந்தால்தான் இதை வைத்துக் கொண்டு தேர்தல்களிற் பிரசாரம் செய்யலாம் என நினைத்தன. இல்லாவிட்டால் இப்பிரச்சினையைத் தீர்ப்போம் என வாயாற் சொல்வதுடன் மாத்திரம் நின்றுவிடாமல் இதுவரை காலமாக ஏதாவது உருப்படியான நடவடிக்கைகளை எடுக்காமல் இருப்பார்களா? இதனால் மலைநாட்டுத் தமிழர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவர்களுக்கு இந்நாட்டில் வசிப்பதற்கான வசதிகள் எதுவுமில்லை. இருந்த ஒரு சில வசதிகளையும் அரசாங்கம் படிப்படியாக எடுத்து வருகின்றது. இப்பிரச்சினையை வைத்துச் சிங்கள மக்களை ஏமாற்றலாமென்று நினைத்துத்தான் இப்பிரச்சினையைத் தீர்க்காமல் வைத்திருக்கிறார்கள் என்பதை நன்றாக அறியக் கூடியதாக இருக்கின்றது.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரீ,**

194 ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.

# வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்

## இளமையிற் கல்

—ஏ. ஜீ. ஆனந்தன்—

பார்வைக்குக் கண்கள் அவசியம். கண்கள் இல்லையேல் பார்வையும் இல்லை. பார்வையிழந்து, இருளடைந்து, உலகையும் அதன் அழகையும் பார்க்காமலிருக்க எமக்கு முடிவதில்லை. நாம் அதை விரும்புவதுமில்லை. அதனால், கண்களைக் கவனமாகப் பேணுகிறோம்; பாதுகாக்கிறோம்.

கல்வியும் கண்களைப் போன்றதுதான். அது மனதிற்குப் பார்வையைத் தந்து, அறிவை வளர்த்து, ஆற்றலை ஆக்கி, உரத்தை ஊட்டி, உள்ளத்தை உயர்த்தி விடுகின்றது. அதோடல்லாமல், மனிதனை மனிதனாக்கி, நாட்டுக்கு நல்ல பிரசையாக்கி, நலம் பல செய்து, வளம் பல பெருக்கி, வலிமையோடு வாழ வழியும் வழங்குகிறது. கல்வி இல்லாவிடில், அதைக் கல்லாவிடில், அறிவை இழந்து, ஆற்றலை இழந்து, உரத்தை இழந்து, உயர்வை இழந்து, வெறும் வெற்று மனிதராய் வாழவேண்டி ஏற்படும். வாழ்க்கை வளமற்றுப் போகும். முன்னேற்றம் தடைப்படும். முட்டுக்கட்டை ஏற்படும்.

பிறருக்குத் தலை வணங்காமல் வாழவேண்டுமென்றால் நாம் கற்றறிந்திருக்க வேண்டும். கல்வியின் நோக்கம் அதுதான்.

### இரண்டே சொல்

இவற்றை எல்லாம் ஒளவைப் பிராட்டி இரண்டு சொற்களில் சொல்லி விட்டாள். இனிமையாகச் சொல்லி விட்டாள். கல்வியைக் கற்றுக் கொள் என்று மட்டும் அவள் சொல்லவில்லை. அதை எப்பொழுது கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லி விட்டாள். சிறுவர்களாக இருக்கும் போது மனம் தூய்மையாகத் திகழும். அப்பொழுது கற்றுக்கொள் என்று கூறிவிட்டாள்.

இளமையில் இதயம் இதமாக இருக்கிறது. வேறு எண்ணங்களில் எற்றித் திரியாமல் அது புனிதமாக இருக்கிறது; புதுமையோடு இருக்கிறது. கற்பதற்கு ஏற்ற காலம் அதுதான். அப்பொழுது கற்பவை எல்லாம் மனதில் இறுக ஒட்டிக் கொள்ளும்; ஆழமாக அமைந்துவிடும். இளமை மாறி முதுமை பெறும்போது மனதில் மாற்றங்கள் பல ஏற்படுகின்றன. கவலைகள் வந்து கட்டிக்கொள்கின்றன. அப்பொழுது எப்படிக் கற்க முடியும்?

ஒளவைப் பாட்டி இதை நன்கு அறிந்திருந்தாள். கற்றால் இளமையில் கற்க வேண்டும், அல்லது கல்வி கனவிலும் கிட்டாது என்று தெரிந்திருந்தாள். அவள் 'இளமையிற் கல்' என்றதும் அதனால்தான்.


### கல்விக்கு முதலிடம்

இளமையில் தேடும் செல்வங்களுள் கல்விக்கு முதலிடம் தந்தாள் ஒளவை. வேறு எந்தச் செல்வங்களையும் இளமையில் தேடு என்று அவள் சொல்லவில்லை. ஏன் அப்படி? கல்விச் செல்வம் செல்வத்துள் செல்வம். அதை இளமையிற் பெற்றுவிட்டால் மற்றச் செல்வங்கள் எல்லாம் தாமாகவே வந்து சேர்ந்துவிடும் என்றெல்லாம் பாட்டி புரிந்திருந்தாள். அதனாலேயே அப்படிச் சொல்லி விட்டாள்; அதுவும் இளைஞர்களின் முதல் கடமை என்று சொல்லிவிட்டாள். அதைச் செய்தால் போதும். அதைச் செய்து முடித்த பிறகு வேறு தேவைகளைத் தீர்த்துக் கொள்ளுவோம். அவை தாமாகவே தீர்ந்து போகும்.

## கவனிக்கவும்

பேச்சுப் போட்டி பற்றிய விபரங்களை இப் பகுதியில் விரைவில் எதிர்பார்க்கவும்.

—பேச்சுப் போட்டி ஆசிரியர்.



'என்ன காணும்? 'ஐம்' மென்று புறப்பட்டு விட்டீரே! லைசென்ஸ் உண்டோ உம்மிடம்?'

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை ''வளர்மதி''யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து ''வளர்மதி'' C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 6

பெயர் ____________________

பாடசாலை ____________________

விலாசம் ____________________

____________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் — கையொப்பம்

## பெரியாரின் பெயரென்ன?

—தாமரைச் செல்வி—

ஈழத்தின் சுதந்திரத்திற்காக உழைத்த ஆறு எழுத்துக்களைக் கொண்ட ஒரு பெரியாரின் பெயர் இது- முதலாம் எழுத்து இரவியில் உண்டு, ஞாயிறில் இல்லை. இரண்டாம் எழுத்து ஆராதனையில் உண்டு, அன்பில் இல்லை. மூன்றும் எழுத்து மரையில் உண்டு, மானில் இல்லை. நான்காம் எழுத்து நாவலில் உண்டு, சிறுகதையில் இல்லை. ஐந்தாம் எழுத்து தமிழில் உண்டு, சிங்களத்தில் இல்லை. ஆறும் எழுத்து என்பில் உண்டு, தசையில் இல்லை. பெரியாரின் பெயரை விளம்புவீரே!

[illegible]

எனது கிராமம்

## சுழிபுரம்

— இ. குமாரசூரியர் —

எனது கிராமம் சுழிபுரம். இது யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு காத தூரத்தில் யாழ்ப்பாணம்—காரை நகர் பிரதான வீதியில் அமைந்துள்ளது. முற்காலத்தில் பாரத நாட்டில் இருந்து சோழர்கள் நமது ஈழ நாட்டுக்கு வந்தனர். அவர்கள் இறங்கிய இடம் இக் கிராமமே யாகும். சோழர்கள் வந்து தங்கிய இடமாகையால் இதற்கு சோழபுரம் என்ற பெயர் உண்டாயிற்று. சோழபுரம் என்ற பெயரே காலக் கிரமத்தில் மருவி சுழிபுரம் என்று ஆயிற்று. இக்கிராமத்தின் வடக்கெல்லையாக திருவடிநிலை என்று அழைக்கப்படும் அழகிய கடற்கரை உண்டு. இவ்விடத்திற்குத் தினந்தோறும் ஏராளமானோர் வந்து தரிசித்துச் செல்கின்றனர்.

எனது கிராமம் வட்டுக்கோட்டைத் தொகுதியில் இருக்கின்றது. நமது பிரதிநிதியாக பாராளுமன்றத்தில் இருப்பவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆவர். இவர் உடல், பொருள், அனைத்தையும் தமிழ் பேசும் மக்களின் நலனுக்காக அர்ப்பணித்த இளம் வீரன் ஆகையால் இவரை தமிழரசுத் தளபதி என எல்லோரும் அழைக்கின்றனர்.

எனது கிராமத்தில் ஏறக்குறைய ஆறுயிரம் மக்கள் வசிக்கின்றனர். இவர்களில் தொண்ணூற்றைன்பது வீதத்துக்கும் மேலானோர் சைவர்கள். ஆகையால் இங்கே பல சைவக் கோவில்கள் இருக்கின்றன அவற்றுள் பாடல் பெற்ற பறுளாய் விநாயகர் ஆலயமும் ஒன்றாகும்.

எனது கிராமத்தில் உள்ள பிள்ளைகள் கல்வி பயில்வதற்காக, உயர்தரக் கல்லூரியாகிய விக்ரோறியாக் கல்லூரியும், வேறு நான்கு தமிழ்ப் பாடசாலைகளும் இருக்கின்றன.

இங்குள்ள மக்கள் கமக்காரர்கள், வைத்தியர்கள், நுண் கலைஞர்கள், ஆசிரியர்கள், வியாபாரிகள் என பலதிறப்பட்ட துறைகளில் ஈடுபட்டுத் தமது வாழ்க்கையை நடத்துகின்றனர். இங்குள்ள கமக்காரர்கள் தமது நெற்கழனிகளில், ஆவணி, புரட்டாதி மாதங்களில் நெல்லை விதைத்து, தை, மாசி மாதங்களில் அறுவடை செய்கின்றார்கள். தோட்ட நிலங்களில், மிளகாய், கத்தரி, பூசினி, பாகல், வெண்டி, வெங்காயம், புகையிலை முதலியவற்றைச் செய்கின்றார்கள் விளை பொருள்களை விற்பதற்கு எனது கிராமத்தில் ஒரு சந்தையும் இருக்கின்றது.

கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டிலும் கடும் புலி வாழும் காடு நன்று. எனவே கொடுங்கோலாட்சியில் உத்தியோகம் செய்வதிலும் தமிழர்கள் தன்மானத்துடன் வியர்வை சிந்திக் கமத்தொழிலைச் செய்து வாழ்வதற்கு எனது கிராமம் ஏற்றதாக இருக்கின்றது. இதனால் நான் மிகவும் பெருமை அடைகிறேன்.

## எங்கள் கோரிக்கைகள்

—எஸ். அப்துல் கபூர்—

எங்களைக் கண்டால் படையும் நடுங்கும் என்பார்கள். பெரும் காடுகளில் எங்கள் இனம் சுதந்திரமாக வாழ்கிறது. அந்த சுதந்திரம் நிலைத்திருக்க வேண்டுமென்று ஏக இறைவனை வேண்டிக் கொள்கிறேன். ஆனால் சில சமயங்களில் எங்கள் உயிருக்கே நீங்கள் எமனாக ஆகி விடுகிறீர்கள்! நாங்கள் கடித்தால் உங்கள் உடலில் விஷம் ஏறி உயிர் போய்விடும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்! அது உண்மைதான். இருந்தாலும் குளிர்ப் பிரதேசங்களில் வாழும் எங்கள் இனத்தவர் சிலர் உங்களைக் கடித்தால் அது விஷமில்லையென்றுமட்டும் கூற விரும்புகிறேன். ஆனால் உஷ்ணமான பிரதேசங்களில் வாழும் எங்கள் இனம் கடித்தால் அது விஷம்தான் என்றாலும் நீங்கள் எங்களுக்குத் தீங்கு செய்யாமல், நாங்கள் உங்களுக்கு எப்போதும் தீங்கு செய்ய மாட்டோம்.

### எங்களை வைத்தா உழைக்கிறீர்கள்?

எங்கள் இனத்தவரைப் பிடித்துச் சிரமம் இல்லாமல் சினிமாவில் நடிக்கச் செய்து விடுகிறார்கள். இப்படிச் சினிமாவில் நடிக்கும் எங்கள் இனத்தவருக்குத் தேவையான உணவு கொடுக்கிறார்களா, இல்லையா என்பதைப் பற்றி அறிய ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும். சிலர் நாங்கள் இருக்கும் காட்டுக்குச் சென்று எங்களைக் கொன்றுவிட்டு, எங்கள் தோலைக் கொண்டு சென்று வீதிகளில் விரித்து வைத்து விற்பனை செய்கிறார்கள். இன்னும் பலர் உழைக்காமல் எங்கள் இனத்தவரைப் பிடித்து வந்து பல்லைப் பிடுங்கி விட்டுப் பெரும் கூட்டத்தைக் கூட்டி மகுடியை எடுத்து ஊதி, எங்கள் இனத்தவர்களை ஆட்டாத ஆட்டமெல்லாம் ஆட்டி விட்டு சுற்றியிருக்கும் கூட்டத்தை நோக்கிப் பல்லைக்காட்டிக் காசு கேட்கிறார்கள். இதைக் கொண்டு சொகுசாக இவர்கள் வாழ்கிறார்கள். இப்படி அநேகரிடம் எங்கள் இனம் சிக்கித் தவிக்கிறது. இனி இவர்கள் எங்கள் இனத்தவர் சாகும் மட்டும் விடவே மாட்டார்கள்.

### அழிக்காதீர்!

நாங்கள் ரொம்ப நேர்மையுள்ளவர்கள் என்பது உங்களுக்கு தெரியுமா? அடர்ந்த காடுகளைத் தீ வைத்துக் கொளுத்தி விடாதீர்கள்! ஏன் என்றால் இது போன்ற இடங்களில் தான் எங்கள் இனம் பயமில்லாமல் வாழ்கிறது. அதையும் அழிக்க எண்ணாதீர்கள்!.

எங்கள் இனத்தை வைத்துக் கொண்டு, உழைக்காமல் உண்ணுகிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் இவ்வுலகில். இப்படிப்பட்டவர்களைக் கண்டு பிடித்து ஐக்கிய நாடுகள் சபை தகுந்த தண்டனை கொடுக்க வேண்டும்.

அடிமைப்பட்டிருக்கும் எங்கள் இனங்களுக்கு சுதந்திரம் கொடுக்க முன்வர வேண்டும். இந்த உலகில் நாங்கள் பிறந்தது அடிமையாக வாழ்வதற்கு அல்ல என்பதையும் நீங்கள் உடனே உணர்ந்து கொள்ள வேண்டும். உணர மறுத்தால் நீங்கள் வசிக்கும் இடங்களுக்கு நாங்கள் அணிவகுத்து வருவோம் என்பது மட்டும் சற்றும் ஐயமில்லை.

# கழகச் செய்திகள்

## 'சைவமும் தமிழும் தழைத்தோங்க இறைவழிதொண்டாற்றியபெரியார்'

### சுவாமி விபுலாநந்தர்விழாவில் அன்னாருக்குப் பாராட்டு

"ஸ்ரீ ஈழக்கிழங்கை மக்கள் மத்தியில் சமய, கல்வித் துறைகளில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர் சுவாமி விபுலாநந்தர். அவர் ஓர் நடமாடும் அறிவுக் களஞ்சியமாகத் திகழ்ந்தார். அவரது சிறந்த பண்புகள் நமக்கு வழி காட்டியாக அமைதல்வேண்டும்."

இவ்வாறு, மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற 'யாழ்-நூல்' ஆசிரியரான சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த விழாவிற்குத் தலைமை வகித்த கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பகுதி அதிபர் டாக்டர் க. சிவஞானசுந்தரம், தமது தலைமையுரையில் குறிப்பிட்டார். இவ்விழா மட்டக்களப்பு நகரமண்டபத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பெற்றது.

விழாவின் முதல் நிகழ்ச்சியாக உரையரங்கம் நடைபெற்றது. இவ்வுரையரங்கத்தில், முன்னாள் ஆசிரிய கலாசாலைப் பேராசிரியரான பண்டிதர் செ. பூபாலபிள்ளை, மட்டக்களப்பு விபுலாநந்த கழகப் பொதுச் செயலாளர் வித்துவான் பண்டிதர் வி. சீ. கந்தையா, மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. பி. வி. கணபதிப்பிள்ளை ஆகியோர் பங்குபற்றினர்.

இரண்டாவது நிகழ்ச்சியான கவியரங்கத்தில் திமிலைத்துமிலன், இராஜபாரதி, மு. சோமசுந்தரம் பிள்ளை ஆகியோர் பங்குபற்றினர்.

இறுதியாக நடைபெற்ற கலையரங்கத்தில், மட்டக்களப்பு சிறுவர் கலைக் கழகத்தினரின் இசை, நடன நிகழ்ச்சிகளும், 'சரிந்தது கொற்றம்!' என்னும் 'நடமாடி' குழுவினரின் குட்டி நாடகமும் இடம் பெற்றன.

எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. அன்புமணி வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. நவம் நன்றி தெரிவித்துப் பேசினார்.

#### காரைதீவில்

விபுலாநந்தர் விழா சென்ற 21-7-63 ஞாயிற்றுக் கிழமை சுவாமி அவதரித்த ஊராகிய மட்டக்களப்புக் காரைதீவிலே வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து பி. ப. 3 மணியளவில் காரைதீவு சாரதியர் சங்கஆதரவில் நடராஜானந்தாஜீ தலைமையில் சுவாமியின் திருவுருவப் படத்துடன் புறப்பட்ட மோட்டார் வண்டி ஊர்வலம் பி. ப. 5 மணியளவில் ஆலயத்தை வந்தடைந்தது.

பி. ப. 5-30 மணியளவில் திரு. தனபாலசிங்கம் தலைமையில் பொதுக் கூட்டம் ஆரம்பமாகியது. இ. விநாயக மூர்த்தி அவர்களின் வரவேற்புரையின் பின் தலைவர் அவர்கள் பேசுகையில் "தம் சமயத்தை வளர்க்கும் போதும் பிற சமயத்தவர்களைப் புறக்கணித்தல் கூடாது என்ற இராமகிருஷ்ணரின் கொள்கையைக் கடைப்பிடித்தவர்களுள் சுவாமி அவர்கள் முதன்மையானவர்" எனக் குறிப்பிட்டார்.

அடுத்ததாகப் பேசிய நீலாவணன் "சுவாமி விபுலாநந்தர் அவர்கள் கருவிலேயே உறைந்த கவிஞனாக அவதரித்தார்" என்று கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில், சுவாமி அவர்கள் விட்டுச் சென்றவைகளை வருங்காலத்தில் நிறைவேற்றி வைக்கக் கூடியவர்கள் காரை தீவிலேயே இருக்கிறார்கள் என்றும், சுவாமி அவர்கள் இயற்றிய யாழ் நூலைக் குறைந்த விலையில், படித்தவரும் பாமரரும் பெறக்கூடிய வகையில் அச்சிட்டு வெளியிடல் வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பின்னர் பேசிய திருமதி பவளமலர் சங்கர் அவர்கள் பேசுகையில், சுவாமி விபுலாநந்தர் ஒரு விஞ்ஞான மேதை என்றும், கத்தோலிக்க சமயம் ஓங்கி வரும் காலத்தில் சுவாமி அவர்கள் அவதரித்து சமயத்துறையிலும் கல்வித்துறையிலும் ஒரு பெரும் மாற்றத்தை உண்டு பண்ணினார் என்றும் கூறினார்.

சுவாமி நடராஜானந்தாஜீ, பண்டிதர் க. சந்திரசேகரி, வள்ளுவர் நினைவு நாட் பரீட்சையில் பரிசு பெற்ற மாணவ மாணவியரதும் பேச்சுக்கள் இடம் பெற்றன. திருமதி தனபாலசிங்கம் அவர்கள் வள்ளுவர் நினைவு நாட் பரீட்சையிற் சித்தியடைந்தவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

பின்னர் காரைதீவு பெண்கள் இல்லம் மாணவியர்களதும், ஆர். குழந்தைவேல் அவர்களது பாடல்களும், மட்டுநகர் ஜீவம் சகோதரர்களது இன்னிசைக் கச்சேரியும் இடம்பெற்றன. இறுதியில் மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரது "வான் புகழ் வள்ளுவன்" என்ற வில்லுப் பாட்டு நிகழ்ச்சியுடன் இரவு 11-15 மணியளவில் விழா இனிது நிறைவெய்தியது.

#### புன்னாலைக்கட்டுவனில் விளையாட்டுப் போட்டி

புன்னாலைக்கட்டுவன் ஆங்கிலப் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் 18-7-63 வியாழக்கிழமையன்று நடைபெற்றன. பிரதம விருந்தினராக திரு. ஏ. அருளையா, கோப்பாய் வட்டார வித்தியாதரிசி அவர்கள் கலந்து கொண்டார்கள்.

இவ்வாண்டுப் போட்டியில் பச்சை இல்லமே வெற்றி பெற்றது. தமது பிரிவுகளில் முதன்மையாக வெற்றிபெற்ற விளையாட்டு வீரரின் விபரம் பின்வருமாறு:

அதி மேற்பிரிவு வெற்றி வீரர்: மு. கனகரத்தினம், இ. துரைசிங்கம். மேற்பிரிவு வெற்றி வீரர்: ச. மகாலிங்கம், சி. இராஜேஸ்வரி. மத்திய பிரிவு வெற்றிவீரர்: மு. பத்மநாதன், செ. கருணாதேவி. கீழ்ப் பிரிவு வெற்றி வீரர்: க. முருகையா.

## மத மாச்சரியங்களுக்கு . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நாகம் ஏறி நடுக் கடலுள்
துயின்ற நாராயணனே"

என்ற திருவாய் மொழியும் இறைவன் எல்லாமாய் நிற்கும் தன்மையை

ஞாலமே விசும்பே நலம்
தீமையே
காலமே கருத்தே
கருத்தால் தொழும்
சீலமே"

என்ற அப்பர் மொழியும்

வானாகி மண்ணாகி
வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி
உண்மையுமாய்
இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென்ற
வரவ ரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்
சொல்லி வாழ்த்துவேனே"

என்ற மணிவாசகர் மொழியும் நன்கு தெரிவிக்கின்றன.

### சர்வமத சமரச ஞானி

இனி பாரதியின் சமயம் என்ன என்பதைப் பார்ப்போம். அவர் ஒரு இந்து என்று பலரும் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால் அவர் ஒரு இந்துவல்ல, இந்துவல்லாத வேறு சமயவாதியுமல்ல. அவர் சமய வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்ட சர்வமத சமரச ஞானி.

பூமியிலே கண்டம் ஐந்து
மதங்கள் கோடி
புத்தமதம் சமணமதம்
பார்ஸி மார்க்கம்
சாமி யென பேசு பதம்
போற்றும் மார்க்கம்
சநாதனமாம் ஹிந்து
மதம் இஸ்லாம் யூதம்
நாமமுயர் சீனத்துத் தாவு
மார்க்கம்
நல்ல கண் பூசி மதம்
முதலாம் பார் மேல்
யாமறிந்த மதங்கள் பல
உளவாம் அன்றே
யாவினுக்கும் உட்புதைந்த
கருத்திங் கொன்றே,'

என்று பாரதி கூறியது உற்று நோக்கத்தக்கது. பாரதியை இந்நிலைக்குக் கொண்டு வந்தது அவரின் வேதாந்தப் பயிற்சிதான். வேதாந்தத்திற்கு முதல் நூல் உபநிஷத்து என்றும் அதனைப் பூரணமாக அறியாதவன் இந்தியப் பண்பாட்டை அறிந்ததாகச் சொல்லிக் கொள்ள முடியாது என்றும் சங்கத விற்பனர் கூறுவர். பாரதி உபநிஷத்துக்களில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார். இந் நம்பிக்கைதான் அவரை சர்வமத சமரச ஞானியாக்கியது.

### வேதாந்தமேயாகும்

சுவாமி விவேகாநந்தர் பூர்வ சங்கத நூல்களைப் படியாது திருமணம் கூடாதென்று சொல்லியது தப்பிதம் என்று பாரதி எழுதியிருப்பதே அவரின் வேதாந்தப் பயிற்சிக்கு நல்ல உதாரணமாகும். "உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்ச மென்பதில்லையே" என்று பாரதி பாடினார். இந்த அச்சமின்மையைத் தந்தது இந்தியப் பண்பாட்டுக்கு ஆணிவேரான வேதாந்தமேயாகும்.

### அரவிந்தரின் தொடர்பு

அடுத்து அரவிந்தரின் தொடர்பும் பாரதியின் ஞானப் பசிக்கு பெரு விருந்தாய் அமைந்தது எனலாம். பாரதியார், வ. வெ. சுப்பிரமணிய அய்யர் ஆகியோர் அரவிந்தர் இருப்பிடம் சென்று இரவு வெகு நேரமாக வேதாந்த விசாரணைகளில் ஈடுபட்டிருப்பது வழக்கமென்று தெரியக் கிடக்கிறது. ஆனால் பாரதியார் அரவிந்தரைப் போற்றிப் பாடாததின் காரணம் தெரியவில்லை.

பாரதியின் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் வ. ரா. அவர்கள், அரவிந்தர் தீவிர தேசிய வாதத்திலிருந்து சடுதியாக விலகி யோகத்தில் ஈடுபட்டதைப் பாரதி ஆதரிக்கவில்லை என்பர். பாரதி அரவிந்தரைப் பற்றிப் பேசாததற்கு இதுதான் காரணமாய் இருக்குமோ என்று எண்ண வேண்டியுள்ளது. ஆனால் அரவிந்தரின் தொடர்பு ஏற்பட்ட பின் பாரதி ஒரு ஞானிபோன்றும் சீவன் முக்தர் போன்றும் காட்சி அளித்தார் என்று அறியக் கிடப்பதால், அரவிந்தர் எவ்வளவு தூரம் பாரதியைக் கவர்ந்துள்ளார் என்பதை ஒருவாறு ஊகித்தறியலாம். ஆனால் யாழ்ப்பாணத்துச் சாமி, கோவிந்தசாமி என்று பலர் பாரதியின் ஞானப் பசிக்கு விருந்திட்டுள்ளனர் என்றும் அறியக் கிடக்கிறது.

### தத்துவ ஞானி

பாரதியின் ஞான குரு இன்னார் என்று துணிந்து கூறுவது இயலாது என்பர் சிலர். ஞான குரு யார் என்று தெரியாவிட்டாலும் பாரதி தத்துவஞானி என்பதை மறுப்பதற்கில்லை. மேலும் தத்துவ ஞானமே முக்கியமானதால் அங்கு பத்திக்கு இடமில்லை என்பதற்கில்லை. தத்துவ ஞானம் வேறு சமயம் வேறு என்றாலும் அவ்விரண்டிற்கும் மூல வேர் ஒன்றானதால் "உணர்வு" ஒன்றாகவே இருக்கும். அதனாலேதான் பத்தனாகக் காட்சியளிக்கும்கும் பாரதி தத்துவ ஞான நிலையில் நின்று பழைய வேதாந்தத்தைப் புதிய தேசியத்துடன் கலந்து பாடினார். இதற்கு முக்கிய காரணம் நாட்டிற்கு தைரியம், வீரம், தியாகம் என்பனவற்றைத் தேடித்தரவேயாம்.

### பட்டிருப்பு அரசினர் மாவித்தியாலய பழையமாணவர் மன்றம்

பட்டிருப்பு அரசினர் மாவித்தியாலய பழைய மாணவர் மன்ற நிர்வாக சபைக் கூட்டம் 14-7-63 பிற்பகல் மூன்று மணியளவில் மா வித்தியாலய மண்டபத்தில் மன்ற உதவித் தலைவர் செல்வன் இ. அண்ணாமலை அவர்கள் தலைமையிலும் செல்வன் வே. வல்லிபுரம் அவர்களின் தேவாரத்துடனும் ஆரம்பமானது.

சென்ற நிர்வாக சபைக் கூட்ட அறிக்கை செயலாளர் செல்வன் பொ. செல்வரெத்தினம் அவர்களால் வாசிக்கப்பட்டது. கூட்ட அறிக்கை சரியென செல்வன் சு. பத்மநாதன் முன்மொழிய, திரு. மா விஸ்வநாதன் பின் மொழிந்தார்.

பட்டிருப்பு அரசினர் மா வித்தியாலயத்தில் 3-8-63ல் நடைபெறவிருக்கும் இல்ல விளையாட்டுப் போட்டியில் திறமையாக வரும் இல்லத்துக்கு வெற்றிக் கிண்ணம் ஒன்று பரிசாகக் கொடுப்பதென்றும், இப்பாடசாலைக்குரிய விளையாட்டு மைதானத்தைத் திருத்திக் கொடுப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. திருமதி தெய்வநாதன் அவர்களின் தேவாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

### இலங்கை அருந்ததிய வாலிபர் முன்னேற்றச் சங்கம்

சென்ற 17-7-63 புதன் கிழமை மாலை 7 மணிக்கு தலைமைச் சங்கப் பணிமனையில் இலங்கை அருந்ததிய வாலிபர் முன்னேற்றச் சங்கத்தின் முக்கிய செயற்குழுக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. எஸ். கிருஷ்ணசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் திருவாளர்கள்: ஆர். சுப்பிரமணியம், க. மனோகரன், வி. சந்தனராஜா, ஏ. ஈ. மூர்த்தி, கே. பொன்னம்பலம், கே. எஸ். கணபதி, ப. கடக்கரை, எம். எஸ். பெருமாள் ஆகியோர் பேசியபின், முக்கிய தீர்மானங்களும் முடிவுகளும் எடுக்கப்பட்டன.

### இரங்கற் கூட்டம்

காலம் சென்ற சமூக சேவையாளர் திரு. ஓ. ஆ. சாமி அவர்களுக்கான இரங்கற் கூட்டம் 13-7-63ம் நாள் சனிக்கிழமை மாலை 5 மணியளவில் அகில இலங்கை அருந்ததியர் சங்கப்பொதுச் செயலாளர் திரு. கு. யா. திராவிடக் கழல் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டு சங்கத் தலைவர் திரு. சே. சுந்தரராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அருந்ததிய (தமிழ்) மக்களிடையே வந்துதித்த பேரொளியும், அம் மக்களிடையே முகிழ்ந்தெழுந்த விடிவெள்ளியும் மறுமலர்ச்சித் தந்தையுமான திரு. ஓ. ஆ. மா. சாமி அவர்களின் அளப்பெரிய சேவைகளைப் பலரும் பாராட்டிப் பேசினர்.

### வலி-கிழக்கு ஆசிரிய சங்கப் புது நிர்வாகிகள்

வலி-கிழக்கு ஆசிரிய சங்கத்தின் 13வது வருடாந்தக் கூட்டம் 16-7-63 அன்று, உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. பின் வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. அ. வைத்திலிங்கம், உப தலைவர்: திரு. க. இராசரத்தினம், செயலாளர்: திரு. க. வை. தனேஸ்வரன், உப செயலாளர்: திரு. க. சிவசுப்பிரமணியம், பொருளாளர்: திரு. வ. சுந்தரலிங்கம், நிர்வாக உறுப்பினர்கள்: திருவாளர்கள்: வ. மகாலிங்கம், ஆ. ச. குமாரசாமி, மு. ராசா, எஸ். மகிழ்ராசா, ரி. சிவனேசபிள்ளை, எஸ். நடராசா, சி. சிவசம்புநாதன், க. கணவதிப்பிள்ளை, வ. இளையதம்பி, இ. யோகீஸ்வரன், ஏ. சி. செல்வராசா, எஸ். கந்தசாமி, க. அருணாசலம், அ. தருமலிங்கம், க. தாமோதரம்பிள்ளை, பீ. தம்பையா.

கணக்குப் பரிசோதகராகத் திரு. வீ. சண்முகம் தெரிவுசெய்யப்பட்டார்.

### அம்பதண்டகம சமூக சீர்திருத்த மன்றம்

அம்பதண்டகம சமூக சீர்திருத்த மன்றத்தின் முதலாவது பொதுக் குழுக் கூட்டம் 20-7-63 சனிக்கிழமை இரவு 8 மணிக்கு மன்றத் தலைவர் திரு. ஆ. நடராசா குத்துவிளக்கு ஏற்றி வைத்ததுடன், ஆரம்பமாகியது.

பொதுக்குழுக் கூட்டத்தில் மன்றத்தின் பல கிளைகளிலிருந்தும் 27 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மன்றத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. ஆ. நடராசா, பொதுச் செயலாளர்: திரு. இரா—லிங்கன், துணைச் செயலாளர்: திரு. ப. முத்தையா, பொருளாளர்: திரு. ஆ. நடராசா.

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

## சென்ட்ரல் ராணி ராஜேஸ்வரா ஜோதி லிபர்ட்டி

(மருதானை) (யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு) (திருகோணமலை) (பதுளை)

ஆகிய திரைகளில்!

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்

# மணி ஓசை

நடிகவேள் எம். ஆர். ராதா—ஆர். விஜயகுமாரி—கல்யாண்குமார்
சி. எஸ். புஷ்பலதா—ஆர். முத்துராமன்

ஆகியோர் நடித்தது.


மனித உள்ளத்தின் மாண்பை வெள்ளித் திரையில் தெள்ளென எடுத்தியம்பும் தூய தமிழ்த் திரை ஓவியம்!

டைரக்ஷன் : பி. மாதவன்

2வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) தாஜ்மஹால் (மாத்தளை) ரீகல் (நுவரெலியா)
இம்பீரியல் (மட்டக்களப்பு) நெல்சன் (திருகோணமலை) ரீகல் (கம்பளை) இம்பீரியல் (இரத்தினபுரி)

ஏ. நாகேஸ்வரராவ்—எம். ஆர். ராதா
எஸ். பாலச்சந்தர்—ஏ. கருணாநிதி
அஞ்சலிதேவி —சௌகார் ஜானகி
நடித்த




பின்னணி : டி. எம். சௌந்தரராஜன், ஏ. எம். ராஜா, சுசிலா, ஜமுனாராணி, ஜிக்கி

ஜனத் திரள் நிறைந்த
4வது வாரம்!

கெயிட்டி
(கொட்டாஞ்சேனை)

## மதுரை வீரன்

(புத்தம் புதிய கொப்பி)

எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, பானுமதி, (காலஞ் சென்ற) என். எஸ். கிருஷ்ணன், மதுரம்
இவர்களுடன்.

எதிர்பாருங்கள்!

ஜெமினி கணேசன்
சாவித்திரி, குமாரி கமலா
தோன்றும்

## கொஞ்சும் சலங்கை

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பதுளை)
மொடர்ன் (பண்டாரவளை) ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

உள்ளத்தைத் தொடும் உருக்கமான குடும்பப் படம்! உணர்ச்சியின் விளிம்பைத் தொடும் சம்பவங்கள்! பானுமதியின் சீரிய நடிப்பைக் காட்டும் சித்திரம்!

சென்னையில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய, ஜனாதிபதியின் பரிசு பெற்ற படம்.

பானுமதி அன்னையில் நடித்ததற்காக 1962ம் ஆண்டு சிறந்த நடிகை எனப் பாராட்டுப் பெற்றவர்.



பானுமதி—எஸ். வி. ரங்கராவ்
சௌகார் ஜானகி—சந்திரபாபு
ஆர். பாலசுப்பிரமணியம் — பாக்கியம்
மற்றும் பலர் நடித்த



# அன்னை

வசனம்: கோபாலகிருஷ்ணன்

டைரக்ஷன்: கிருஷ்ணன்-பஞ்சு


இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் ஒகஸ்ட் மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.